Not for sale

மார்ச் - ஏப்ரல் 2019

தமிழாக்கம்

# The Herald
## of Christ's Kingdom



## தப்பிதங்கள்

கடைசி நாள் • திரளான கூட்டம் • இரக்கம்

மூன்று கண்ணோட்டங்களிலிருந்து தேவனுடைய ஞானம்

ஆவிக்குரிய கொலை • எந்த குற்றம் மோசமானது?

தப்பிதங்கள்
# ஆதியிலே



நாம் மாம்சத்தில் இருக்கும்போது, புது சிருஷ்டிகளாக நாம் வளர்ச்சி அடைந்துக் கொண்டிருந்தாலும், தவறுகளுக்கு உட்பட்டுள்ளோம். சில நேரங்களில் இது எளிய தவறுகளாகவும், சில நேரங்களில் இது கவனிக்கவேண்டிய மிக பெரிய தவறாகவும் உள்ளது. நம்முடைய நடைகளில் எச்சரிப்போடும், வாழ்க்கையை சுயபரிசோதனையோடும் கவனத்தோடிருந்தால், நம்மை சுத்திகரித்துக்கொள்ளும் சந்தர்ப்பங்களை நாம் பெறலாம்.

லேவியராகமத்தின் பிரமாணங்களில், மூன்று அடிப்படையான பலிகள் இருந்தன தகன பலிகள், சமாதான பலிகள் மற்றும் பாவநிவாரண பலிகள். மூன்றாவது பலிகளில், குறிப்பிட்ட குற்றங்களுக்கு, குற்றநிவாரண பலிகள் என்று அழைக்கப்படும் விசேஷித்த பலிகள் செலுத்தப்பட்டது. இதில் குற்றவாளி, பரிந்துரைக்கப்பட்டதை வழங்குவதோடு மட்டும் அல்லாது, சில நேரங்களில் அதிக செலவுகள் செய்யவும், மனம் வருந்துதலை வெளிப்படுத்தவும், அதோடு கூட பண இழப்பீடுகளையும், கூடுதலாக 20% கொடுத்து தீரவேண்டியதாக இருந்தது. இது மனம் திரும்பிய குற்றவாளி, குற்றத்தின் வலிமையை அறியவும், தேவனுக்கு முன்பாக ஒரு புதிய நிலைக்கு மீண்டும் திரும்புவதற்கான மதிப்பையும் மதித்துணர உதவுகிறது.

அவ்வாறே நம்முடைய மீறுதல்களை நாம் தெளிவாய் கருத்தில் கொண்டு, அம்மீறுதல்களினால் மற்றவர்களுக்கு நேரிட்ட சுமைகளுக்காய் நன்மை செய்து உண்மையான வருந்துதலை ஊர்ஜிதப்படுத்தவேண்டும்.

நினைவுக்கூருதலின் காலம் நெருங்கி வருவதால், இயேசுவின் ஊழியத்தின் "கடைசி நாள்" என்பதே நம்முடைய முதல் கட்டுரையாகும். இதில் அவருடைய மரணத்தின் அடையாளங்களும் அடங்கும். இந்த காலத்தில் விசேஷமாக, வரக்கூடிய வருடத்தில், தனிப்பட்ட குற்றங்களை எப்படி தவிர்ப்பது, என்ற காரியத்தை குறித்து பார்ப்பது பொருத்தமாக காணப்படுகிறது.

"திரள் கூட்டம் " என்ற நம்முடைய இரண்டாம் கட்டுரை, குற்றங்களை தவிர்ப்பதற்கு கவனம் செலுத்தாத ஒரு வகுப்பாரை நமக்கு நினைவூட்டுகிறது. மேலும், இவர்களுக்கும் தேவனுடைய இரக்கத்தினாலும், கிருபையினாலும், இத்தகையை அருமையான பரிசு வழங்கப்படுகிறது.

"இரக்கம்" என்ற நம்முடைய மூன்றாம் கட்டுரை, இரக்கத்தின் அற்புதமான நன்மைகளை நமக்கு நினைவூட்டுகிறது. இது பி.பி.ஐ பணியில் மிகவும் அர்ப்பணித்துள்ள தொழிலாளர்களில் ஒருவரான மைக்கேல் நெகோராவின் பாடத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரு கட்டுரையாகும்.

நம்முடைய நான்காம் கட்டுரை, பரலோக ஞானத்தின் மூன்று கோணங்களை ஆழமாக ஒப்பிடுகிறது. நீதிமொழிகள், பிரசங்கி, யோபு ஆகியோரிடமிருந்து வரும் ஞானத்தைப் பற்றிய பாடங்களின் ஆழமான பார்வையை கொண்டுள்ளது. நம்முடைய ஐந்தாம் கட்டுரை, தேவனுடைய பொறுமை, நற்குணம் மற்றும் மேற்கொள்ளும் கிருபைகளை வெளிப்படுத்தும் உயர்வான, தனிப்பட்ட வாழ்க்கையின் அனுபவங்களைப் பற்றி பேசுகிறது. "எந்த குற்றம் மிக மோசமானது ? "என்று இது தலைப்பிடப்படுகிறது.

இப்போது நம்மை விட்டு சென்றவரும், உலகளாவிய சகோதரர்களால் நினைவில் வைக்கப்பட்டவருமான, the cross, ஒரு பழைய படைவீரனுடைய பரந்த அனுபவத்திலிருந்து "ஆவிக்குரிய கொலை" என்ற நம்முடைய இறுதி கட்டுரை எடுக்கப்பட்டுள்ளது. "தன் சகோதரனை பகைப்பவன் கொலைபாதகன்" என்று யோவான் எழுதினார். இந்த வேத பகுதியை சகோதரர்களுக்கு நினைவூட்டப்படவேண்டுமா? ஆம், என்று அனுபவம் கருதுகிறது.

பல அனுபவமுள்ள சகோதரர்களிடமிருந்து பகிர்ந்தளிக்கப்பட்ட இந்த பாடங்கள், நம்முடைய மாம்ச பலவீனங்களை ஒதுக்கிவிட்டு, "ஆட்டுக்குட்டியானவர் எங்கே சென்றாலும், அவரை பின்பற்றுவதற்கு.." (வெளிப்படுத்தல் 14:4) நமக்கு உதவியாக இருக்கும் என்று நம்புகிறோம்.

**மார்ச் / ஏப்ரல் 2019, தொகுப்பு 101, எண் 2**


**கடைசி நாள்** 32
நினைவுக்கூருதலின் துவக்கம்

**திரளான கூட்டம்** 37
கன்னிகைகளும், அவள் தோழிகளும்

**இரக்கம்** 41
வலிந்த செயற்படுத்தப்பட்டிராத தரநிலை
(The Unstrained standard)

**மூன்று கண்ணோட்டங்களிலிருந்m**
**தேவனுடைய ஞானம்** 45
நீதிமொழிகள், பிரசங்கி, யோபு

**எந்த குற்றம் மோசமானது?** 49
மறக்க செய்வது

**ஆவிக்குரிய கொலை** 54
மரணத்திற்குரிய பாவம்

**இன்றைய தீர்க்கதரிசனத்தில்** 59
குற்றம் மற்றும் தண்டனை.

## நினைவுக்கூருதலின் துவக்கம்

# கடைசி நாள்



"அதற்கு அவர்: நீங்கள் நகரத்திலே இன்னானிடத்திற்குப் போய்: என் வேளை சமீபமாயிருக்கிறது, உன் வீட்டிலே என் சீஷரோடேகூடப் பஸ்காவை ஆசரிப்பேன் என்று போதகர் சொல்லுகிறார் என்று அவனுக்குச் சொல்லுங்கள் என்றார். இயேசு கற்பித்தபடி சீஷர்கள் போய், பஸ்காவை ஆயத்தம்பண்ணினார்கள். சாயங்காலமானபோது, பன்னிருவரோடுங்கூட அவர் பந்தியிருந்தார்."(மத்தேயு *26:18-20*)

நம் ஆண்டவருடைய வாழ்க்கையின் கடைசி நாளான நிசான் 14. அந்த நாள் நம்முடைய பாவங்களுக்காக கல்வாரி சிலுவையில் உயர்த்தப்பட்ட நாளாகும். சூரியன் மேற்கில் மறைய துவங்கியது. ஆனாலும் ஒளியிருந்தது. 13 ம் நாள் முடிந்துக் கொண்டிருந்தது. 2000 ஆண்டுகளுக்கு முன் அன்று வியாழன் மாலை வெள்ளியாக மாறியது. வரும் இருளுக்கு மெழுகுவர்த்திகள் கொழுத்தப்பட்டது. தேவனுடைய குமாரனின் எதிரிகளின் மத்தியிலும் இருள் நிலைவரம் கொண்டது.

நான்கு நாட்களுக்கு முன்னால். இயேசு தம்முடைய சீஷர்களுடன் பெத்தானியாவில் சாப்பிடும்போது. அன்புள்ள மரியாள் விலை உயர்ந்த ஒரு அன்பளிப்பை வழங்கினாள். லாசரின் எழுப்புதல் அவளது மனதில் இன்னும் பசுமையாக இருந்தது. ஆனால் அதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே. அவள் இயேசுவின் பாதத்தில் அமர்ந்து . ஜீவனுள்ள வார்த்தைகளை கேட்ட மிகவும் பிரியமுள்ளவளாக இருந்தாள். கிட்டத்தட்ட 1½ கோப்பைக்கும் அதிகமான. மிக விலையுர்ந்த தைலத்தை . மரியாள் வெள்ளைக்கல் பரணியை உடைத்து. இயேசுவின் தலையிலும். மீதியுள்ளதை கழுவப்பட்ட அவருடைய பாதங்களிலும் புசிவிட்டு. அதன் வண்டல்களை தன் தலை மயிரினால் தொடைத்தாள். அந்த தைலத்தின் நறுமணம் சீக்கிரமாக அந்த வீட்டை நிரப்பியது.

ஓர் ஆயிரவருடங்களுக்கு முன். "இராஜா தமது பந்தியிலிருக்குந்தனையும் என்னுடைய நளததைலம் தன் வாசனையை வீசும்." (உன்னதப்பாட்டு1:12 ) என்று சாலொமோன் எழுதினார். இயேசு இதை நினைவுக்கூர்ந்தார். பிற்பாடு. இயேசுவின் மரணத்தையும். அதற்குபின் வரும் குணமாக்குதலையும் அடையாளப்படுத்தும்படிக்கு அவரை வெள்ளைப்போளத்தினாலும். கந்தவர்கங்களினாலும் சுற்றுவார்கள். ஆனால் இங்கு அன்பின் நறுமணம் வீசியது - அது அவருடைய இருதயத்தை நிரப்பியது.

மறுநாள். **திங்கள்** காலை. இன்னும் நிசான் 10ம் தேதியாக இருந்தது. இயேசுவின் கிருபை பொருந்திய புதிய கோட்பாடுகளையும் சத்தியத்தையும் அடையாளப்படுத்தும்படிக்கு. அவர் எருசலேமுக்கு கழுதைக்குட்டியின் மேல் பவனிவந்தார். ஜனங்கள் அவரை இராஜாவாக அறிவித்தார்கள். மற்றும் சரியாக சொன்னால். அவரே அவர்களுடைய மேசியாவாக இருந்தார். ஆனால் அவருடைய வரவேற்பு அவருடைய மரணத்திற்கு முன்னோடியாக இருந்தது. பஸ்கா ஆட்டுக்குட்டிகள் நிசான் 10ம் தேதியில் தேர்ந்தெடுக்கப்பட்டன. அதே நாளில் அவரும் இஸ்ரயேலுக்கு தன்னை வெளிப்படுத்தினார்.

**செவ்வாய்** அன்று இயேசு அத்திமரத்தை சபித்தார். ஆலயத்தை சுத்திகரித்தார் மற்றும் ஜனங்களுக்கு போதித்தார்.

**புதன்** அன்று. ஆலயத்தின் தலைவர்கள் இயேசுவை எதிர்கொண்டு. அவருடைய வார்த்தைகளினால் அவரை பிடிக்கும்படிக்கு ஆட்களை அனுப்பினார்கள். அது பயனற்றதாக இருந்தது -"இந்த மனுஷனை போல ஒருவனும் பேசினதில்லை" என்று அவர்களுக்கு அறிவித்தார்கள். ஆனால் அந்த நாள் சோர்வுற்ற நாளாக இருந்தது. அந்த நாள் முழுவதும் அவர் ஜனங்களுக்கு உபதேசித்தார். இஸ்ரயேலின் தலைவர்களை குறித்து பகிரங்கமாக அறிவித்து. வரவிருக்கும் நியாயத்தீர்ப்பைக் குறித்து எச்சரித்தார். கடைசியாக அவர் மாலையில். பெத்தானியாவுக்கு செல்வதற்கு முன் ஒலிவ மலையில் தங்கி. அவருடைய சீஷர்களுக்கு தீர்க்க தரிசனங்களையும் (2 அதிகாரங்கள்) உவமைகளையும் கூறினார்.

**வியாழன்** அன்று. இயேசு தம்முடைய சீஷர்களோடு பெத்தானியாவில் இருந்தார். சூரியன் மறைய துவங்கும் போது. கடைசி நிகழ்வுகள் வெளிவர ஆரம்பித்தன.

பஸ்காவை ஆயத்தம் செய்யும்படிக்கு. இயேசு அவருக்கு முன் இரண்டு சீஷர்களை பிரதான கட்டளைகளை கொடுத்து. எருசலேமுக்கு அனுப்பினார்.

நகரத்திற்குள் நுழைந்தவுடன் அவர்கள் ஒரு தண்ணீர் குடம் சுமந்துசெல்லும் மனுஷனை காண்பார்கள். அவர்கள் அவனை பின்தொடர்ந்து. அவர் செல்லும் வீட்டிற்குள் இவர்களும் பிரவேசித்து. பஸ்காவை ஆயத்தம் செய்வதற்கான ஒரு இடத்தை கேட்டார்கள். அவர் ஒரு பெரிய மேல் அறையை காண்பிப்பார். உணவு அருந்துவதற்கு ஏற்றவாறு தரைவிரிப்புகளும். மெத்தைகளும் அங்கு காணப்பட்டது. ஆனால் அவர்கள் அப்படிப்பட்ட ஒரு மனிதரைக் கண்டுபிடிக்கவில்லை என்றால் ? அல்லது ஒருவருக்கு மேற்பட்டவரை

கண்டிருந்தால் ? அல்லது அவர்கள் தாமதமாக வழியில் சென்று, சரியான நோக்கத்தை இழந்திருந்தால் ? அல்லது அவர்கள் காணப்பட்ட மனுஷன் தவறான வீட்டிற்குள் சென்றிருந்தால்?

இல்லை, எல்லாம் சரியாக நடக்கும். இந்த கடைசி செய்தியில், எல்லா காரியங்களிலும், ஆண்டவரின் திறமைமிக்க மற்றொரு உறுதியான அடையாளத்தை பெற்றிருப்பார்கள். இப்படியாகவே, இந்த யுகம் முழுவதும், இயேசுவால் நியமிக்கப்பட்ட ஊழியக்காரர்களை பரிசுத்தவான்கள் கண்டுவருகிறார்கள். ஆயத்தம் செய்யக்கூடிய சீஷர்கள் இருக்கிறார்கள். "வேளைவந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். "(லூக்கா 22:14). அவருடைய சீஷர்கள் பஸ்கா உணவை ஆயத்தப்படுத்தினார்கள் என்று சிலர் எண்ணுகிறார்கள். மற்ற சிலர், இயேசு தம்முடைய சீஷர்களுடன், இராஜ்யத்தில் புசிக்கும் வரை பஸ்காவை புசிப்பதில்லை என்று இயேசுவின் வார்த்தைகளை குறிப்பிட்டு, இது பஸ்காவுக்கு முன் கடைசி இராபோஜனம் என்று எண்ணுகிறார்கள். இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும், இயேசு சிலுவையில் பாடுப்பட்டு முடித்தபின், வரும் மத்தியான வேளையில், யூதர்கள் தங்கள் ஆட்டுக்குட்டிகளை அடிக்க கொண்டுவருவார்கள். மேலும் இவ்விரு சந்தர்ப்பங்களிலும், பல நூற்றாண்டுகளுக்கு முன், நிழலான பஸ்காவின் அறிவித்தபடியே, இயேசு நிசான் 14ம் தேதி அன்று மரித்தார்.

**மாலை விருந்தினர்**

இந்த கூட்டத்திற்கு இயேசு விருந்தளிப்பவராக இருந்தார். மாலை நிகழ்ச்சியின் துவக்கத்தின்போது, அனைவருக்கும் புத்துணர்வு கொடுக்கக்கூடிய பானத்தை ஒரு கோப்பையில் வழங்குவது வழக்கமாக இருந்தது. உணவுக்கு முன் இயேசு தம் சீஷர்களுக்கு அதை கொடுத்தார். ஆனால் அவர் தாமே அதை பெற்றுக்கொள்ளவில்லை. இதனால், "நீங்கள் இதை வாங்கி உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள்" (லூக்கா 22:17)என்று சீஷர்களிடம் கூறினார். "தேவனுடைய இராஜ்யம் வரமளவும் நான் திராட்சப்பழரசத்தைப் பானம்பண்ணுவதில்லை.." (வசனம் 18) என்பதையும் அவர்களுக்கு விவரித்தார்.

பின்பு, தொடர்ந்து புசித்த போது, இயேசு அவருடைய சரீரத்தை அடையாளப்படுத்தும் அப்பத்தையும், அவருடைய இரத்தத்தை அடையாளப்படுத்தும் "திராட்சை ரசத்தையும்" எடுத்து, அவருடைய பலியின் அடையாளங்களாக தம்முடைய சீஷர்களுக்கு கொடுத்தார். இவைகளை நாம் நன்றியோடு பெற்றுக்கொள்கிறோம். இயேசுவின் பலியின்றி , நமக்குள் ஜீவன் இல்லை.

**கடைசி இராபோஜனம்**

இராபோஜனம் நடந்துக்கொண்டிருக்கையில், ஏதோ ஒரு காரியம் கவனிக்கப்படவில்லை என்பதை இயேசு நோக்கினார். விருந்தினர்கள், மாலை நேரத்தில் கால்களை கழுவி இளைப்பாறுதல் வழக்கமாக இருந்தது. இவர்கள் ஒருவேளை பெத்தானியாவிலிருந்து மூன்று மைல்கள் நடந்து சென்றிருக்கவேண்டும். ஆகவே இந்த வழக்கத்தை அவர்கள் செய்திருக்கவேண்டும். ஆனால் அவருடைய சீஷர்களில் ஒருவரும் இந்த வழியில் மற்றவர்களுக்கு சேவைச் செய்ய வாய்ப்புகளை எடுத்துக்கொள்ளவில்லை.

ஆகவே இயேசு செய்தார். யோவான் மட்டுமே இந்த காரியத்தை பதிவு செய்திருக்கிறார். இயேசு ஒரு சீலையை எடுத்துக்கொண்டு, ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, ஒவ்வொரு சீஷர்களிடமும் சென்றார். நிச்சயமாகவே, அவர் முதல் சீஷருடைய கால்களை கழுவும்போதே, அனைவரும் ஒரு பாடத்தை உணர்ந்திருப்பார்கள். அதன்பின் இயேசு பேருவிடம் வந்தபோது, எஜமான் தன்னுடைய கால்களை கழுவுவதற்கு பேதுரு நிராகரித்ததினால், அவருடைய பதட்டம் எல்லை மீறியது. பேதுரு நல்ல ஆவியை பெற்றிருந்தார். ஆனால் இன்னும் ஆழமான காரியத்தை இயேசு மனதில் கொண்டிருந்தார். இயேசு அவர்கள் அனைவருக்காகவும் மரிக்கவிருந்தார். இயேசு செய்த காரியம், அவர்களுக்கு, கொடுக்கக்கூடிய சுத்திகரிப்பின் அடையாளத்தை மட்டுமே கொடுத்தார் - இப்போது நமக்கும்.

"நான் உன் கால்களை கழுவாவிட்டால், என்னிடத்தில் உனக்கு பங்கில்லை" என்று இயேசு கூறினார். (யோவான் 13:8) இதே வார்த்தைகள் நம் ஒவ்வொருவருக்கும் பொருந்தும். இயல்பாகவே நாம் பாவிகள். நம்முடைய ஆண்டவர் நம்மை சுத்திகரிக்காவிட்டால், அவரிடத்தில் நமக்கு பங்கிருக்காது. நமக்காக தேவனுடைய குமாரன் தாமே நமக்காக இந்த பணியை தாழ்மையுடன் (குனிந்து செய்வது நாம் பெற்ற பாக்கியம் அல்லவா ? இதை இயேசு நமக்கு செய்தால், நாமும் இதே ஆவியில் மற்றவர்களுக்கு பணிபுரிய விரும்ப வேண்டும். நம்மில் ஒவ்வொருவரும் நம்முடைய எஜமானனிடமிருந்து இந்த பாடத்தை உணர்கிறோம்.

**ஒரு துரோகியின் கை**

இதற்கு பிறகு இயேசு வெளிப்படையாக அவருடைய மரணத்தின் அடையாளங்களாகிய அப்பத்தையும், பாத்திரத்தையும் அறிமுகப்படுத்தினார்." பின்பு இதோ, என்னைக் காட்டிக்கொடுக்கிறவனுடைய கை என்னுடனேகூடப் பந்தியிலிருக்கிறது" (லூக்கா22:21 ) என்று இயேசு கூறினார். அடுத்ததாக யூதாஸின் விஷயத்தை யோவானின் பதிவுகள்

அறிமுகப்படுத்துகிறது. அது இயேசுவுக்கு எந்த அறிவார்ந்த விஷயமும் இல்லை. அது அவரை தொட்டது. அது அவரை மிகவும் கலங்க செய்தது. "இயேசு ஆவியில் கலங்கி... உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சாட்சியாகச் சொன்னார்" என்று யோவான் 13:21 ம் வசனம் கூறுகிறது.

இந்த செய்தி அவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. ஒவ்வொருவரும் சுற்றி பார்த்து. அவர் பேசியதைக் குறித்து யோசித்து. அது அவர்களாக இருக்கக்கூடுமோ என்று திகைத்தார்கள். இயேசுவுக்கு அருகில் அமர்ந்திருந்த யோவானை நோக்கி சற்று தூரத்தில் இருந்த பேதுரு. யாரை அவர் குறிப்பிட்டார் என்று கேட்டார். அதற்கு "நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ. அவன்தான் .." (யோவான் 13:26) என்று இயேசு பதில் அளித்தார். *துணிக்கையைத் தோய்த்து. சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்குக் கொடுத்தார். ஒருவேளை யோவான் மட்டுமே இதை கேட்டிருக்கவேண்டும். "நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய்" என்று இயேசு யுதாஸிடம் சொன்னபோது. அவன் போய். பண்டிகைக்குத் தேவையானவைகளைக் கொள்ளும்படிக்காவது. தரித்திரருக்கு ஏதாகிலும் கொடுக்கும்படிக்காவது. இயேசு அவனுடனே சொல்லியிருப்பார் என்று சிலர் நினைத்தார்கள்.(யோவான் 13:27-29)

இப்போது யூதாஸ் போய்விட்டான். இப்போது இயேசு தம்முடைய பிரிவுக்காக தம்முடைய சீஷர்களை ஆயத்தம் செய்தார். மீதியிருக்கும் கொஞ்ச நேரத்தில் அவர் என்ன சொல்ல முடிந்திருக்கும் ? அப்படியாகவே இது கிரியைச் செய்தது.

* அவர் போக போகிறார் என்று கூறினார்.

*ஒருவரின் அன்பு கூறவேண்டும் என்ற புதிதான கற்பனையை அவர் கொடுத்தார் "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்." (யோவான் 13:35 ) மற்ற மதங்களுக்கு மேலாக. கிறிஸ்தவம் ஒரு அன்பின் மதமாக குறிப்பிடப்படுகிறது.

*பேதுரு இயேசுவுக்காக ஜீவனைக் கொடுக்க ஆயத்தமாக இருப்பதாக கூறிக்கொண்டு போராடினார். அதை அவர் பொருள்படுத்தவும் செய்தார் . பல வாரங்களுக்கு முன் இயேசு எருசலேமுக்கு இதே வார்த்தைகளை அவர் சொன்னார். சீஷர்களும் அதை ஆமோதித்தனர். அவர்களுக்கு வரும் ஆபத்துகளை பற்றி அறிந்திருந்தும் இயேசுவை எருசலேம் வரை பின்தொடர்ந்தனர். ஆனால் பயம் நிறைந்தவர்களாய் இருந்திருக்கக்கூடும். மேலும் சேவல் கூவுவதற்கு முன் மூன்று முறை மறுதலிப்பாய் என்று இயேசு பேதுருவை எச்சரித்தார்.

*ஒரு மணமகளிடம் மணமகன் பேசுவது போல இயேசு தமது சீஷர்களிடம் பேசினார். ஒரு யூத மணமகன். மணமகளிடம் முன்மொழியும்போது. அவள் ஆம் என்று பதில் அளிப்பதற்கு. மணமகன் கொடுக்கும் ஒரு கோப்பை ரசத்தை வாங்கி பருகுவாள். இயேசு பாத்திரத்தை கொடுத்தார். அனைவரும் அதை வாங்கி அதில் உள்ள அனைத்தையும் பருகினார்கள். பிறகு ஒரு புதிய குடும்பம் வசிப்பதற்கு இடத்தை மணமகன் ஆயத்தம் செய்தபின். மணமகளை அழைத்து செல்வதை போல. சீஷர்களுக்கு ஒரு இடத்தை ஆயத்தப்படுத்தி விட்டு. அதற்கு பின் அவர்களை அழைத்து செல்வதற்கு திரும்பி வருவதாக கூறினார். "நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக்கிறீர்கள் என்றார்." (யோவான் 14:3)

* தோமா. பிலிப்பு. யூதா ஆகியோருக்கு கேள்விகள் இருந்தன. பின்னர் அவர்கள் புரிந்துக்கொள்ளும்படியாக இயேசு அவர்களுக்கு பதில் அளித்தார். இதனால் அவர் இல்லாதபோது . இயேசுவும். தேவனும் அவர்களோடு தங்கியிருக்கும்படியாக. அவர்களை வழிநடத்துவதற்கு பரிசுத்த ஆவியை வாக்களித்தார்.

"நான் பிதாவில் அன்பாயிருக்கிறேன் என்றும், பிதா எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறேன் என்றும், உலகம் அறியும்படிக்கு இப்படி நடக்கும். எழுந்திருங்கள், இவ்விடம்விட்டுப் போவோம் வாருங்கள் என்றார்." (யோவான் 14:31 ) என்று கூறி. அந்த நிகழ்ச்சியை முடித்தார். அவர்கள் கிழக்கே சென்றபோது. ஒருவேளை ஆலயத்தின் கதவுகளில் செதுக்கப்பட்டிருந்த திராட்சை செடி. திராட்சை செடி மற்றும் கொடிகளை பற்றிய பாடத்தை கொடுக்க தூண்டியிருக்கவேண்டும். அவருடைய அன்பின் பிரமாணத்தை பற்றி மீண்டும் கூறினார். அவர்களே அவரது நம்பிக்கைக்குரியவர்கள் என்று அவர்களுக்கு உறுதியளித்தார். அவர்களைத் தெரிந்துகொண்டு கனிகொடுப்பதற்கு அவர்களை நியமித்தார்.

அவர்கள் மற்றவர்களால் பகைக்கப்பட்டு. துன்புறுத்தப்பட்டாலும். அவர்கள் எரிச்சல் அடையக்கூடாது. "நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் கொஞ்சக்காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள். மறுபடியும் கொஞ்சக்காலத்திலே என்னைக் காண்பீர்கள் " என்ற இரகசியமான எண்ணங்களை அவர் மீண்டும் கூறினார். கொஞ்ச காலத்திற்கு அவர்கள் மிகுந்த துக்கத்தில் இருப்பார்கள். ஆனால் மரித்தோரிலிருந்து அவர் எழுந்ததை காணும்போது. அவர்கள் அதிகமாக மகிழ்ச்சி அடைந்து. புதுப்பிக்கப்பட்ட ஆவி. வைராக்கியம். விசுவாசம் ஆகியவற்றோடு புறப்படுவார்கள். அப்பொழுது உங்கள் இருதயம் சந்தோஷப்படும். உங்கள் சந்தோஷத்தை

ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப்போட மாட்டான் என்றார். இவ்வார்த்தைகள் இன்னும் இரகசியமாகவே இருந்தது. ஆனால் விரைவில் அவர்களுக்கு புரிந்திருக்கும்.

பின்னர் அவர் இன்னும் தெளிவாக பேசினார் : அவர் பிதாவினிடத்திலிருந்து இந்த உலகத்திற்கு வந்தார் என்றும். இப்பொழுது இந்த உலகத்தை விட்டு. அவருடைய பிதாவினிடத்திற்கு செல்வதாக கூறினார். ஆனால் ஒரு சோதனை வருவதாகவும். அப்போது ஒரு குறுகிய காலத்திற்கு அனைவரும் சிதறடிக்கப் படுவார்கள் என்றும் இயேசு கூறினார்.

அதன்பின் அவருடைய கண்களை வானத்திற்கு ஏறெடுத்து. யோவான் 17ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட ஜெபத்தை. சீஷர்கள் கேட்கும்படி ஜெபித்தார் - அவர்களை காத்துக்கொள்ளும். பரிசுத்தப்படுத்தும். போஷியும்.

அவர்கள் எருசலேமின் கிழக்கில் உள்ள கெதரோன் ஆற்றுக்கு போனார்கள். அதற்குபின் ஒலிவ மலையின் அடிவாரத்தில் உள்ள கெத்சமெனேவுக்கு சென்றார்கள். இயேசு தன்னோடு விழித்திருக்கும்படி பேதுருவையும். யாக்கோபையும் யோவானை அவரோடு அழைத்து சென்றார். எல்லா காரியங்களும் சரியாக இருக்கிறதா என்று தம் தந்தையிடமிருந்து அறிந்துக்கொள்ள மூன்று முறை முயன்றார். மிகப்பெரிய தீவிரமும் ஆர்வமும் கவலையுமாக இருந்தது. நாம் புரிந்துக் கொள்ளுதலுக்கும் அதிகமாக. இயேசுவின் மேல் சுமத்தப்பட்டிருந்த வேலை மிகவும் அழுந்தியது. ஆனால் ஒரு தூதன் அவரை தேற்றினார். அவர் சமாதானம் பெற்றார். மற்றவர்கள் தூங்குகையில். நிழலில் மறைந்திருந்த வாலிபனான மாற்குவின் சாட்சியின் வழியாக. ஒருவேளை நமக்காக அவருடைய ஜெபங்களின் தீவிரம் பாதுகாக்கப்பட்டிருக்கலாம்.

**பரிவாரங்கள்**

இயேசு ஜெபத்தில் போராடி. அதன் ஓட்டத்தை முடிக்கும் வரை. எதுவும் குறிக்கிட தேவன் அனுமதிக்கவில்லை. அதற்கு பின் நேரம் வந்தது. யூதாஸ் ஆயுதம் தரித்த மனிதர்களோடு வந்து. முத்தமிட்டு இயேசுவை காட்டிக்கொடுத்தான். இயேசு தம்மை சிறைபிடிக்க வந்தவர்களிடம் பேசினார். அனைவரும் பின்னிட்டு விழுந்தார்கள். அவர் அவர்களை விட்டு நடந்து போயிருக்கலாம். ஆனால் இயேசு இன்னும் கட்டுப்பாட்டில் இருந்தார். அவர் மல்கூசின் காதை குணமாக்கினார். அவருடைய சீஷர்களை விடுவிக்க வகைதேடினார். அதற்குபின் அந்த இருளின் காலத்தை. தனிமையாக எதிர்நோக்கினார். அவருடைய தந்தை மட்டுமே அவருடன் இருந்தார்.

இயேசு அன்னாவிடம் இழுத்துச் செல்லப்பட்டு. கட்டப்பட்டார். அதற்கு பின் அந்த வருஷத்தின் பிரதான ஆசாரியனாகிய காய்பா அதாவது அவனுடைய மருமகனிடன் அனுப்பப்பட்டார். பேதுருவும் யோவானும் தூரத்தில் பின்சென்றார்கள். காய்பாவின் முற்றத்தில் யோவான் அவர்களுக்கு அனுமதிப்பெற்றுக்கொண்டார். இதனால் பேதுரு ஆபத்தில் அகப்பட்டார். அவர் மூன்று முறை கிறிஸ்துவை மறுதலித்தார். சேவல் கூவியபோது. கர்த்தர் திரும்பி. பேதுருவை நோக்கிப்பார்த்தார். பேதுரு மனங்கசந்து அழுதார் என்று லூக்கா கூறுகிறார். (லூக்கா 22:61)

இதற்கு இடையில் ஆலோசனை சங்கத்தினால் இயேசு கண்டனம் செய்யப்பட்டார். அவருக்கு எதிரான சாட்சிகளை தேடினார்கள் எதுவும் ஒவ்வவில்லை. கடைசியாக இயேசு ஆலயத்திற்கு விரோதமாக சொன்ன அச்சுறுத்தல்களின் இரண்டு சாட்சிகள் ஒற்றுமையாக காணப்பட்டது. காய்பா அவரை பேசும்படிக்கு ஆணையிடும் வரையில் இயேசு எதையும் பேசவில்லை. ஒரு மரியாதைக் குரியவர் மீது ஒரு தீவிரமான குற்றம் சாட்டப்பட்டது. அதற்குபின் "அதற்கு இயேசு: நான் அவர் தான்; மனுஷகுமாரன் சர்வவல்லவரின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் நீங்கள் காண்பீர்கள் என்றார்." (மாற்கு14:62 ) என்று இயேசு பதில் அளித்தார்.

அவர்களுக்கு இது தேவைப்படவில்லை. ஆனால் அவர்கள் எதிர்பார்த்தது மிக நெருக்கமாக இருந்தது. பிரதான ஆசாரியன் தன்னுடைய வஸ்திரத்தை போலியான பயத்தில் கிழித்துக்கொண்டு. ஒரு தீர்ப்பை கோரினான். ஆலோசனை சங்கம் கடமையை செய்தது. அதற்குபின். வீரர்கள் அவரை பரிகாசம் செய்ய சுதந்திரம் பெற்றவர்களாக அவர்களின் இந்த விளையாட்டில் சோர்வாகும் வரையில். அவரை துப்பி. கண்களை கட்டி அவரை அடித்து. கேலி செய்தார்கள்.

**காலை**

விடிந்தவுடன். ஆசாரியர்களும். மூப்பர்களும் தங்கள் தீர்ப்பை உறுதிப்படுத்தியவர்களாக. இயேசுவை பிலாத்துவிடம் கொண்டுவந்தனர். இயேசு பிலாத்துவிடம் அதிகமாக பேசவில்லை. ஆசாரியர்கள் மற்றும் மூப்பர்களின் குற்றச்சாட்டுகளுக்கும் அவர் எதுவும் கூறவில்லை. இயேசுவின் அமைதியை கண்டு பிலாத்து ஆச்சரியப்பட்டார். "அவன் நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில், அவனுடைய மனைவி அவனிடத்தில் ஆளனுப்பி: நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம்; அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகு பாடுபட்டேன் என்று சொல்லச் சொன்னாள்."(மத்தேயு 27:19) என்று பிலாத்தின் மனைவி அவரை எச்சரித்தாள். "இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை" என்று பிலாத்து அவரை குறித்து தீர்ப்பளித்தார். ஆனால் அவர் மேல் குற்றம் சாட்டினவர்கள். "இவன் கலிலேயா நாடு தொடங்கி இவ்விடம் வரைக்கும் யூதேயா தேசமெங்கும் உபதேசம்பண்ணி. ஜனங்களைக் கலகப்படுத்துகிறான்"

என்று வைராக்கியத்தோடே சொன்னார்கள்.

கலிலேயாவா ? அவர் கலிலேயனா ? கலிலேயாவின் ஆளுனராகிய ஏரோது அந்நேரத்தில் எருசலேமுக்கு வந்திருந்தார். ஆகவே பிலாத்து இந்த காரியத்தை அவரிடம் அனுப்பினார். ஏரோது மிக ஆர்வத்துடன் இருந்தார். ஆனால் இயேசு ஒரு வார்த்தையும் பேசவில்லை. ஆகவே. ஏரோது அவரை பிலாத்தினிடத்தில் திருப்பி அனுப்பினான். அதற்கு முன் அவனுடைய போர்சேவகர்களோடு இயேசுவை பரியாசம்பண்ணி. மினுக்கான வஸ்திரத்தை அவருக்கு உடுத்துவித்தான்.

இரண்டாவது முறையாக இயேசு பிலாத்துக்கு முன் நின்றார். இயேசுவை கசையினால் அடித்து. கொடூரமாக நடத்தி. அவரை விடுவிப்பதற்கு பிலாத்து தீர்மானித்தார். அவ்வாறே. அவர் அடிக்கப்பட்டார். சேவகர்கள் முள்ளினால் ஒரு முடியைப் பின்னி. நீர் யூதரின் இராஜா என்று அவரை கடிந்து கொண்டு. தொடர்ந்து அவரை அடித்துக் கொண்டிருந்தனர். இவ்விதமாக பிலாத்து அவரை ஜனங்களுக்கு முன் நிறுத்தி. அவர்களின் அனுதாபத்தை தேட நினைத்தார். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. அதற்கு பதிலாக. "இவன் தன்னை தேவனுடைய குமாரன் என்று சொன்னபடியினால்.. இவன் சாகவேண்டும் "(யோவான் 19:7) என்று ஜனக்கூட்டம் கூச்சலிட்டனர்.

இவர் தேவனுடைய குமாரனா ? பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபொழுது அதிகமாய்ப பயந்தான். மறுபடியும் அரமனைக்குள்ளே போய் இயேசுவை நோக்கி - "நீ எங்கேயிருந்து வந்தவன் என்றான். மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கவும். விடுதலை செய்யவும் எனக்கு அதிகாரம் உண்டென்பதை பிலாத்து சொல்லும் வரையில். இயேசு எந்த பதிலையும் சொல்லவில்லை. "பரத்திலிருந்து உனக்குக் கொடுக்கப்படாதிருந்தால். என்மேல் உமக்கு ஒரு அதிகாரமும் இராது"- அவர் தேவனோடு நிலைநிற்கிறார் என்பதற்கான மறைமுகமான ஒப்புதலாகும். அது நள்ளிரவில் இருந்து சுமார் ஆறாம் மணி நேரமாக இருந்தது. பிலாத்து இயேசுவை விடுவிக்க முயற்சி செய்தான் ஆனால் சீசருக்குத் துரோகம் செய்ததாக ஜனங்கள் அவரை அச்சுறுத்தியபோது. அவர்களுக்கு இணங்கினான். அவன் தம்முடைய கைகளை கழுவினான். ஆனால் அவனுடைய குற்றத்தையோ கழுவ முடியவில்லை. மூன்று வருடங்களுக்கு பின் சீசருக்கு எதிராக பிலாத்தின் மேல் குற்றம் சாட்டினபோது. அவன் தம் கரங்களினாலே மரித்தான்.

### கொல்கொதா

அவர்கள் இயேசுவை மண்டை ஓட்டின் இடமாகிய. கொல்கொதாவுக்கு அழைத்துச் சென்றனர். சீரேனே ஊரானாகிய சீமோனை சிலுவையை சுமக்கும் படி கட்டாயப்படுத்தினர். கொல்கொதாவில். இரும்பு ஆணிகள். அவருடைய கரங்களையும். கால்களையும் கரடுமுரடான சிலுவையோடு அடிமேல் அடியாக அடித்து இறுக்கினார்கள். அவர் ஆறு மணிநேரம் அவமானத்திற்கும் இகழ்ச்சிக்கும் உள்ளானார். ஆனால் அவருடைய பணியை தொடரக்கூடிய நோக்கங்களை அவர் நிறுத்தவில்லை.

*அவருடைய வஸ்திரங்கள் சீட்டு போடப்பட்டது

*மனந்திருந்திய கள்ளனுக்கு இராஜ்யத்தில் ஒரு இடத்தை உறுதியளித்தார்.

*யோவானிடம் தம்முடைய தாயின் பொறுப்பை ஒப்படைத்தார்.

*சிலுவையில் இருந்து சங்கீதம் 22 ஐ கூறினார்.

*தீர்க்கதரிசனம் நிறைவேறும்படியாக காடியை வாங்கி புசித்தார்.

*"எல்லாம் முடிந்தது" என்று கூறினார்.

* அவருடைய ஆவியை தேவனிடத்தில் அமைதியாக ஒப்புக்கொடுத்தார்.

மதியம் மூன்று மணிக்கே வானம் இருளடைந்தது. இயேசு இரண்டு கள்வர்களுக்கு நடுவில் மரித்தார். ஒரு பணக்காரருடைய கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார். அவருடைய மரணத்தின் போது. பூமி அதிர்ந்தது. ஆலயத்தின் திரைசீலை கிழிந்தது. கல்லறைகள் திறக்கப்பட்டது. சரீரங்கள் காணப்பட்டது. நூற்றுக்கு அதிபதியும் அவருடைய சேவர்களும் பயந்து. "மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்" (மத்தேயு 27:54) என்றார்கள்.

வெள்ளி. நிசான் 14 நிறைவடைந்தது. ஓய்வு நாள் தொடங்கியது. இயேசு கல்லறையில் ஓய்வெடுத்தார். அவருடைய வேதனை முடிந்தது. அவருடைய வேலை நிறைவடைந்தது. தேசத்தை சுற்றியுள்ள இஸ்ரயேலர்களின் வீடுகளில். ஓய்வு நாளை கொண்டுவரும்படியாக இரண்டு மெழுகுவர்த்திகள் எரிந்தது. இந்த மெழுகுவர்த்திகள் சாகோர் (*Zakhor*) [நினைவுக்கூருதல் ] என்றும் ஷாமோர் (*Shamor*) [கவனித்தல்] என்றும் பொருள். இப்போது நாம் நினைவுக்கூருவோம். இப்போது நாம் கவனிப்போம்.

## கன்னிகைகள், அவளுடைய தோழிகள்

# திரள் கூட்டம்



"இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்.அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்." (வெளிப்படுத்தல் *7:9,10*)

*Nicholas Charcharos*

வெளிப்படுத்தலின் விசேஷம் 7ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள திரள்கூட்டத்தார் பற்றின விஷயங்கள் வேத மாணவர்களுக்கு அதிக ஆர்வத்தை ஏற்படுத்திய விஷயமாகவும் அவர்களின் (திரள்கூட்டதாரின்) இறுதி இருப்பிடம் மற்றும் தேவனுடைய திட்டத்தில் அவர்களின் பங்கு குறித்து வரும் விவாதத்திற்குரிய விஷயமாகவும் இருக்கின்றது. பலர் தங்களுடைய நம்பிக்கைகளையும். எதிர்பார்ப்புகளையும். அத்துடன் அவர்கள் அனுபவிக்கக்கூடிய மகிழ்ச்சிகளையும் மற்றும் வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ள மற்ற வகுப்பாருடன் அவர்கள் எவ்வாறு பொருந்துவார்கள் என்றும் மனதில் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்போது. பல வேதப்பகுதிகளில் திரள் கூட்டத்தாரைப் பற்றிய சித்திரம் காணப்படுகிறது.

"ராஜகுமாரத்தி உள்ளாகப் பூரணமகிமையுள்ளவள், அவள் உடை பொற்சரிகையாயிருக்கிறது. சித்திரத்தையலாடை தரித்தவளாய், ராஜாவினிடத்தில் அழைத்துக் கொண்டுவரப்படுவாள்; அவள் பின்னாலே செல்லும் அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள் உம்மிடத்தில் கூட்டிக்கொண்டுவரப்படுவார்கள். அவர்கள் மகிழ்ச்சியோடும் களிப்போடும் வந்து, ராஜ அரமனைக்குள் பிரவேசிப்பார்கள்." என்று சங்கீதம் 45:13-15 கூறுகிறது. 45ம் சங்கீதம் மணவாளன். மணவாட்டி மற்றும் அவருடைய தோழியர்களைப் பற்றி விவரிக்கிறது.

**மணவாளன் :** இந்த சங்கீதத்தில் மணவாளனை கண்டுபிடிப்பது எளிது. முதலாவது இயேசுவை அவருடைய மனித வடிவத்திலும் அதற்குப்பின் வெற்றிகரமான ஒரு இராஜாவாகவும் விவரிக்கப்படுகிறது. ஒரு பரிபூரண மனுஷன் எப்படி இருப்பார் என்பதை ஒருவர் கற்பனை செய்து தான் பார்க்க முடியும். "எல்லா மனுபுத்திரரிலும் நீர் மகா சவுந்தரியமுள்ளவர்; உம்முடைய உதடுகளில் அருள் பொழிகிறது; ஆகையால் தேவன் உம்மை என்றென்றைக்கும் ஆசீர்வதிக்கிறார்." (சங்கீதம் 45:2) என்று இந்த சங்கீதம் பதில் அளிக்கிறது. இயேசு ஜெப ஆலயத்தில் பேசியபோது. "எல்லாரும் அவருக்கு நற்சாட்சி கொடுத்து, அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டு: இவன் யோசேப்பின் குமாரன் அல்லவா என்றார்கள்." (லூக்கா 4:22) என்று லூக்கா குறிப்பிடுகிறார்.

சங்கீதம் 4 ஆம் வசனம். எபிரெயர்களுக்கு மேற்கோள் காட்டி எழுதப்பட்டது "இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும்தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார்." (எபிரெயர் 1:2-3). சங்கீதம் 45ல் சொல்லப்பட்ட மணவாளனைப் பற்றி பவுல் குறிப்பிடுகையில். "குமாரனை நோக்கி: தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது." (எபிரெயர் 1:8) என்று அவர் எழுதினார்.

**மணவாட்டி :** மணவாட்டியின் விளக்கம் இவ்வாறாக துவங்குகிறது. "உமது நாயகிகளுக்குள்ளே அரசரின் குமாரத்திகளுண்டு; ராஜஸ்திரீ ஓப்பீரின் தங்கம் அணிந்தவளாய் உமது வலதுபாரிசத்தில் நிற்கிறாள். குமாரத்தியே கேள், நீ உன் செவியைச் சாய்த்துச் சிந்தித்துக்கொள், உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் மறந்துவிடு."(சங்கீதம் 45:9-10) இந்த வசனங்களின் உணர்வுகள், மத்தேயு 10:37 ல் உள்ள இயேசுவின் வார்த்தைகளுக்கு மிகவும் இசைந்திருக்கிறது. "தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல." பூமியின் விழுந்துபோன மனுக்குலத்தின சகல ஜாதிகளிலிருந்து மணவாட்டி எடுக்கப்படுகிறாள். "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து,கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்."என்று எபேசியர் 5:25,27 ல் பவுல் விவரிக்கிறார்.

இந்த ஆழமான விசுவாசம். மணவாளின் இருதயத்தில் ஆழமான ஒரு பாராட்டை உருவாக்குகிறது."அப்பொழுது ராஜா உன் அழகில் பிரியப்படுவார்; அவர் உன் ஆண்டவர், ஆகையால் அவரைப் பணிந்துகொள்.ராஜகுமாரத்தி உள்ளாகப்

பூரணமகிமையுள்ளவள், அவள் உடை பொற்சரிகையாயிருக்கிறது." (சங்கீதம் 45:11,13 ) இங்குள்ள விளக்கம் உட்புற அழகுகளில் ஒன்றாகும். மேலும் "மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது."(I பேதுரு3:3,4) என்று பேதுரு எழுதுகிறார். அவளுடைய ஆடைகளில் பொறிக்கப்பட்ட பொன் சரிகை. அவள் ராணி என்ற அவளுடைய நிலைப்பாட்டை மட்டும் அல்ல. தெய்வீக தன்மையை கொண்டிருக்கும் அவளுடைய நிலையையும். அவளுடைய விசுவாசத்தையும் காட்டுகிறது. "அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்."(I பேதுரு 1:7) என்று பேதுரு கூறும்போது. பொன்னை சுத்திகரிப்பதற்கு ஒப்பாக விசுவாசமும் சுத்திகரிக்கப்படவேண்டும் என்று கூறுகிறார்.

**கன்னிகைகளும், அவளுடைய தோழிகளும்,** தோழிகளை எவ்வாறு அடையாளம் கண்டுக்கொள்ளுவது என்றும் மணவாட்டி அவளுடைய திருமணத்திற்கு செல்லும்போது. வழியில் அவளுடைய தோழிகள் அவளோடுகூட எவ்வாறு செல்கிறார்கள் என்ற கேள்வி எழும்புகிறது. இவர்கள் அனைவரும் கன்னிகைகள் என்ற உண்மையானது. இவர்கள் தூயவர்கள் என்றும் மாசில்லாதவர்கள் என்றும் குறிப்பிடுகிறது. இந்த இருவரும் திருமணத்திற்குப் போவார்களானால். அந்த திருமணம் பரலோகத்தில் நடக்ககூடிய பட்சத்தில். இந்த இருவம் ஆவிக்குரிய வகுப்பாரை அடையாளப்படுத்தவேண்டும்.

அனைத்து கன்னிப் பெண்களும் ஒரே நிலையில் இருந்து புறப்பட்டனர் - விழுந்துபோன மனுக்குலம். சுவிசேஷ யுகத்தில் இவர்கள் கிறிஸ்துவின் செய்திக்கு செவிக்கொடுத்திருப்பார்கள். அக்காலத்தில் இந்த பூமியில் கிறிஸ்துவின் செய்தியைக் கேட்ட அனைவரும் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று இல்லை. "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன்." (யோவான் 6:44) என்று இயேசு விளக்கம் அளிக்கிறார். "ஒருவன் என் பிதாவின் அருளைப்பெறாவிட்டால் என்னிடத்திற்கு வரமாட்டான் என்று இதினிமித்தமே உங்களுக்குச் சொன்னேன் என்றார்."(வசனம் 65) என்றும் அவர் கூறுகிறார்.

கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுடன். முன்பு கிடைக்கபெறாத ஒரு வழி திறக்கப்பட்டது. ஆதாமின் கீழ்ப்படியாமையினால். மரண தண்டனையை பெற்ற மனுக்குலத்தை விடுவிப்பதற்காக கிறிஸ்துவின் மரணம் மீட்கும்பொருளை அளித்தது. கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் மற்றொரு விளைவு.

ஆலயத்தின் திரை சீலை இரண்டாக கிழிந்ததன் மூலம் அடையாளப்படுத்தப்பட்டது. கிறிஸ்துவின் பலியை ஏற்றுக்கொள்வதன் வழியாக, இப்போது தேவனிடத்திற்கு அணுகக்கூடிய ஒரு வாய்ப்பு கிடைத்திருப்பதை காட்டுகிறது. (எபிரெயர் 6:19,20 )

பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியின் வருகை. "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளை.." (பிலிப்பியர் 3:14) அடைவதற்கான வழியை திறந்தது. பேதுரு யூதர்களிடம் பிரசங்கிக்கும்போது."பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி;" (அப்போஸ்தலர் 2:38-39 )என்று கூறினார். இந்த செய்தி முதன் முதலாக யூதர்களுக்கும். பின்பு கிரேக்கர்களுக்கும் கொடுக்கப்பட்டது (புறஜாதிகளுக்கு) (லூக்கா24:47.ரோமர் 1:16, 2:9-11 )

**புறஜாதிகள் :** இயேசு தம்முடைய முதல் வருகையில். அவருடைய ஊழியம் பிரத்தியேகமாக யூதர்களுக்கு மட்டுமே என்று அவர் கூறியிருந்தபோது. (மத்தேயு15:24) யூதர்களுக்கான கிருபையின் காலம் முடிவடைந்தது என்றும் இப்போது புறஜாதிகள் உள்ளே வருவதற்கான வழி திறக்கப்பட்டது என்றும் தேவன் பேதுருவுக்கு ஒரு தரிசனத்தின் மூலம் விளக்கினார். அதற்குபின் " அப்பொழுது பேதுரு பேசத்தொடங்கி: தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும்,

எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்."(அப்போஸ்தலர் 10:34-35) என்று பேதுரு பேசினார். "அப்பொழுது பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி: முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்லவேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்தியஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக் கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம்.நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம் என்றார்கள். புறஜாதியார் அதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தினார்கள். நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள்." (அப்போஸ்தலர் 13:46-48) என்று அந்தியோகியாவில் உள்ள யூதர்களிடம் பவுலும் பர்னபாவும் தைரியத்தோடு பேசினார்கள்.

## தேர்வுச்செய்வதில் தேவன் தகுதியற்றவர் இல்லை

தேவன் நியாயமற்றவர் என்று சிலர் சொல்லலாம். அவருடைய வார்த்தைகளைக் கேட்ட அனைவரும் அழைக்கப்படுவதில்லை. அழைக்கப்படும் அனைவரும்

தேர்வுச்செய்யப்படுவதில்லை. பலியினால் உடன்படிக்கை செய்த அனைவரும் ஒருவிதமான கனத்தையும் அல்லது நிலையையும் பெறுவதில்லை. அவருடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தேவையான தீர்மானங்களை யெகோவா தேவனே இறுதியாக முடிவெடுப்பார். மனிதருடைய சிந்தனைகளுக்கு முரணான முடிவுகள் எடுக்கப்பட்டதற்கு பழைய ஏற்பாட்டில் ஏராளமான உதாரணங்கள் உள்ளன. தேவன் இஸ்மயேலுக்கு பதிலாக ஈசாக்கை தெரிந்துக்கொண்டார். ஏசாவுக்கு பதிலாக யாக்கோபை தெரிந்துக்கொண்டார். பூமியில் உள்ள எல்லா ஜாதிகளிலும் இருந்து இஸ்ரயேலை (எண்ணிக்கையில் குறைவானவர்களாக இருந்தாலும்) தெரிந்துக் கொண்டார்.

லேவி கோத்திரத்தாரை ஆசரிப்புக் கூடாரத்தில் தேவனுக்கு சேவைச்செய்ய தெரிந்தெடுத்தது நிரூபிப்பது என்னவென்றால் தேவன் அவர் விரும்புபவர்களை தெரிந்தெடுக்கவும் அவர்களுக்க எந்த பதவிகளை அளிக்க வேண்டும். போன்றவை அவருடைய பரிபூரண வல்லமையை வெளிக்காட்டுகிறது. இது மனிதனுடைய ஞானத்திற்கு முரண்பாடானது. லேவி மனிதர்களிடம் வன்முறையோடும் மிருகங்களிடம் கொடூரமாக நடந்துகொள்ளும் குணமுடையவராக இருந்தார். லேவியின் எந்த அறிவுரையை யாக்கோபு ஏற்றுக்கொள்ளாமல். அவர் மரிப்பதற்கு முன் லேவியை சபித்தார்.(ஆதியாகமம் 49:5-7)யாத்திரையின் போது. லேவி கோத்திரத்தை வழிநடத்தின ஆரோனின் தேர்வு விநோதமாக தோன்றுகிறது. ஜனங்களின் வற்புறுத்தலுக்கு ஆரோன் செவிசாய்த்து. ஒரு பொன் கன்றுக்குட்டியை செய்து. "உங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்று கூறினார்கள்" என்று யாத்திராகமம் 32:4 ம் வசனம் கூறுகிறது.

லேவி கோத்திரத்தின் தேர்வு. சபையின் முதல் பேறானவர்களின் தேர்வை குறிக்கிறது. (எபிரெயர் 12:23) இந்த லேவியர்கள் (எண்ணிக்கையில் - 22,273) எகிப்தில் (எண்ணாகமம் 3:40-51) காக்கப்பட்ட தலைச்சன் பிள்ளைகளுக்கு பதிலாக தேர்வு செய்யப்பட்டார்கள். ஆசாரியர்களுக்கு மட்டும் அல்ல. முழு கோத்திரத்திற்கும் தேசத்தில் எந்த சுதந்திரமும் இல்லை என்பது ஆர்வமூட்டும் குறிப்பாக உள்ளது. "லேவியராகிய ஆசாரியருக்கும் லேவி கோத்திரத்தார் அனைவருக்கும் இஸ்ரவேல் புத்திரருடன் பங்கும் சுதந்தரமும் இல்லாதிருப்பதாக; கர்த்தருக்கு இடப்படும் தகனபலிகளையும் அவருக்குச் சுதந்தரமான வைகளையும் அவர்கள் புசிப்பார்களாக.அவர்கள் சகோதரருக்குள்ளே அவர்களுக்கு சுதந்தரமில்லை; கர்த்தர் அவர்களுக்குச் சொல்லியபடியே, அவரே அவர்கள் சுதந்தரம்."(உபதகமம் 18:1-2)

சுவிசேஷ யுகம் முழுவதும் கிறிஸ்துவை பின்பற்றும் அர்ப்பணிக்கப்பட்டவர்கள். தங்களுடைய ஆவிக்குரிய காரியங்களுக்காக. பூமிக்குரிய காரியங்களை ஒதுக்கிவைப்பது ஒத்திசைவாக உள்ளது. "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்."(பிலிப்பியர் 3:20 ) எபேசு சபையின் பரிசுத்தவான்களிடத்தில் பவுல் பேசிய அதே வழியில். லேவியர்களின் தேவனுடைய சுதந்திரமாக பேசப்பட்டார்கள். (எபேசியர் 1:18) லேவி மற்றும் ஆரோன் ஆகிய இருவரும் தவறுகள் செய்தபோதிலும். "பாளயத்தின் வாசலில் நின்று: கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? அவர்கள் என்னிடத்தில் சேரக்கடவர்கள் என்றான். அப்பொழுது லேவியின் புத்திரர் எல்லாரும் அவனிடத்தில் கூடிவந்தார்கள்." (யாத்திராகமம் 32:26 ) என்று மோசே கேள்வி எழுப்பினபோது. லேவியின் புத்திரர்கள் மட்டுமே அழைப்புக்கு பதில் அளித்து. தங்களை பிரித்துக்கொண்டனர். சபை உலகத்திலிருந்து. குறிப்பாக பொய் மத அமைப்புகளிலிருந்து தன்னை எப்படி பிரிக்க வேண்டும் என்பதை இது மீண்டும் ஒருமுறை நமக்கு விளக்குகிறது.

லேவியின் கோத்திரத்தில் நான்கு பிரிவுகள் இருந்தன. ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு வித்தியாசமான வேலைகளை தேவன் தேர்ந்தெடுத்தார். ஆரோனும் அவன் குமாரரும் இஸ்ரயேல் புத்திரருக்காக பலியிட்டு ஆசாரிய ஊழியம் செய்தார்கள். ஆரோனின் வீட்டிற்கு நெருங்கிய உறவினரான கோகாத்தியர். பரிசுத்த ஸ்தலத்தின் அனைத்தையும் சுமந்துச் செல்லக்கூடியவர்களாக இருந்தார்கள். கெர்சோனியர்கள். கூடாரங்களையும். தொங்கும் திரைச்சீலைகளையும் எடுத்துச் சென்றார்கள். மெராரியின் புத்திரர் ஆசரிப்பு கூடாரத்தின் பலகைகளையும். பூண்களையும். தூண்களையும் எடுத்துச் சென்றார்கள்.

இந்த லேவியர்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் நான்கு பக்கங்களிலும். கூடாரம் போட்டார்கள். அந்த கூடாரம் ஆசரிப்பு கூடாரத்திற்கும் மற்றும் இஸ்ரயேல் ஜனங்களின் கூடாரத்திற்கும் இடையே இடைவெளியாய் அமைந்திருந்தது. லேவியரின் இந்த பிரிவு மணவாட்டிக்கும். திரள் கூட்டத்திற்கும் உள்ள வித்தியாசத்தை காட்டுகிறது. இருவரும் தேவனுடைய சுதந்தரவாளிகள். அவர்கள் எந்த இடத்தில் நிற்கவேண்டும் என்பதை தீர்மானிப்பவர் தேவனே. அவர்களின் ஆவிக்குரிய நிலைப்பாட்டை குறிப்பிடும் படியாக. லேவியர்களுக்கு இந்த பூமியில் எந்த சுதந்திரமும் இல்லை. வெளிப்படுத்தலில் மணவாட்டி கிறிஸ்துவோடு சிங்காசனத்தில் அமர்ந்திருப்பதை போலவும். திரளான கூட்டம் சிங்காசனத்திற்கு முன் நிற்பது போலவும் காண்பிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தேவனுடைய சிங்காசனத்தின் "பிரசன்னத்தில் காணப் படுகிறார்கள்."அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்." (வெளிப்படுத்தல் 7:14-15)

இவர்கள் ஆலயத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் பணிபுரிவார்கள். ஆலயத்தின் கிரேக்க வார்த்தை நாயோஸ் (*naos* -strong's 3485) இதற்கு ஆலயத்தின் முக்கிய

பகுதி என்று பொருள். இதற்கு எதிரான ஹைரொன் (*hieron*) என்ற கிரேக்க வார்த்தைக்கு ஆலயத்தின் பிரகாரம் மற்றும் சுற்றுப்புற இடங்கள் என்று பொருள். மகா உபத்திரவத்தின் வழியாக கடந்து செல்லுதல். எதை குறிக்கிறது என்றால், தேவன் மீது முழு நம்பிக்கை வைப்பது கடினமான காரியமாகவும். சில நேரங்களில் தங்கள் சொந்த பலத்தை நம்பியிருத்தலைக் குறிக்கிறது. (எசேக்கியேல்44:10-14 மற்றும்15-16)

விதைக்கிறவன் பற்றிய உவமையில். உண்மையுள்ள வகுப்பாருக்கும். திரள் கூட்டத்தாருக்கும் உள்ள வித்தியாசத்தை பற்றி இயேசு விளக்குகிறார். நான்கு விதமான நிலங்களில் விதைகள் விதைக்கப்பட்டது. அதில் சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தது. முப்பதும். அறுபதும். நூறுமாக பலன் தந்தது. (மத்தேயு13:23) அதிகமான பலன் தந்த விதைகள் மத்தியிலும் ஒரு பிரிவு காண்பிக்கப்படுகிறது. மேலும் முற்றிலுமாக ஜெயம் பெற்றவர்கள் மத்தியிலும் காணப்படும் வளர்ச்சியின் வேறுபாட்டை இது அறிவுறுத்துகிறது.

**திவ்விய சுபாவம்**

"முற்றிலும் ஜெயம் பெற்றவர்களாக" (ரோமர் 8:37) கிறிஸ்துவோடு அவருடைய சிங்காசனத்தில் அமர்ந்திருக்கும் மணவாட்டி. தன்னுடைய புருஷனை போல தெய்வீக தன்மையை கொண்டிருப்பாள். திரள் கூட்டத்தைப் பற்றி வெளிப்படுத்தல் 7:9-14 "இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன். அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள். தூதர்கள் யாவரும் சிங்காசனத்தையும் மூப்பர்களையும் நான்கு ஜீவன்களையும் சூழநின்று, சிங்காசனத்திற்குமுன்பாக முகங்குப்பற விழுந்து, தேவனைத் தொழுதுகொண்டு: ஆமென், எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக; ஆமென், என்றார்கள். அப்பொழுது, மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள்? என்று கேட்டான். அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வெண்மை கன்னிகைகள் என்ற அவர்களது அந்தஸ்தை குறிப்பிடுகிறது. ஏனெனில். இவர்கள் மகா உபத்திரவத்தின் போது ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தங்களை கழுவினர்கள்.

வெளிப்படுத்தல் 21:3-5 "மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது. சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும், அவர்: இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார்." என்று பேசப்பட்டதுபோல, தேவனுடைய தெய்வீக நோக்கம் நிறைவடையும்.

பல்வேறு நேரங்களில். பல்வேறு வழிகளில் மணவாளனைப் பற்றியும். மணவாட்டியை பற்றியும் வேதாகமம் சித்தரிக்கிறது. சங்கீதம் 45ல் அவர்கள் மணவாட்டி மற்றும் அவளுடைய தோழிகள் என காண்பிக்கப்பட்டுள்ளது. ஆசரிப்புக் கூடாரத்தின் ஒழுங்கு முறைகளில். ஆரோனின் ஆசாரியத்துவம் மற்றும் லேவியர்களில் இரண்டு வகுப்பார் காணப்படுகிறார்கள். வெளிப்படுத்தல் 7. 144000 பேர்களையும். திரள் கூட்டத்தாரையும் குறிப்பிடுகிறது.

விதைக்கிறவனைப் பற்றிய உவமையில். இயேசு அதிகமாக கனி கொடுப்பவர்களையும். குறைவாக கனிக்கொடுப்பவர்களையும் பற்றி விவரித்தார். இரு பிரிவுகளும் மதிப்புமிக்க கௌரவமான நிலைப்பாட்டை பெற்று. ஜெயம் பெற்றவர்களாக இருக்கிறார்கள். தேவனுடைய இராஜ்யம் இந்த பூமியின் மேல் வரும் போது. இந்த இரு வகுப்பாரும் மனுக்குலத்திற்கு உதவி அளிக்கக்கூடியவர்களாக இருப்பார்கள்.

"அப்பொழுது திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம்போலவும், பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும், ஒரு சத்தமுண்டாகி: அல்லேலூயா, சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம்பண்ணுகிறார். நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன். சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே. பின்னும், அவன் என்னை நோக்கி: ஆட்டுக்குட்டியானவரின் கலியாணவிருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது என்றான். மேலும், இவைகள் தேவனுடைய சத்தியமான வசனங்கள் என்று என்னுடனே சொன்னான்." (வெளிப்படுத்தல் 19:6-9)

**வலிந்த செயற்படுத்தப்பட்டிராத தரநிலை** (The Unstrained standard)

# இரக்கம்



"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்." (நீதிமொழிகள் *28:13* )

*Adapted from a discourse by Br. Michael Nekora*

இரக்கம் என்பதற்கு நியாயமாக எதிர்பார்க்கப் படுவதற்கும் அல்லது கோரப்படுவதற்கும் அதிகமான. பொறுமை மற்றும் கருணையாகும். (*Webster's New World Dictionary*). இரக்கம் என்று வழக்கமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ள இரண்டு எபிரெய வார்த்தைகளுக்கான ஸ்டராங்க்ஸ் விளக்கம் யாதேனில் "தயவு" ஆகும். நீதிமொழிகளிலும், புதிய ஏற்பாட்டின் வழக்கமான கிரேக்க வார்த்தைகளிலும், "தயை அல்லது இரக்கம்" என்ற எபிரெய வார்த்தையை அவர் குறிப்பிடுகிறார்.

### இரக்கம் மற்றும் தேவன்

"கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்து போகிறபோது, அவர்: கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நாலாம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் என்று கூறினார்" (யாத்திராகமம் 34:6,7)

இந்த வார்த்தைகளின் உணர்வு, மொழிபெயர்ப்பாளர் ஜோசப் ரோதர்ஹாமை சிலிர்க்கவைத்தது." அவருடைய நாமம் மற்றும் அவருடைய குணலச்சனங்கள் பற்றின பிதாவினுடைய இந்த மிக அருமையான பிரகடனமானது... வேதாகமத்தின் பல்லவி என்று வர்ணிக்கப்பட தகுதியுடையது. பழைய ஏற்பாடு முழுவதும் சிதறிக் கிடக்கும் இந்த அடிப்படையான வெளிப்பாட்டின் நினைவூட்டல்களினால் பக்தியுள்ள வேதாகம வாசகர்கள் மகிழ்ச்சி அடைவதை தவிர்க்க முடியாது.. இந்தப் பத்தி முழுவதும், வேறெங்கும் காணப்படாது, ஆனால் அதின் நினைவுத்துணுக்குகள் மிகுதியாய் இருக்கும்." என்று ஒரு அடிக்குறிப்பில் அவர் எழுதினார்.

தேவனுடைய இரக்கத்தின் காரணமாகவே இன்று நாம் கிறிஸ்துவ விசுவாசத்தைப் பெற்றுள்ளோம். புறஜாதிகளான நாம் "ஆதலால், நீங்கள் முற்காலத்திலே தேவனுக்குக் கீழ்ப்படியாதிருந்து, இப்பொழுது அவர்களுடைய கீழ்ப்படியாமையினாலே இரக்கம் பெற்றிருக்கிறதுபோல.." (ரோமர் 11:30) நாம் இரக்கத்தை பெற்றிருக்கிறோம் என்று பவுல் கூறுவதற்கு "நியாயமாக எதிர்ப்பார்க்கப்படும் அல்லது கோரப்படுவதற்கும் அதிகமான. பொறுமை மற்றும் கருணை என்று பொருள் ஆகும். நமக்கு எந்த விதமான விசேஷித்த வாய்ப்பை கொடுக்கும் அளவுக்கு தேவனுக்கு எந்த கடமையோ அவசியமோ இல்லை. ஆதாம் மற்றும் ஏவாள் கீழ்ப்படியாமல் போனபோது, எந்த ஒரு நம்பிக்கையும் இல்லாமல் அவர்கள் மரித்திருக்கலாம். தேவனுடைய நீதியின் கீழ் கொடுக்கப்பட்ட தீர்ப்பை மாற்றுவதற்கு எந்த விதமான ஏற்பாடும் இல்லை. மரித்தோரின் உயிர்த்தெழுதல் அவசியம் இல்லை. மேலும் நிச்சயமாக மனித இயல்பிலிருந்து பரலோக இயல்புக்கான மாற்றம் யாரும் கொடுக்கப்படவேண்டிய அவசியம் இல்லை.

தேவனுடைய "தெரிந்தெடுக்கப்பட்ட" ஜனங்களின் அவிசுவாசத்தினால், அவர்கள் நித்தியமாக தொலைந்துவிட்டார்கள் என்று பொருள் அல்ல என்று ரோமர்களுக்கு எழுதிய நிரூபத்தில் பவுல் கற்பிக்கிறார். அவர்கள் அவிசுவாசமாக இருந்தபோதிலும், தேவன் அவர்களுக்கு இரக்கம் காட்டுவார். "எல்லார்மேலும் இரக்கமாயிருக்கத்தக்கதாக, தேவன் எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள்ளே அடைத்துப்போட்டார்." (ரோமர் 11:32)

தேவனுடைய இரக்கமின்றி நாம் ஒன்றுமில்லை. நமக்கு எந்த நம்பிக்கையும் இல்லை. நாம் நம்மை ஒருபோதும் காப்பாற்றிக்கொள்ள முடியாது. தேவனிடமிருந்து சாதகமாக நடத்துதலைப் பெற நாம் எதையும் செய்ததில்லை. நாம் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்டதை விவரிப்பதற்கு சில நேரங்களில் "கிருபை" என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. கிருபை என்பதற்கு "தகுதியற்ற இரக்கம்" என்று பொருள்.

### தேவனுடைய கிருபையை நாம் எவ்வாறு பெறுகிறோம்?

நாம் தேவனுடைய இரக்கத்திற்கு தகுதியற்றவர்களாக இருந்தாலும், நம்முடைய ஆதார வசனத்தின்படி, "தன் பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்" தேவனுடைய ஆசீர்வாதத்தை பெறுவதற்கு முன் பாவத்தை அறிக்கையிடுவது முற்றிலும் அவசியமானது என்று வேதவாக்கியங்களில் தொடர்ச்சியான ஒரு கருத்தாக சொல்லப்பட்டுவருகிறது.

"இரண்டு மனுஷர் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப் போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று, தனக்குள்ளே ஜெபம் பண்ணினான்.ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்." (லூக்கா**18:10-14**)

தாவீது தவறுகள் செய்தார், அவைகளை அவர்

ஒப்புக்கொண்டபோது தேவன் அவைகளை அவருக்கு மன்னித்தார். பத்சேபாளுடன் தவறான நடக்கை. உரியாவின் கொலை போன்ற விபரீதமான விஷயத்தில் கூட தாவீதுக்கு சுட்டிக்காட்டப்பட்டபோது. அவர் தன் தவறுகளை ஒப்புக்கொள்வதில் மிக விரைவாக செயல்பட்டார். தீர்க்கதரிசியாகிய நாத்தான் தாவீதின் பாவங்களை கூறி மிகுதியாக கண்டித்தபோது. "அப்பொழுது தாவீது நாத்தானிடத்தில்: நான் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்தேன் என்றான்; நாத்தான் தாவீதை நோக்கி: நீ சாகாதபடிக்கு, கர்த்தர் உன் பாவம் நீங்கச் செய்தார். ஆனாலும் இந்தக் காரியத்தினாலே கர்த்தருடைய சத்துருக்கள் தூஷிக்க நீ காரணமாயிருந்தபடியினால், உனக்குப் பிறந்த பிள்ளை நிச்சயமாய்ச் சாகும் என்று சொல்லி, நாத்தான் தன் வீட்டுக்குப் போய் விட்டான்."(2சாமுயேல் 12:13,14) என்று நாம் வாசிக்கிறோம்.

தாவீதின் முன்னோடியான சவுல் இதே மனநிலையைப் பெற்றிருக்கவில்லை. 1சாமுயேல் 13ம் அதிகாரத்தில். சவுல் சாமுயேலுக்காக ஏழு நாட்கள் காத்திருந்தார். அவர் வராததினால். செய்யக்கூடாது என்று சவுல் அறிந்திருந்தும் அவர் சர்வாங்க தகனபலிகளை செலுத்தினார். எல்லாம் முடிந்தபோது. சாமுயேல் வந்து. நீ என்ன காரியம் செய்தாய் என்று சவுலை கேட்டார். சவுல் தன்னுடைய நடத்தையை நியாயப்படுத்த முயன்றபோது. "சாமுவேல் சவுலைப் பார்த்து: புத்தியீனமாய்ச் செய்தீர்; உம்முடைய தேவனாகிய கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையைக் கைக்கொள்ளாமற்போனீர்; மற்றப்படி கர்த்தர் இஸ்ரவேலின்மேல் உம்முடைய ராஜ்யபாரத்தை என்றைக்கும் ஸ்திரப்படுத்துவார். இப்போதோ உம்முடைய ராஜ்யபாரம் நிலைநிற்காது; கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனைத் தமக்குத் தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய ஜனங்கள் மேல் தலைவனாயிருக்கக் கட்டளையிட்டார்; கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையை நீர் கைக்கொள்ளவில்லையே என்று சொன்னான்." (1சாமுயேல் 13:13,14 ) என்று சாமுயேல் கூறினார். சவுல் தனது பாவத்தை அறிக்கையிடவில்லை. அவர் மன்னிப்பையும் பெறவில்லை. சாமுயேல் சென்ற பின் சவுல் தன்னுடைய வாழ்க்கையை நடத்தினார் ஆனால் இறுதியில் அவருடைய இராஜ்யபாரத்தை தொலைத்தார்.

பாவத்தை ஒப்புக்கொள்ளாத ஒருவரின் மற்றொரு உதாரணம் - காயீன். காயீன் மிகவும் கோபம் கொண்டவனாக அவனுடைய சகோதரனை கொன்றுப்போட்டான். ஆபேலைக் குறித்து தேவன் காயீனிடம் கேட்டபோது. "நான் என் சகோதரனுக்கு காவலாளியோ?"(ஆதியாகமம் 4:9 ) என்று அவன் தேவனுக்கு பதில் அளித்தான். தேவன் அவனுக்கு தண்டனை வழங்கினார். "அப்பொழுது காயீன் கர்த்தரை நோக்கி: எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்கமுடியாது.அப்படியே காயீன் கர்த்தருடைய சந்நிதியைவிட்டுப் புறப்பட்டு, ஏதேனுக்குக் கிழக்கான நோத் என்னும் தேசத்தில் குடியிருந்தான்."(ஆதியாகமம் 4:13,16 )காயீன் தனது பாவத்தை ஒப்புக்கொள்ளவும் இல்லை. அவர் மனந்திருப்பியதை வெளிப்படுத்தவும் இல்லை. இதன் விளைவாக. எந்த மன்னிப்பும் கொடுக்கப்படவில்லை.

ஆதாம் கூட தன் பாவத்தை ஒப்புக்கொள்ளவும் இல்லை. மனந்திருப்புதலை வெளிப்படுத்தவும் இல்லை. "அதற்கு ஆதாம்: என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான்." (ஆதியாகமம் 3:12) ஆதாம் செய்த காரியத்திற்கு மனமறிய எந்தவிதமான வருந்துதலையும் அவர் தெரிவிக்கவில்லை.

இது தேவனோடு ஒரு நல்லுறவை காத்துக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கும் எவருக்கும் ஆபத்தான நிலையாகும். ஏனெனில். "நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்." (ஏசாயா 57:15) என்று அவர் குடியிருக்கும் இடத்தை மிக தெளிவாக கூறியுள்ளார்.

தேவன் உன்னதமான மற்றும் பரிசுத்தமான இடத்தில் வாசம் செய்கிறார் என்பதில் நமக்கு எந்த ஆச்சரியமும் இல்லை. ஆனால் அண்டசராசரத்திற்கும் தேவனானவர். தாழ்மையும். செய்த பாவத்திற்காக வருந்துகிற இருதயங்களிலும் வசிக்கிறார் என்பதே நமக்கு ஆச்சரியமாக உள்ளது. நம்முடைய வாழ்க்கையில் பாவங்களை தவிர்க்க முடியாது. ஆனால் நம் குறைபாடுகள் மற்றும் தோல்விகளை ஏற்றுக்கொள்வதன் மூலம் சரியான உள்நோக்கம் வெளிப்படுத்தப்பட்டால். நமக்கு தேவையான தூய்மை கிடைக்கும். "உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி."(1யோவான் 1:9)

நாம் கிறிஸ்துவின் பெயரால் பெயரிடப்பட்டிருப்பதால். நாம் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறோம். நாம் தேவனிடத்தில் நம்மை அர்ப்பணித்தால். கிறிஸ்துவை நம்முடைய தனிப்பட்ட இரட்சகர் என்று ஏற்றுக்கொள்வோம். முதலில் நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு. ஒரு மீட்பரின் அவசியத்தை நாம் உணர்ந்துகொள்ளாவிட்டாலும் இந்த ஒரு நிலையை நாம் ஒருபோதும் அடையமாட்டோம். தங்களது பாவமான நிலையை ஏற்றுக்கொள்ளாதவர்கள். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் அவர்கள் அவரை ஏற்றுக்கொள்வதற்கு காரணம் இல்லை. (R2235காண்க)

### நாம் இரக்கம் பெற்றபின் என்ன நடக்கிறது?

தேவன் நமக்கு கொடுத்திருக்கும் இரக்கத்தை. நாம் தொடர்புகொள்ளும் அனைவரிடத்திலும். வெளிப்படுத்த வேண்டும் என்பதை இயேசு மிக தெளிவாக கூறியுள்ளார். நம்முடைய எஜமான். எப்போதும் சொல்லும். எளிதாக புரிந்துகொள்ளக்கூடிய உவமைகளில் ஒன்றில் இது அழகாக விவரிக்கப்பட்டுள்ளது.

"அப்பொழுது, பேதுரு அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும்? ஏழுதரமட்டுமோ என்று கேட்டான். அதற்கு இயேசு: ஏழுதரமாத்திரம் அல்ல, ஏழெழுபதுதரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன். எப்படியெனில், பரலோகராஜ்யம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப் பார்க்கவேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அவன்

கணக்குப்பார்க்கத் தொடங்கினபோது, பதினாயிரம் தாலந்து கடன் பட்டவன் ஒருவனை அவனுக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள். கடனைத்தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதபடியால், அவனுடைய ஆண்டவன் அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, கடனைத் தீர்க்கும்படிக் கட்டளையிட்டான். அப்பொழுது, அந்த ஊழியக்காரன் தாழ விழுந்து, வணங்கி: ஆண்டவனே! என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான். அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுதலைபண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான். அப்படியிருக்க, அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப்போகையில், தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன் பட்டிருந்தவனாகிய தன் உடன்வேலைக்காரரில் ஒருவனைக் கண்டு, அவனைப் பிடித்து, தொண்டையை நெரித்து: நீ பட்ட கடனை எனக்குக் கொடுத்துத் தீர்க்கவேண்டும் என்றான். அப்பொழுது அவனுடைய உடன் வேலைக்காரன் அவன் காலிலே விழுந்து: என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று, அவனை வேண்டிக்கொண்டான். அவனோ சம்மதியாமல், போய், அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவலில் போடுவித்தான். நடந்ததை அவனுடைய உடன் வேலைக்காரர் கண்டு, மிகவும் துக்கப்பட்டு, ஆண்டவனிடத்தில் வந்து, நடந்ததையெல்லாம் அறிவித்தார்கள்.அப்பொழுது, அவனுடைய ஆண்டவன் அவனை அழைப்பித்து: பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியினால் அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன். நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன்வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி,அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான். நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்." (மத்தேயு18:21-35)

இந்த உவமையின் பொருள் தெளிவாக உள்ளது. பத்தாயிரம் தாலந்து கடன்பட்டவன் நம்மை அடையாளப்படுத்துகிறது. நாம் கொண்டிருக்கும் எல்லாவற்றையும் கொடுத்தாலும் அந்த கடனை ஒருபோதும் திருப்பிச் செலுத்த முடியாது. மகா இராஜாவாகிய தேவனுடைய இரக்கத்தின் வழியாகவே. இந்த கடன் மன்னிக்கப்படுகிறது. பின்னர் நாம் விடுதலையானோம். இப்போது நம்மிடம் கடன்பட்டிருக்கும் ஒருவரை சந்திக்க நேரிட்டால். ஒருவேளை நாம் செய்த சில நன்மைகளுக்கு நன்றி சொல்ல மறந்துவிட்ட அவரை பார்த்தால். நாம் எப்படி நடந்துக்கொள்வோம் ? இரக்கத்துடனா ? இந்த ஒரு செயல் நம்மிடம் எளிதாக வரவில்லை என்றால். இரக்கத்துடன் செயல்பட. நம்மை நாம் கட்டாயப்படுத்த வேண்டும். இறுதியில் நாம் இரக்கமுள்ள செயலை உடனடியாகவும் மனப்பூர்வமாகவும் செய்வோம்.ஆனால் நாம் மீண்டும் மீண்டும் இரக்கத்தை வெளிப்படுத்தாவிட்டால். பரலோக தந்தை ஏற்கனவே நமக்குத் தந்திருக்கும் கிருபையை நாம் இழந்துவிடுவோம்.

இயேசு கொடுத்த உவமையின் குறிப்பை கவனியுங்கள் :"நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்" (வசனம்35)

மற்றவர்களின் தவறு. பாவம் அல்லது கறைபாட்டை நாம் மனப்பூர்வமாக மன்னித்தால். அந்த நபர் நம்மிடம் மன்னிப்பு கேட்கிறாரோ. இல்லையோ சரி. நம்முடைய இரக்கத்தின் மனோபாவத்தை செயல்படுத்துபவர்களாக இருப்போம். நம்முடைய இருதயத்தின் மனப்பான்மையே சோதிக்கப்படுகிறது. நம்முடைய எல்லா குற்றங்களுக்கும் தேவனிடத்தில் இருந்து மன்னிப்பு பெறுவதற்காக மிகுந்த ஜாக்கிரதையுடன் நம் மனதைக் கவனித்துக் கொள்ளவேண்டும். "நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது, ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்." (மாற்கு 11:25)

நம்முடைய மன்னிப்பை கேட்காத அல்லது மனம் வருந்துதலின் செயலை வெளிப்படுத்தாத ஒரு சகோதரனையும். நாம் அவர்களை மன்னித்து இரக்கம் காட்டவேண்டியது மிக அவசியம் என்பதை நாம் கவனிக்கவேண்டும். ஒருவருக்கு எதிராக நம்முடைய குற்றசாட்டு நியாயமாக இருந்தாலும். இல்லாவிட்டாலும் அது அவசியமில்லை. நாம் கிறிஸ்தவர்களானால். நம்முடைய எஜமான் முன் வைத்து சென்ற மாதிரியை நாம் பின்பற்ற வேண்டும். நிச்சயமாக நாம் தேவன் அல்ல. மற்றொருவருடைய பாவங்களை அழிக்க முடியாது. ஆனால் இரக்கத்தை காண்பிப்பதினால். தேவனுடைய இந்த அற்புதமான நற்குணத்தை நாம் பிரதிபலிக்க முடியும்.

### ஆண்டவரின் மாதிரி ஜெபத்தை கவனியுங்கள்

"எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். "(மத்தேயு6:12) "எங்கள் கடன்களை மன்னியும்" என்ற வசனத்தில் "கடன்கள்" என்ற வார்த்தை நிதியைப் பற்றி அர்த்தத்தில் மட்டும் குறிப்பிடவில்லை. இரக்கம். கனிவு. கருணை போன்ற சரியான நடத்தை என்று எந்த சூழ்நிலையிலும் இருக்கலாம். நமக்கு எதிராக தீங்கிழைத்தவர்களை மன்னிக்க விருப்பமில்லாதபோது. நம்முடைய அக்கிரமங்களை மன்னித்துவிடும்படி. இந்த பிரபஞ்சத்தின் மகா இராஜாவிடம் கேட்பதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. இந்த உவமையில் உள்ள ஊழியக்காரனை நினைவு இருக்கிறதா ? சக ஊழியருக்கு இரக்கம் காட்ட விரும்பாத போது. அவர் பெற்றிருந்த சுதந்திரத்தை அவர் இழந்தார்.

இயேசு தம்முடைய மலைப்பிரசங்கத்தில். பாக்கியவான்களைப் பற்றி தொடர்ச்சியாக வரிசைப்படுத்தினார். அதில் ஒன்று. "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள். "(மத்தேயு5:7 ) இவ்வாறு கூறுகிறது.

இரக்கமற்றவர்கள். "நியாயமான எதிர்ப்பார்க்கப்படும் அல்லது கோரப்படுவதற்கும் அதிகமாக பொறுமை மற்றும் கருணையை" காண்பிக்க விருப்பம் இல்லாதவர்கள். பரலோகத் தகப்பனிடமிருந்து இரக்கம் பெற மாட்டார்கள் என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. தீங்கிழைத்தவர்களை

மன்னிப்பதோடு. இன்னும் அதிகமாகவும் செய்யவேண்டும் என்று இயேசு தம்முடைய சீஷர்களிடம் சொன்னார். அவர்கள் மற்றொரு நபரைத் தவறாகப் புரிந்துகொண்டார்கள் என்பதை உணரும் போது அவர்கள் உறவை சரிசெய்ய முயற்சிக்க வேண்டியிருந்தது.

"ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறைஉண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில்,அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து. " (மத்தேயு5:23,24) என்று இயேசு கூறினார்.

ஒரு சகோதரன் நம்மால் தீங்கிழைக்கப் பட்டதினால். நமக்கு எதிராக தவறான எண்ணம் வைத்திருக்கலாம். ஆகவே. நாம் தேவனிடத்தில் வருகையில் (பலிபீடத்திற்கு பலி செலுத்துவதற்கு வரும்போது). அந்த சகோதரனின் நியாயமான கோபத்தை நினைவுகூர்ந்தவர்களாக. அதை குறித்து ஏதோ காரியத்தை உடனடியாக செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம். பிரச்சனைகளை சரிசெய்து காயங்களைக் குணப்படுத்த முயற்சி செய்யவேண்டும். அதற்குபின் நாம் தேவனிடத்தில் வரலாம்.

## நாம் இரக்கமுள்ளவர்களாக இருக்கவேண்டும்

நம்முடைய பாவங்களுக்காக தேவன் அளித்திருக்கும் மன்னிப்பு நிபந்தனைக்குட்பட்டது. தேவன் தந்திட்டவைகளை நாம் கடைப்பிடிக்காவிட்டால். நாம் பெற்றுக்கொண்ட அனைத்தையும் இழந்துவிடுவோம். அத்தகைய மகத்தான கடமையில் அவர் மன்னிப்பைப் பெற்றதினால். மற்றவர்களிடம் இரக்கமுள்ளவராக அவர் இருக்கிறார் என்று உவமையில் உள்ள இராஜா. அந்த அடிமையினிடம் ஒருபோதும் சொல்லவில்லை. ஒருவர் சகலத்தையும் இழக்கும் அளவுக்கு குருடாகிவிட்டார் என்று அந்த உவமையிலிருந்து காண்கிறோம்."நீங்கள் உங்கள் சக ஊழியக்காரர்களை மன்னிக்காவிட்டால். தேவன் உங்களை மன்னிக்கமாட்டார்.

தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிற மூன்று காரியங்களை மீகா சுருக்கமாக விவிரிக்கிறார் " நியாத்தை செய்து... இரக்கத்தை சிநேகித்து.... தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையுடன் நடக்கவேண்டும்." (மீகா 6:8)

நீங்கள் இரக்கத்தை விரும்புகிறீர்களா ? அதைப் பற்றி யோசியுங்கள். உங்கள் சகோதரனோ அல்லது சகோதரியோ உங்களுக்கு எதராக செய்த குற்றத்திற்காக உங்களிடத்தில் வந்து. மன்னிப்பை கேட்கவேண்டும் என்று நீங்கள் இன்னும் காத்திருக்கிறீர்களா ? அப்படியானால். நீங்கள் இன்னும் இரக்கத்தை நேசிக்கவில்லை.

"மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தையத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள், இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டுமே." (மத்தேயு23:23)

நீங்கள் மிக கவனமாக. உங்களுக்குண்டான தசமபாகங்களை செலுத்துகிறபோதும். சில அநீதிகள் மற்றவர்களால் இதுவரைக்கும் திருத்தப்படாததை நீங்கள் நினைவில் கொண்டிருக்கிறீர்களா? அப்படி செய்வீர்களானால். நீங்கள் பரிசேயர்களைபோல. தசமபாகத்தை காட்டிலும் முக்கியமான இரக்கத்தை விட்டுவிட்டவர்களாக இருப்பீர்கள். மற்றவர்களுடைய பாவங்களையும். குறைபாடுகளையும் நினைவில் வைத்துக்கொள்வது மிக மோசமானது. பழிவாங்குதல் அல்லது அதை பெறவேண்டிய ஒரு வழியைத் தேடுவது மிக மோசமானதாக உள்ளது.

"ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யா திருங்கள்; எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள். பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்.அன்றியும், உன் சத்துருபசியாயிருந்தால் அவனுக்குப் போஜனங்கொடு, அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய். நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு. "(ரோமர் 12:17, 19-21 )

சத்தியம் மிக முக்கியமானது. ஆனால் நம்மை இரட்சிக்க அது போதுமானது அல்ல."கிருபையும் சத்தியமும் உன்னைவிட்டு விலகாதிருப்பதாக; நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு, அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக்கொள். "(நீதிமொழிகள் 3:3)

சத்தியத்தையும். இரக்கத்தையுமே நாம் தழுவ வேண்டும். ஒருவர் நம்மீது பதற்றம் கொண்டவராக இருப்பதை எளிது படுத்த நாம் ஏதேனும் மாற்று முயற்சிகள் எடுக்கும் பொறுப்பு நம்மிடம் உள்ளது என்பதை உணர்கிறோமா - சொல்ல வருத்தமாக உள்ளது. உங்களுடைய மனம் கூட உங்களுக்கு விரோதமாக செய்த காரியத்தின் நிமித்தம் எவ்வாறு பழிவாங்கலாம் என்ற எண்ணம் தோன்ற அனுமதித்துள்ளீர்களா - அப்படியானால் இரக்கம் நம்மிடம் இருந்தது விலகிவிட்டது.

"ஏனென்றால், இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்; நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்" (யாக்கோபு2:13)

மற்றவர்களை மன்னிக்கவேண்டும் என்ற காரியம் இயேசுவின் போதனைகளின் பெரும்பகுதியில் இடம்பெற்றுள்ளது. இயேசுவை பின்பற்றக்கூடியவர்கள். தீமையை நன்மையினால் வெல்லவேண்டும். உங்களுக்கு எதிராக எப்போதெல்லாம் குற்றம் செய்யப்படுகிறதோ. அப்போதெல்லாம் இரக்கத்துடன் அதை மேற்கொள்வதற்கான வாய்ப்பு என்று எண்ணி அதை வரவேற்கவேண்டும். இவ்வழியில் நீங்கள் தேவனுடைய சாயலாக வளர்ச்சி அடைவீர்கள்.

# மூன்று கண்ணோட்டங்களிலிருந்து தேவனுடைய ஞானம்



"ஞானம் தன் வீட்டைக்கட்டி, தன் ஏழு தூண்களையும் சித்திரந்தீர்த்து" (நீதிமொழிகள் *9:1*)

*Jerry Monette*

மூன்று ஞானமுள்ள புத்தகங்கள் - நீதிமொழிகள். பிரசங்கி மற்றும் யோபு - எதை கற்பிக்க முயலுகிறது மேலும் அதை எப்படி போதிக்கிறது ? ஞானமுள்ள இலக்கியம். பழைய ஏற்பாட்டு புத்தகங்களிலிருந்து வேறுப்பட்டுள்ளது. அதாவது இது ஒரு தேசத்தை அல்ல தனிப்பட்ட நபரைப் பற்றி கூறுகிறது. இந்த புத்தகங்கள் நிர்வாக ரீதியான மதத்தைப் பற்றியோ அல்லது உடன்படிக்கையின் ஜனங்களாகிய ஒரு தேசத்தைப் பற்றியோ மிக குறைவாகவே கூறுகிறது. இவைகள் தினசரி வெற்றிகரமான தார்மீக வாழ்க்கைக்கு முக்கிய கவனம் செலுத்துகிறது.

பலவிதமான வாழ்க்கை சூழ்நிலைகளில். தெய்வீக ஞானத்தின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி ஒரு நல்ல வாழ்க்கையை எப்படி பெறமுடியும் என்பதை மட்டும் இந்த ஞானமான மனுஷர் கற்பிக்க முயற்சிக்காமல். "நல்ல ஜனங்களுக்கு தீமையான காரியங்கள் சம்பவிப்பது ஏன்?" என்ற பழைய கேள்விகளையும் கேட்கிறார்கள். இந்த புத்தகங்கள் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு மட்டும் அல்ல மாம்ச இஸ்ரயேலர்களுக்காகவும் எழுதப்பட்டது. ஆகவே இந்த புத்தகங்களில் உள்ள பாடங்களை நாம் கவனிக்கும்போது. "இது மாம்ச இஸ்ரயேலுக்காகவா அல்லது ஆவிக்குரிய இஸ்ரயேலுக்காகவா அல்லது இருவருக்காகவா? என்று நாம் கேட்கிறோம்.

மாம்ச இஸ்ரயேலர்களுக்கும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கும் ஒரேவிதமான வாக்குத்தத்தத்தங்கள் கொடுக்கப்படுவில்லை. பெரும்பாலும் அவர்கள் ஒன்றுக்கொன்று எதிராகவே உள்ளது. மாம்ச இஸ்ரயேலுக்கு மாம்சத்திற்குரிய ஆசீர்வதங்கள் வாக்களிக்கப்பட்டிருந்தது. மறுபுறத்தில். ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய நமக்கு ஆவிக்குரிய வெகுமதியைப் பெறுவதற்காக பூமிக்குரிய ஆசீர்வாதங்களை பலிசெலுத்த வேண்டுமன கேட்டுக்கொள்ளப்படுகிறோம்.

ஆயிர வருடங்களாக. இந்த ஞானமுள்ள புத்தகங்கள் பிரத்தியேகமாக மாம்ச இஸ்ரயேலுக்கு மட்டும் சொல்லர்த்தமாக பேசப்பட்டது. அவைகள் ஞானமுள்ள ஆசிரியர்களாக. காரியங்கள் சரியாக நடக்கும்போதும். சரியில்லாமல் நடக்கும்போதும். ஆலோசனை கொடுத்து. வாழ்க்கையைப் பற்றியப் படிப்பினைகளை தந்தது. யோபு ஒரு நபராக. இந்த பாடங்களை வாழ்ந்தும். அனுபவித்தும் இருக்கிறார். ஞானத்தின் இந்த மூன்று புத்தகங்கள். ஒவ்வொன்றும் வித்தியாசமாக இருந்தாலும். மனித அனுபவங்களைப் பற்றியும். தேவனுக்கு பிரியமான ஒரு வாழ்க்கை வாழக்கூடிய ஒரு சமநிலையான கண்ணோட்டத்தைக் கொடுக்கின்றது.

இது மாம்ச இஸ்ரயேல் அல்லது ஆவிக்குரிய இஸ்ரயேலுக்கு பொருந்தக்கூடியதா என்று பார்க்காமல். இங்கு நாம் பொதுவான பாடங்களைப் பார்க்கிறோம்.

## நீதிமொழிகள்

மூன்று ஞானமுள்ள புத்தகங்களில். முதல் புத்தகமாக கருதப்படுவது. நீதிமொழிகள் என்ற புத்தகம். வாழ்க்கையின் சூழ்நிலைகளில் நீங்கள் சரியான விஷயங்களைச் செய்தால். நீங்கள் வெகுமதி பெறுவீர்கள். நீங்கள் அவ்வாறு செய்யாவிட்டால். உங்கள் மோசமான தேர்வுகளுக்காக அதன் விளைவுகளினால் உபத்திரவப்படுவீர்கள்.

இப்பிரபஞ்சத்தின் ஒரு சட்டத்தை போல. நம் வாழ்வில் எல்லாவற்றிலும். காரணம் மற்றும் அதன் பலன் என்ற உறவு உண்டு என்று நீதிமொழிகள் கூறுகிறது. கண்ணுக்கு தெரியாத இந்த சக்தி அல்லது கொள்கையே ஞானமாகும். எபிரெயரில் இதை ஹோக்மா (*hochma*) என்று அழைக்கப்படுகிறது. இது தேவனுடைய ஒரு பண்பாகும். குறிப்பாக அவர் இப்பிரபஞ்சத்தை உருவாக்க பயன்படுத்திய ஒன்றாகும். "கர்த்தர் ஞானத்தினாலே பூமியை அஸ்திபாரப்படுத்தி, புத்தியினாலே வானங்களை ஸ்தாபித்தார்." (3:19) என்று நீதிமொழிகள் கூறுகிறது. "கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது! அவைகளையெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர்; பூமி உம்முடைய பொருள்களினால் நிறைந்திருக்கிறது. " (சங்கீதம் 104:24)."ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.. பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக்கொண்டிருந்தார். " (ஆதியாகமம் 1:1-2) என்று நாம் வாசிக்கும்போது. பிரபஞ்சத்தை உருவாக்க தேவன் ஞானத்தை பயன்படுத்தினார் என்ற கருத்திற்கு வரலாம்.

பூமியின் நிலையற்ற தன்மை மற்றும் அதில் காணப்பட்ட வெற்றிடமானது. இன்னும் மனித வாழ்வுக்கு பூமி ஆயத்தமாக இல்லை என்பதை குறிப்பிடுகிறது. இந்த பூமியை மனித குடியிருப்புக்கு ஏற்றதாகவும். சிருஷ்டிப்பதற்கும் தேவனுடைய ஆரம்ப கட்ட வேலைகளை. தேவ ஆவி ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தது என்று விவரிக்கப்படுகிறது. தேவன் அவருடைய ஆவியைக்கொண்டு சிருஷ்டிப்பின் வேலைகளை செய்தார். சிருஷ்டிப்புகளில் தேவனுடைய ஞானம். அவருடைய ஆவியை வெளிப்படுத்துகிறது என்று நீதிமொழிகள் கூறுகிறது.

ஞானம் உலகத்தின் பெரிய போர்வைக்குள் பிணைக்கப்பட்டுள்ளது என்று நீதிமொழிகள் போதிக்கிறது. கேட்கும் ஒவ்வொரு இஸ்ரயேலருக்கும் அது கிடைக்கிறது. இது நம்முடைய வாழ்க்கையில் தேவ

ஆவி செய்யக்கூடிய கிரியைக்கு ஒத்திருக்கிறது. எனவே நீதிமொழிகளின்படி, ஜனங்கள் ஞானமுள்ள, நல்ல மற்றும் நீதியான முடிவுகளை எடுக்கும்போதெல்லாம் ஹேக்மாவால் (*hochma*) வழிநடத்தப்படுகிறார்கள். மோசமான முடிவை எடுத்துவரும் எவரும் ஹேக்மாவுக்கு(*hochma*) எதிராக வேலை செய்கிறார்கள்.

ஞானத்தின் இந்த கருத்தை ஒரு பெண்ணாக, இந்த நீதிமொழி சித்தரிக்கிறது. அவளை ஞானம் என்று அழைக்கிறது.

"ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள். அதின் வர்த்தகம் வெள்ளி வர்த்தகத்திலும், அதின் ஆதாயம் பசும்பொன்னிலும் உத்தமமானது. முத்துக்களைப்பார்க்கிலும் அது விலையேறப்பெற்றது; நீ இச்சிக்கத்தக்கதொன்றும் அதற்கு நிகரல்ல. அதின் வலதுகையில் தீர்க்காயுசும், அதின் இடதுகையில் செல்வமும் கனமும் இருக்கிறது. அதின் வழிகள் இனிதான வழிகள், அதின் பாதைகளெல்லாம் சமாதானம். அது தன்னை அடைந்தவர்களுக்கு ஜீவவிருட்சம், அதைப் பற்றிக்கொள்ளுகிற எவனும் பாக்கியவான்." (நீதிமொழிகள் 3:13-18)

இங்கே சித்திரிக்கப்பட்ட படம், ஞானமாகிய அந்த பெண், பூமியின்மேல் எங்கும் உலாவி, அழைப்பு விடுத்து, அவளிடம் கேட்டு, கற்றுக்கொள்ள விரும்பும் யாவருக்கும், தன்னை கிடைக்கும்படி செய்கிறாள். நீங்கள் ஞானத்தை அணுகி, அதை பயன்படுத்தினால், நீங்கள் ஒரு நல்ல வாழ்க்கையை உங்களுக்காக உருவாக்குவீர்கள். ஆனால் இதை ஒருவர் எவ்வாறு செய்வது?

ஞானமானது தேவனுடைய பண்பாக இருப்பதினால், ஒருவர் நன்மை மற்றும் தீமைப் பற்றியதான தேவனுடைய வரையறையை மதிக்கத் தொடங்கவேண்டும்.

இந்த எல்லை கோடுகளை கற்றறிவதும், அவைகளை கடந்து செல்லாமல் இருப்பதே உண்மையான ஞானத்திற்கான ஒரே வழியாகும். அனுபவத்தின் மூலமாக ஞானம், இலக்கியம் பற்றிய ஆய்வு இதில் அடங்கும்.

நீதிமொழிகளின் புத்தகத்தில், வாழ்க்கையின் எல்லா அம்சங்களைப் பற்றி, நூற்றுக்கணக்கான நீதிமொழிகளும் சொற்களும் உள்ளது. ஞானம் பயன்படுத்தப்பட்டு, அதன் ஞானமான யோசனையை பின்பற்றினால், வாழ்க்கையில் வெற்றியை நோக்கி நம்மை வழிநடத்தும். தெய்வீக கொள்கைகளின் அடிப்படையில், ஞானமுள்ள தீர்மானங்களை எடுங்கள். இயல்பாக காரியங்கள் நன்றாக வேலை செய்யும்.

நீதிமொழிகள் ஒரு அழகான புத்தகம். ஆனால் வாழ்க்கை எப்போதுமே அவ்வழியில் வேலை செய்யாததினால், அது எளிதானதல்ல என்று சிலர் சொல்லலாம். நல்லவர்களும், ஞானிகளும் பாதிக்கப்படுகிறார்கள், புத்தியீனமானவர்கள் சிலநேரங்களில் வெகுமதி அளிக்கப்படுகிறார்கள். ஞானம் இதை எப்படி விளக்குகிறது?

**பிரசங்கி**

ஞானத்தின் அடுத்த புத்தகம், பிரசங்கி. இது பிரசங்கியினால் எழுதப்பட்டது. ஞானத்தை பயன்படுத்தி வாழ்க்கையில் வெற்றியை உறுதிப்படுத்துவதாக நினைத்தால், மீண்டும் யோசிக்கவும். ஏனெனில், சூரியனுக்கு கீழ், வாழ்க்கை மாயையாக உள்ளது. "மாயை, மாயை எல்லாம் மாயை." இந்த ஒரு சொற்றொடர், இந்த புத்தகத்தில் பிரசங்கியால் சுமார் 40 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. "vanity" என்ற ஆங்கில வார்த்தை *hebel* என்ற எபிரெய வார்த்தையிலிருந்து வந்தது. இதற்கு வெறுமையாய், தோன்றி மறைகிற அல்லது திருப்தியற்ற என்று பொருள்படுகிறதாக ஸ்டிராங்க்ஸ் எண் 1872 வரையறுக்கிறது. இருப்பினும், பழைய ஏற்பாட்டின் ஜெசீனியஸ் எபிரெய அகராதி அதை ஒரு நீராவி, ஒரு மூடுபனி அல்லது இருள் என்று விவரிக்கிறது.

வாழ்க்கை வெறுமையானது என்று பிரசங்கி சிந்தித்திருந்தால், அதை புரிந்துக்கொள்ளும் முயற்சியில் நேரத்தை விரயமாக்கியிருக்க மாட்டார். வாழ்க்கை என்பது சில நேரங்களில புரிந்துக்கொள்ளமுடியாத ஒரு மூடுபனியைப் போலிருக்கும் என்று அவர் பொருள்படுத்துகிறார். அதன் மத்தியில் ஒருவர் எதையும் தெளிவாக காணமுடியாது. பிரசங்கி நீதிமொழிகளுக்கு ஒரு எதிரீடு செயலாகும். தற்போது நீங்கள் பெறுவதற்கு தகுதியானதை எப்போதும் நீங்கள் பெறுவதில்லை என்று இது கூறுகிறது. மேலும் வாழ்க்கையின் விளைவுகளை நீங்கள் கட்டுப்படுத்த முடியாது. சூரியனுக்கு கீழ் இந்த வாழ்க்கை சிலநேரங்களில் வெறுமையாக அல்லது மாயையாக உள்ளது.

தேவன் காரியங்களை மறைத்து வைத்திருக்கிறார். காரியங்கள் நடந்துக்கொண்டே இருக்கிறது ஏன்? இதை பிரசங்கி எவ்வாறு விளக்குகிறார்? மனித ஞானத்தை பயன்படுத்தி இதை அறிந்துக்கொள்ள முடியாது என்று பிரசங்கி கூறுகிறார். "நான் ஞானத்தை அறியவும், மனுஷன் இரவும் பகலும் கண்ணுறக்கமில்லாமல் பூமியிலே செய்யும் வேலைகளைப் பார்க்கவும் என் மனதைச் செலுத்தினபோது,தேவன் செய்யும் சகல கிரியைகளையும் நான் கவனித்துப்பார்த்து, சூரியனுக்குக்கீழே செய்யப்படும் கிரியையை மனுஷன் கண்டுபிடிக்கக்கூடாதென்று கண்டேன். அதை அறியும்படி மனுஷன் பிரயாசப்பட்டாலும் அறியமாட்டான்; அதை அறியலாம் என்று ஞானி எண்ணினாலும் அவனும் அதை அறிந்துகொள்ளமாட்டான்."(பிரசங்கி 8:16-17) வேறு வார்த்தைகளில் கூறுவதனால், மனித பகுத்தறிவுகளின் சிறந்த, சீரற்ற, எதிர்பாராத மற்றும் விளக்கமில்லாத திறனற்ற வாழ்க்கைக்கு பெரும்பாலும் தற்செயலாக மட்டுமே விளக்கமுடிகிறது.

பிரசங்கி 9:11-12: "நான் திரும்பிக்கொண்டு சூரியனுக்குக் கீழே கண்டதாவது: ஓடுகிறதற்கு வேகமுள்ளவர்களின் வேகமும், யுத்தத்துக்குச் சவுரியவான்களின் சவுரியமும் போதாது; பிழைப்புக்கு ஞானமுள்ளவர்களின் ஞானமும் போதாது; ஐசுவரியம் அடைகிறதற்குப் புத்திமான்களின் புத்தியும் போதாது; தயவு அடைகிறதற்கு வித்துவான்களின் அறிவும் போதாது; அவர்களெல்லாருக்கும் சமயமும் தேவச்செயலும் நேரிடவேண்டும். தன் காலத்தை மனுஷன் அறியான்; மச்சங்கள் கொடிய வலையில் அகப்படுவதுபோலவும், குருவிகள் கண்ணியில் பிடிபடுவதுபோலவும், மனுபுத்திரர் பொல்லாத காலத்திலே சடிதியில் தங்களுக்கு நேரிடும் ஆபத்தில் அகப்படுவார்கள்."

பறவைகள் மற்றும் மீன், வலையில் பிடிப்படும் வரை சாதாரணமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நாமும் அதுபோல இருக்கிறோம். நாம் எல்லாவற்றையும் சரியாக செய்துக்கொண்டிருந்தாலும், உபத்திரவத்தின் வலையில் சிக்கிக்கொள்கிறோம். நேரம் மற்றும் வாய்ப்பு அனைவருக்கும் நடக்கிறது.

பிரசங்கி 12:13 "காரியத்தின் கடைத் தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே." என்று கூறி முடிக்கிறார். நாம் வெகுமதி அளிக்கப்படுவோம் என்பதற்காக அல்ல. நாம் செய்வது சரியானது என்று முழுமனதுடன் நம்புகிறதினால் நாம் தேவனுக்கு பயந்து அவருடைய கற்பனைகளை காத்துக்கொள்கிறோம். தெய்வீக கொள்கையின்படி வாழவேண்டும். அதன் முடிவுகளைப் பற்றி கவலைப்படாமல், தேவனிடத்தில் விட்டுவிடவேண்டும்.

"நீ போய், உன் ஆகாரத்தைச் சந்தோஷத்துடன் புசித்து, உன் திராட்சரசத்தை மனமகிழ்ச்சியுடன் குடி; தேவன் உன் கிரியைகளை அங்கீகாரம் பண்ணியிருக்கிறார். உன் வஸ்திரங்கள் எப்பொழுதும் வெள்ளையாயும், உன் தலைக்கு எண்ணெய் குறையாததாயும் இருப்பதாக. சூரியனுக்குக்கீழே தேவன் உனக்கு நியமித்திருக்கிற மாயையான நாட்களிலெல்லாம் நீ நேசிக்கிற மனைவியோடே நிலையில்லாத இந்த ஜீவவாழ்வை அநுபவி; இந்த ஜீவனுக்குரிய வாழ்விலும், நீ சூரியனுக்குக்கீழே படுகிற பிரயாசத்திலும் பங்கு இதுவே. செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்; நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே"(பிரசங்கி 9:7-10)

இங்கு பிரசங்கியின் செய்தி என்ன ? சரி, தவறு அல்லது ஒழுக்கம், ஒழுக்கக்கேடு, அல்லது தேவனுக்கு பிரியமாக அல்லது பிரியமில்லாத, போன்றவற்றை குறித்து எந்த கவலையும் படாமல் புசித்து, குடித்து, மகிழ்ந்து, தற்போது நம்மை சந்தோஷிப்பிக்கும் காரியங்களை செய்யவேண்டுமா ? இது தான் பிரசங்கியின் ஆலோசனையா? இல்லை. இதுவல்ல.

இது தான் அவருடைய அறிவுரை: உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் கட்டுப்படுத்த முடியாது என்பதால், நாம் கட்டுப்படுத்த முடியாத விஷயங்களைப் பற்றி பேசுவதை நிறுத்தவேண்டும். நம்முடைய பிடியை தளர்த்துவோம். வாழ்க்கையில் நம்முடைய கட்டுபாடில்லாத எந்த விஷயங்களையும் நம்முடைய திறந்த கையில் வைத்திருக்க கற்றுக்கொள்வோம். ஏனெனில், இந்த வாழ்க்கையில் நாம் உண்மையில் முழு கட்டுபாட்டை வைத்திருக்கும் ஒரே காரியம் - தற்போதைய தருணத்தில் நம்முடைய அணுகுமுறையாகும்.

எனவே, சூரியனுக்கு கீழ் ஒரு நல்ல உணவு புசிப்பது மற்றும் நீங்கள் விரும்பும் ஜனங்களோடு நல்ல உரையாடல்கள் செய்வதை தெரிவு செய்யுங்கள். உங்கள் மனைவி அல்லது உங்கள் கணவரின் அன்பையும் தோழமையின் ஒவ்வொரு தருணத்தையும் அனுபவிக்கத் தெரிவு செய்யுங்கள். தேவனிடத்திலிருந்து பெற்ற இந்த நல்ல அன்பளிப்புகளை பாராட்டவும், அனுபவிக்கவும் தெரிவு செய்யுங்கள். ஆனால் தீமையான காரியங்கள் உங்கள் வழியில் வந்தால், உங்கள் மனப்பான்மையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதை நீங்கள் நினைவில் வையுங்கள். நன்மையும், தீமையும் நம் அனைவருக்கும் நிகழக்கூடியவை. இவைகள் இந்த வாழ்க்கையில் ஒரு பகுதியாகும். இவைகளும் கூட தேவனிடத்திலிருந்து வரும் பரிசுகளாகும்.

பிரசங்கியின் புத்தகத்திலிருந்து வரும் ஆச்சரியமான ஞானம், வாழ்க்கை சில இருண்ட இடங்களில் கொண்டு செல்லும்போது, அதை புரிந்துகொள்வது கடினமாக இருந்தாலும், நம்பிக்கையை இழக்காதீர்கள். தேவன் ஒரு நாள் அந்த மூடுபனியை அகற்றி, அவர் மறைத்து வைத்திருக்கும் அர்த்தத்தையும் நோக்கத்தையும் வெளிப்படுத்துவார் என்று நம்புங்கள். வாழ்க்கையின் பயணத்தில் தேவனுக்கு பயந்து, அவருடைய கட்டளைகளை காத்துக்கொள்ளுங்கள். நியாயமானதையும், சரியானதையும், தேவனுக்கு பிரியமானதையும் செய்யுங்கள். அதன் விளைவுகளைப் பற்றி கவலைப்படாதிருங்கள். இது எப்போழுதும் நாம் கட்டுப்படுத்தக்கூடிய காரியம் அல்ல. தேவன் நமக்கு கொடுத்திருக்கும் வாழ்க்கையை அனுபவிக்கத் தெரிவு செய்யுங்கள். ஏனென்றால் அது தேவனுடைய அன்பளிப்பு. அது மிக அழகானது. இதுதான் பிரசங்கியின் புத்தகம்.

**யோபு**

வேதாகமத்தின் ஞானத்தை இலக்கியமாக உருவாக்கின மற்றொரு குரல் யோபுவின் புத்தகமாகும். இந்த புத்தகம் நம்மை ஞானத்திற்குள் பயணிப்பதற்கான இறுதி கண்ணோட்டத்திற்கு நம்மை கொண்டுவருகிறது. பரலோகங்களில் ஒரு கூட்டத்தை பற்றி கூறி யோபு கதையை ஆரம்பிக்கிறார். தேவனோடிருக்கும் தேவபுத்திரர்கள் என்று அழைக்கப்பட்ட பல தேவதுாதர்கள், அவருக்கு முன் நிற்க அழைக்கப்பட்டார்கள்.

அந்த கூட்டத்தில் இருந்த ஒருவரை நோக்கி "நீ எங்கேயிருந்து வருகிறாய் ?"(யோபு 1:7) என்ற கேள்வியோடு தேவன் இந்த கூட்டத்தை தொடங்கினார். எபிரெயுவில் "சாத்தானாக" குறிப்பிடப்பட்டவர் அவருக்கு பதிலளித்தான். இங்கு பயன்படுத்தப்பட்ட வார்த்தை உண்மையில், "எதிர்க்கப்பட்ட ஒருவன்" என்று பொருள். சாத்தான் அல்லது எதிராளி, ஒரு வகையான உளவாளியாக இருந்து, பூமியில் உலாவி, காணும் தீமைகளை தேவனிடம் புகார் செய்துவந்தான். அவன் மனுக்குலத்தின் மேல் ஒரு மங்கலான பார்வையைப் பெற்றிருந்தான். மேலும் ஒவ்வொரு மனிதனுக்கும் விலை அல்லது முறிவுப் பற்றி உள்ளது என்று அவன் நம்பினான்.

யோபுவின் மேல் கவனம் வைத்தாயோ, என்று தேவன் சாத்தானிடம் கேட்டார். உன்னுடைய சிந்தனையை தவறு என்று நிரூபிக்கும் ஒரு மனுஷன் இவர் தான் என்றார். அவரைப் போல் இந்த பூமியில் ஒருவரும் இல்லை என்றார். அவருடைய நீதியிலிருந்து அவரை விலக்க எந்த ஒரு விலையும் இல்லை என்றார். அவர் "உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போலப் பூமியில் ஒருவரும் இல்லை என்றார்" (யோபு 1:8) தேவன் யோபுவுக்கு பரிசுகளை அளித்திருப்பதினால், யோபு நல்லவராக இருக்கிறார் என்று சாத்தான் முன்வைத்தான். "ஆனாலும் உம்முடைய கையை நீட்டி அவனுக்கு உண்டானவையெல்லாம் தொடுவீரானால், அப்பொழுது

அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மைத் தூஷிக்கானோ பாரும் என்றான். யோபுவை சோதிக்க தேவன் ஒப்புக்கொண்டார். மற்றும் சாத்தான் அவரை துன்புறுத்துவதற்கு அவனை அனுமதித்தார். யோபு அக்கரை கொண்டிருக்கும் அனைவரையும். எல்லாவற்றையும் இழந்தார். அது மிகப்பெரிய பேரழிவாக இருந்தது. முதல் இரண்டு அதிகாரங்கள் வரை. யோபு இன்னும் தேவனை புகழ்ந்துக்கொண்டிருந்தார். இதனிமித்தம் யோபு குறிப்பிடத்தக்க ஒரு நபர் என்று நிரூபிக்கப்பட்டது. பின்னர். மூன்றாம் அதிகாரத்தில் அவர் உண்மையில் எவ்வளவு ஏழையாக இருக்கிறார் என்பதை உள்ளத்தில் உணர்ந்தார். அவர் பிறந்த நாளை பற்றி விரிவாக சாபமிட்டார். அவர் வாழ்ந்து இப்படிப்பட்ட பேரழிவான முடிவுக்கு வருவதை காட்டிலும். பிறப்பிலே மரித்திருந்தால் நலமாக இருக்கும் என்று நினைத்துக்கொண்டிருந்தார்.

இதை தொடர்ந்து யோபுவின் சில நண்பர்கள் அவருக்கு உதவினார்கள். இதை பெறுவதற்கு யோபு ஏதோ மோசமானதை செய்திருக்கவேண்டும் என்று அவர்கள் கூறினார்கள். அடுத்து 34 அதிகாரங்கள் யோபும் அவரது நண்பர்களின் வாக்குவாதங்கள் தொடர்கிறது. யோபுவிற்கும் அவருடைய நண்பர்களுக்கும் இடையே நடந்த உரையாடலின் முடிவில். யோபு போதுமான காரியங்களை யூகித்தார். தேவன் தாமே வந்து காரியங்களை விளக்கவேண்டும் என்று யோபு கேட்டுக்கொண்டார்.

தேவன் ஒரு பெரிய புயல் மேகத்தை போல் வருகிறார். ஆனால் யோபுவின் துன்பத்தைக் குறித்து தேவன் நேரடியான எந்த பதிலையும் கொடுக்கவில்லை. சாத்தானுடன் நடந்த உரையாடலையும். அல்லது அவருடைய நற்குணத்திற்கும் மற்றும் விசுவாசத்திற்கான சோதனைகளையும் பற்றி தேவன் யோபுவினிடம் ஒருபோதும் சொல்லவில்லை. அதற்கு பதிலாக. அவர் யோபுவை அண்டசராசரத்தை சுற்றிபார்க்கும்படி ஒரு பயணத்திற்கு (virtual tour)அழைத்துசெல்லுகிறார். இந்த உலகம் நம்பமுடியாத அளவிற்கு எவ்வளவு அற்புதமானது என்று தேவன் காண்பித்தார். ஒவ்வொரு நாளும் நாம் பார்க்கும் விஷயங்கள். ஆனால் அவைகள் எப்படி இயங்குகிறது என்பதை குறித்து நாம் அறியவில்லை இப்படிப்பட்ட இந்த உலகம் எவ்வளவு விவரங்களை கொண்டிருக்கிறது என்பதை அவர் யோபுவுக்கு காண்பிக்கிறார்.

பின்னர். "இதெல்லாம் உனக்கு புரிந்ததா ? இதில் உள்ள எதையாவது உன்னால் புரிந்துக்கொள்ள முடிந்ததா ?. இவைகளை உன்னால் ஒரு நாள் இயக்க முடியும் என்று நினைக்கிறாயா ? " என்று தேவன் யோபுவினிடம் கேட்டார். பின்னர் இந்த பிரபஞ்சத்தின் சுற்றுப் பயணத்தை முடிக்க. தேவன் யோபுவுக்கு இரண்டு அற்புதமான மிருகங்களாகிய பிகெமோத் மற்றும் லிவியதான் காண்பித்தார். மேலும் அவைகள் எவ்வளவு பெரியவைகள் என்பதையும் கூறினார். இவைகள் உம்மை கொல்லக்கூடிய மிக ஆபத்தான மிருகங்கள் ஆனால் அவைகள் தீய விலங்குகள் அல்ல என்றும். அவைகள் அவருடைய படைப்புகளில் ஒரு பகுதியாக உள்ளன என்றும் தேவன் சொல்கிறார்.

மேலும் அது தான் உண்மை- துன்பமடைய காரணமான யாதொன்றும் செய்யாதிருந்தபோதும். யோபுக்கு ஏன் துன்பம் அனுமதிக்கப்பட்டு என்பதற்கான முழு தேவ மெய்ப்பிப்பு தான் இது. யோபுவின் புத்தகம் ஞானத்தைப் பற்றி நமக்கு என்ன கற்பிக்கிறது ?

அப்பாவி துன்பப்படும்போது அதை தடுப்பதற்கான ஆற்றலைப் பெற்றிருந்தும். தேவன் அவைகளை அனுமதித்ததினால். யோபுவின் கண்ணாட்டத்தில். தேவன் நியாயமற்றவராகவும். நீதியில்லாதவராகவும் மற்றும் அன்பில்லாதவராகவும் காணப்பட்டார். இவ்விஷயத்தில் மனிதர்கள் அனைவருக்கும் தங்கள் வாழ்நாளில் சில சந்தர்ப்பங்களில் இவ்வாறாக நடைபெறுவதைப் பற்றி யோபு பேசுகிறார். ஆனால் தேவனுடைய முன்னோக்கு யோபினுடையதை விட எல்லையற்றதாக உள்ளது. மனுக்குலத்தின் நலன்களை உட்பட தேவன் எடுக்கும் அவரது தீர்மானங்களில். இந்த முழு சிக்கலான பிரபஞ்சத்தில் ஒன்றின் மேல் ஒன்று ஏற்படுத்தும் செயல்களை குறித்து அவர் கவனமுள்ளவராக இருக்கிறார். இதை தான் தேவன் அவருடைய ஞானம் என்று அழைக்கிறார்.

இவ்வாறு தன்னைக் காப்பாற்றவேண்டும் என்று தேவனிடம் கேட்பது ஆபத்தாக இருக்கும். பரிசுத்த ஆவியின்றி. துன்பத்தைப் பற்றிய சிக்கல். தேவனுடைய திட்டத்தில் தீமையின் அனுமதி மற்றும் இராஜ்யத்தில் பின்பற்ற வேண்டிய நல்லவைகளை புரிந்துக்கொள்ளவே முடியாது. இது யோபுவை தாழ்மைப்படுத்தியது. அவர் ஏன் துன்பப்பட்டார் என்று ஒருபோதும் அவர் கற்றறியவில்லை. ஆயினும். அவர் இன்னும் தொடர்ந்து ஜீவித்து. சமாதானமான ஒரு வாழ்க்கையை வாழ்ந்து. தேவனுக்கு பயந்திருந்தார். ஆனால் அந்த புத்தகம் அதோடு நிறைவடையவில்லை. இவை எல்லாவற்றிருக்கும் பின். யோபு தொலைத்த அனைத்தையும் இரட்டிப்பாக தேவன் கொடுத்தார். இது தேவனுடைய பரிசா ? "வாழ்த்துக்கள் யோபு. நீர் இந்த மிகப்பெரிய சோதனையை வெற்றிப்பெற்றாய்" என்று தேவன் சொன்னாரா ? இல்லை! யோபு இழந்த அனைத்தும் ஒரு தண்டனையும் அல்ல. அவைகளை திரும்ப பெற்றுக்கொண்டது ஒரு பரிசும் அல்ல. என்ற கருத்தை இந்த முழு புத்தகம் உருவாக்கியது.

அப்படியானால். அவரது குடும்பமும். சொத்துக்களும் ஏன் திரும்ப கொடுக்கப்பட்டது ? தேவன். அவருடைய ஞானத்தில். வெளிப்படையாக யோபுக்கு பரிசளித்தார். எதற்கு என்று நமக்கு சொல்லப்படவில்லை. ஆனால். நன்மையோ அல்லது தீமையோ. எது வந்தாலும் சரி. தேவனுடைய ஞானத்தை நாம் நம்பலாம் என்பதை யோபு புரிந்துக்கொண்டார் என்பதை நாம் அறிந்துக்கொள்கிறோம். இது யோபுவின் புத்தகத்தின் பாடமும் ஞானமுமாக உள்ளது. தேவனுடைய பார்வையில் தாழ்மைப்படுங்கள். மேலும் அவரை நீங்கள் கண்டறியாதபோதும். அவர்மேல் நம்பிக்கை கொள்ளவேண்டும்.

இதுவே. ஞான இலக்கியம். ஒவ்வொரு புத்தகமும் வாழ்க்கையின் ஒரு தனிப்பட்ட முன்னோக்கை வழங்குகிறது. நாம் ஞானத்தோடும். தேவ பயத்தோடும் வாழ கற்றுக்கொள்வதற்கு. இந்த அனைத்திலிருந்தும் ஒருமித்து செவிக்கொடுக்கவேண்டும். தேவனுக்கு பிரியமான ஒரு வாழ்க்கையை வாழ்வதற்கு வழிநடத்த. இந்த ஞானத்தின் புத்தகங்கள் மாம்ச இஸ்ரயேலிடம் பேசியது. அவர்களுக்கு தொடர்ந்துவரும் தேவனுடைய ஞானம் வாக்குத்தத்தத்தங்கள் பூமிக்குரியவைகள். நமக்கோ அவைகள் ஆவிக்குரியவைகள். ஆனால் இவைகள் நம்முடைய பூமிக்குரிய அனுபவங்களுக்கும் பொருந்தும். இந்த மூன்று புத்தகங்களையும் ஒருமித்து எடுத்துக்கொள்ளும்போது. அவருடைய ஞானத்திற்கு ஏற்ப தேவ பக்தியுள்ள வாழ்க்கையை வாழ சமநிலையான அணுகுமுறையை அளிக்கிறது.

மறக்க செய்வது

# எந்த பாவம் மோசமானது?



Jonathan Benson

"ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்;" (எபிரெயர் *12:1*)

சில பாவங்கள் மற்றவைகளை விட மோசமானதா? எல்லா பாவங்களும் சமமானதா? எந்த பாவம் மிக மோசமானது? நம்முடைய தனிப்பட்ட அனுபவங்கள் அல்லது கருத்துக்களின் அடிப்படையில், சில பாவங்களை மற்ற பாவங்களை காட்டிலும் கடுமையாக தீர்க்கிறோமா?

தேவனுடைய வார்த்தைகளில் காணப்படும் சில பாவங்களின் பட்டியல்களை நாம் பார்த்து இந்த பாடத்தை துவங்கலாம். மோசமான பாவம் என்று நீங்கள் நம்புவதைப் பற்றி யோசியுங்கள். இரண்டாவதாக, இந்த உலகத்திலிருந்தும், முற்றிலுமான பாவநிலையிலிருந்து தேவன் என்னை அழைத்ததைப் பற்றி சில தனிப்பட்ட பிரதிபலிப்புகள் உள்ளது. மூன்றாவதாக, வேதவாக்கியங்களைக் காண்பிக்கும் பாவமே மோசமான பாவம் என்பதை, நம் முடிவை நாம் பகிர்ந்துகொள்வோம்.

### (1) வேதவாக்கியங்களில் குறிப்பிடப்பட்ட பாவங்கள்

நீதிமொழிகள் 6:16-19 "ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார், ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள். அவையாவன: மேட்டிமையான கண், பொய்நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங் கை, துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங்கால், அபத்தம்பேசும் பொய்ச்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் ஆகிய இவைகளே."

ரோமர் 1:29,30"அவர்கள் சகலவித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்திலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறையப்பட்டு; பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய், புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறுபண்ணுகிறவர்களுமாய், தேவபகைஞருமாய், துராகிருதம்பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர்களுமாய், பெற்றாருக்குப் கீழ்ப்படியாதவர்களுமாய்,"

I கொரிந்தியர் 6:9-10"அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை."

கலாத்தியர் 5:19-21"மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்." இந்த பாவங்களில் ஏதாவது ஒன்று மிக மோசமான பாவம் என்று உங்களுக்கு தோன்றுகிறதா?

ஸ்டிராங்க்ஸ் அகராதி நமக்கு பாவத்தை பற்றி சில வரையறைகளை கொடுக்கிறது. பழைய ஏற்பாட்டில், இந்த வார்த்தைக்கு#2398 "தவற விடு, பாவம் செய்ய" என்று பொருள். புதிய ஏற்பாட்டில், இந்த வார்த்தைக்கு "குறி தவறிவிடுதல்" என்று பொருள். மற்றவர்களைவிட சில பாவங்களுக்காக நாம் நம்முடைய குறியை இழக்கலாமா? இதற்கான பதிலை முடிவில் காணலாம்.

### (2) என்னுடைய சொந்த கதை

**பாகம் I** - அறியாமை. தேவனையும் அவருடைய சத்தியத்தையும் நாம் கண்டுபிடிப்பதில் பட்ட பாடுகளை. அனைவரும் அனுபவிப்பதில்லை. சிலர் முன்மாதிரியான வாழ்க்கையை வாழ்ந்துக்கொண்டு, வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடுவதற்கான சோதனையில் சத்தியத்தை எளிமையாக கண்டுபிடித்து விடுகிறார்கள். ஆயினும், என் விஷயம் அப்படி அல்ல. ஒருவேளை என்னை போல பாவத்தோடு குறிப்பிடத்தக்க போராட்டங்களை கொண்டிருப்பவர்களுக்கு என்னுடைய முன்மாதிரி என்னைப் போன்றவர்களுக்கு பயனளிக்கலாம்.

என்னுடைய ஆரம்ப வயதில், தேவனே என்னுடைய வாழ்க்கைக்கு வழிகாட்டி, பாதுகாத்தார் என்பதை நான் நம்புகிறேன். மெத்தடிஸ்ட் சபையில் ஞாயிற்றுக்கிழமை, பள்ளிக்குச் செல்லுமாறு ஒரு இளம் பையனாக நாம் விரும்பினேன். தேவன் அன்பானவர் என்றும் அவருடைய குமாரன் இயேசு என்பதையும் கற்றுக்கொண்டேன். நாம் திரித்துவத்தையும் எரிநரகத்தையும் ஒருபோதும் நம்பவில்லை. குற்றமின்மை பொய்களின் வழியாக பார்க்க முடியும். எனக்கு தேவனோடு தனிப்பட்ட ஜெப வாழ்க்கை இருந்தது. என் வாழ்க்கையில் மிகப்பெரிய உணர்வு ஜனங்களுக்கு உதவுவதேயாகும். சபையில் என் தந்தை பாடல் இயக்குனராகவும், நான் ஒரு பாடகனாகவும் இருந்தேன். ஒரு தனிப்பாடலைப் பாடுமாறு என்னை கேட்டபோது, "இது அவர்களுக்காக அல்ல உமக்காகவே" என்று தேவனிடம் ஜெபித்தேன். நான் சிறுவனாக

இருந்தபோது. ஜான் என்று அழைக்கப்பட்டதினால். நான் அடிக்கடி வேதாகமத்தில் யோவான் புத்தகத்தை திறப்பேன்.

வாழ்க்கையில் இன்னும் அதிகமான அதாவது இன்னும் பெரிய காரியங்கள் உண்டென்பதை என் ஆரம்ப பள்ளியின் மிக சிறிய வயதிலேயே. ஒரு பிரமிப்பை நான் உணர்ந்தேன். நான் நம்பியிருந்த பல காரியங்களை என் வாழ்க்கையில் நடப்பதை கண்டேன். அதாவது தேவன் என் வாழ்க்கையில் மேலதிகாரத்துடன் நடத்தினதை கண்டேன். சபையில் அவர்களது அறிக்கை தாளில் சொல்லப்பட்ட விஷயம். உண்மையில் எனக்கு குழப்பத்தை ஏற்படுத்தியது. அவர்கள் சபையில் மிகப் பெரிய நிதி பங்களிப்பாளர்களை பட்டியலிட்டார்கள். அது அவர்களுக்கும் தேவனுக்கும் இடையில் ஒரு தனிப்பட்ட காரியமாக இருக்கவேண்டும் என்று நாம் நினைத்தேன். என்னுடைய தந்தையின் பெயரும் அந்த பட்டியலில் காணப்பட்டது. அவர்கள் ஏன் பெயர்களை பட்டியலிட்டார்கள் என்று நான் கேட்டேன். பாடல் குழுவை இயக்குவதற்கு அவருக்கு சம்பளம் கொடுக்கப்பட்டதென்றும். சபைக்கே அதை மீண்டும் திரும்ப கொடுப்பது ஒருவகையான நன்கொடை வழங்குதல் என்பதையும் நான் அறிந்தபோது. என் தந்தை இதற்காக சம்பளம் வாங்குகிறார் என்ற காரியம் என் இருதயத்தை காயப்படுத்தியது. ஆனால் அதை அவர் திரும்ப செலுத்துவதில் மகிழ்ச்சி அடைந்தேன்.

பின்னர் அவர்களது வாழ்க்கையில். தேவனுடைய அழைப்பை ஏற்றுகொண்டு. இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவர்களை தேவன் அறிந்து அவர்களை பாதுகாப்பார். துவக்கத்திலிருந்து முடிவு வரைக்கும் தேவன் சகலத்தையும் அறிந்திருக்கிறார். "நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை; தீங்குநாட்கள் வராததற்குமுன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்குமுன்னும்," (பிரசங்கி 12:1)

யோபுவைப் பற்றி சாத்தானுடன் தேவன் கொண்டிருந்த உரையாடலை நீங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்களா ? (யோபு1:8-12) தேவன் என்னை பற்றி பேசியிருந்தால் எப்படி இருந்திருக்கும் ? என்னுடைய கற்பனையில் இவ்வாறாக பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கலாம் :" என்னால் நேசிக்கப்பட்ட யோனதான் மேல் கவனம் வைத்தாயோ ? அவர் குற்றமில்லாதவரும். ஜனங்களுக்கு உதவி செய்ய அதிகமாக பிரியப்படுகிறவரும். எனக்காக ஒரு இருதயத்தை கொண்டவருமாக இருக்கிறார்." "ஆமாம். அழகான ஒரு குழந்தை. அவர் மேல் உம்முடைய பாதுகாப்பை நான் கவனித்தேன். ஆனால் அவர் ஒரு குழந்தை தான். அவர் வாழ்நாள் முழுவதிலும் உண்மையுள்ளவராக இருப்பார் என்று உங்களுக்கு எப்படி தெரியும் ? என்று சாத்தான் கூறினான். அதற்கு"அவர் என்னுடையவர். ஆனால் அவரை வீழ்த்த முயற்சி செய்ய தயங்க வேண்டாம். அது வேலை செய்யாது. அவர் உண்மையாகவே இருப்பார்." என்று தேவன் பதில் அளித்தார். அதற்கு "பார்த்துக்கொள்ளலாம் " என்று சாத்தான் பதில் அளித்தான்.

நீங்கள் தேவனால் இழுக்கப்பட்டு. கடைசியாக அழைக்கப்படும்போது எங்கிருந்தீர்கள் ? சில பாவங்களின் மீது உங்கள் தனிப்பட்ட போராட்டங்கள் என்ன என்ன ? அவைகள் இன்னும் உங்கள் தனிப்பட்ட போராட்டங்களாக இருக்கிறதா அல்லது அவைகளை நீங்கள் வென்றுவிட்டீர்களா ? தெளிவுப்படுத்துவதற்கான -- ஒரு சிறுவனாகிய நான். என்னுடைய வாழ்க்கையில் ஆண்டவருடைய பாதுகாப்பான கரத்தை காணமுடிந்தது. நாம அந்த சமயத்தில் அழைக்கப்பட்டேன் என்பதை நான் நம்பவில்லை. ஆனால் நான் பின்னர் அழைக்கப்பட்டேன் என்பதை தெளிவாக உணர்ந்தேன். நம்முடைய அழைப்பை பற்றி 1கொரிந்தியர்1:26-28 தெளிவாக கூறுகிறது. "எப்படியெனில் சகோதரரே. நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள். மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை. வல்லவர்கள் அநேகரில்லை. பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார். பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார்.."

அத்தகைய சேதமடைந்த மற்றும் பலவீனமானவர்களை குமாரர்களாக தேவன் ஏன் அழைக்கவேண்டும்? இதற்கான பதிலை 29ம் வசனத்தில் காணலாம் "மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமை பாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்." நாம் அனைவரும் அபாத்திரர்கள் அல்லது தகுதியற்றவர்கள் "எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி," (ரோமர் 3:23).

தேவன் இருதயத்தை அறிய வல்லவர். நமது பழைய பாவம் நிறைந்த நிலையையும் கடந்த இராஜ்யத்தில் குமாரனுக்காக ஆற்றல் மற்றும் மதிப்பும் உடையவர்களாய் நாம் இருக்கிறோம் என்பதைக் காண்கிறார். உங்கள் பாவங்களுக்கு எதிராக உங்களது போராட்டத்தையும். இராஜ்யத்தில். உலகத்தின் மனுக்குலத்திற்கு உதவியாக அவைகள் கொண்டுவரும் மதிப்பை பற்றியும் நீங்கள் எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா ?

**பாகம் II** - அறியாமை. என்னுடைய மூன்று சகோதரிகளும் . நானும் எல்லாவற்றிலும் சிறந்தவர்களாகவும். வெற்றிப்பெறுவதற்காக போட்டியிடும் மனப்பான்மையில் வளர்க்கப்பட்டோம். இது விளையாட்டு. இசை. மற்றும் நன்மை இல்லாத பகுதிகளில் முடிந்தது. எடுத்துக்காட்டாக: மது பழக்கத்தில் என்னுடைய அறிமுகம். எவ்வளவு அதிகம். எவ்வளவு வேகம். எவ்வளவு பரிதாபம் !ஒரு மாலையில். உயர்நிலை பள்ளியில். கூடை பந்து விளையாட்டின் போது. "நீங்கள் விருந்துக்கு வருகிறீர்களா ?" என்று இரண்டு பையன்கள் கேட்டார்கள். "நிச்சயமாக" என்று நான் பதில் அளித்தேன்.

ஆனால் அவர்கள் அதை பொருள் படுத்தவில்லை. என்பதை அவர்களின் காரில் இருந்ததை நான் மிகவிரைவாக கண்டுபிடித்தேன்."அவர்கள் கவனிக்காத அளவுக்கு பாசாங்கு செய்யலாம்" என்று நாம் நினைத்தேன். ஆனால் அவர்கள் அதை

கண்டுபிடித்துவிட்டார்கள். இந்த அழுத்தத்தை ஒட்டி. ஒன்பது ஆண்டுகள் வீழ்ச்சி தொடங்கியது. நான் பள்ளிக்கூடம் மற்றும் கோடைக்கால பாடசாலையில் தேர்ச்சி பெற்றேன். அதற்குப்பின். கல்லூரி. என் பட்டங்கள் வீணாக இருந்தது. அதை பற்றி நான் கவலைப்படவில்லை - வாழ்க்கை ஒரு விருந்தாக இருந்தது. இருப்பினும் - நான் சுயநலமுள்ளவனாக. சீரழிந்திருந்தாலும். என்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய மேற்கொள்ளுதல்களை நான் கண்டேன். ஆனால் நான் இப்போது அதற்குள் போவதில்லை.

நான் உயர்நிலை பள்ளியில் இருந்த ஒரு நண்பருடன் ஒரு இசை வாழ்க்கையைத் தொடங்கினேன். நாங்கள் இரவு நேர கச்சேரிகளுக்கு சென்றோம். நான் ஒரு ராக் அண்ட் ரோல் (Rock and Roll)போன்ற ஒரு கற்பனையில் வாழ்ந்தேன். எப்போதும் போல மிதமான மதுவிலிருந்து வலுவான மதுவாக மாறியது. நான் ஒரு பெண்ணை சந்தித்தேன். எல்லா தவறான காரணங்களுக்காகவும் நாம் திருமணம் செய்தோம். என்னுடைய சில நண்பர்கள். அவளை திருமணம் செய்யவேண்டாம் என்று தடுத்தனர். ஆனாலும் நான் கேட்கவில்லை. ஆறு மாதங்களுக்கு பின். அவள் ஒரு போதை மருந்து வியாபாரிக்கு என்னை விட்டுச் சென்றாள். உலகில் எத்தனை பேர் அடிமைகளாக இருக்கிறார்கள். இது மருந்துகள். மது. பாலுணர்வு. உணவு. போன்றவைகளாக இருக்கலாம். அடிமைத்தனம் என்பது ஒரு பேரழிவு. தங்களுடைய சொந்த தனிப்பட்ட பேய்களாகிய பலவீனங்களோடு போராடி. "முற்றிலும் ஜெயம் பெற்றவர்களின்" உதவியோடு இவைகளை இராஜ்யத்தில் குணப்படுத்தப்பட வேண்டும்.

சாத்தான் என்னுடைய அறியாமையை அனுகூலமாக்கிக் கொள்வதை என் சிந்தையில் நான் காண்கிறேன். சாத்தான் : "தேவனே. இப்பொழுது நீ ஜொனதானை உங்களுக்கு பிடிக்குமா ? நீங்கள் காண்பித்த. ஒன்றும் அறியாத அந்த சிறுவன் எங்கே ? அவர் என்னுடன் இருக்கிறார். அவரை சுற்றி திருப்புவதற்கு ஒன்றுமில்லை. இது மிகவும் எளிதாக இருந்தது" இதற்கு." அவன் திரும்ப வழியை கண்டுபிடிப்பான் என்று அவனுடைய இருதய ஆழத்தில். இருப்பது எனக்கு தெரியும். " என்று தேவன் பதில் அளித்தார். சாத்தான் :"நான் அப்படி நினைக்கவில்லை. அவன் இருக்கவேண்டும் என்று நான் விரும்பும் இடத்தில் அவனை வைத்திருக்கிறேன். என் கைகளில் ஒரு மக்கை(putty) போலிருக்கிறார்."

நீங்கள் தேவனால் இழுக்கப்பட்டு. எங்கிருந்தீர்கள் ? சில பாவங்களின் மீது உங்கள் தனிப்பட்ட போராட்டங்கள் என்ன என்ன ? அவைகள் இன்னும் உங்கள் தனிப்பட்ட போராட்டங்களாக இருக்கிறதா அல்லது அவைகளை நீங்கள் வென்றுவிட்டீர்களா ? நம்முடைய தனிப்பட்ட போர்க்களத்தை நாம் நினைவுபடுத்திக்கொள்வது மிக அவசியம். சிலர் அதை சிறப்பாக செய்கிறார்கள். ஆனால் மற்றவர்களுடைய போராட்டங்களிலிருந்து கற்றுக்கொள்வதன் மூலம் நாம் பயன் பெறலாம். எனவே. நாம் இராஜ்யத்தில். இந்த உலகத்தின் மேல் நாம் பரிவுணர்வோடிருக்கலாம்.

ஏப்ரல் 28 அன்று மன்னாவின் விளக்கத்தை நான் விரும்புகிறேன்."நமக்கு பொறுமை அவசியம் தேவை. அதை சோதனைகளினால் மட்டுமே பெறமுடியும். நமக்கு விசுவாசம் தேவை. தேவைகளினால் மட்டுமே விசுவாசத்தை விருத்தியாக்க முடியும் .நம்முடைய வருங்கால வேலைகளுக்கு அனுபவங்கள் தேவை. இது போன்ற அனுபவங்களால் மட்டுமே ஆதாயமடைவோம் இது நம்மவர்களைப் பற்றிய சோதனைகள் மற்றும் பலவீனங்களையும். கஷ்டங்களையும் அதின் உணர்வுகளை உணர்ந்துகொள்ளும்படி நம்மை அனுமதிக்கிறது. நாம் அவருடன் அரியணை எட்டும் போது நாம் யாவரும் அவர்களின் அமைச்சர்களாகவும் பிரதிநிதிகளாகவும் இருப்போம். அப்படியானால். தற்போதைய அனுபவங்களின் பாடம் தீமையை எதிர்க்கவேண்டும். ஆனால் அதை தீமையினால் அல்ல நன்மையினால் செய்யவேண்டும்."( R3238)

"நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படியே இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து,உங்களை அழைத்தவர் பரிசுத்தராகியிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே." (1பேதுரு 1:14-16) என்று அப்போஸ்தலனாகிய பேதுரு கூறுகிறார்.

**பாகம் III- Hitting Bottom** கோபத்தின் உணர்வுகள். பழிவாங்குதல். தற்கொலை மற்றும் மனதில் பரவும் வெறுப்பு. நான் உடைந்துவிட்டேன். நான் தகுதியற்றவனாகவும். வெறுமையாகவும். தனிமையில் இருப்பதையும் உணர்ந்தேன். தேவன் எனக்கு அவசியம் தேவை என்பதை உணர்ந்து. என்னை சோதித்தேன். மூன்று மாதங்களாக. ஆண்டவரின் வழிநடத்தலை வேண்டி. கண்ணீருடனும். ஊக்கத்துடனும் ஜெபித்தேன்.

தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையிலான எனது கற்பனை உரையாடலுக்கு இப்போது திரும்புவோம். சாத்தான் : "ஓ. அவர் இனி பயனற்றவர். யாருக்கும் எந்த பிரயோஜனமும் இல்லை. குறிப்பாக உங்களுக்கு எந்த பயனும் இல்லை. நான் செய்யவேண்டியதை செய்துவிட்டேன் என்று நினைக்கிறேன்." அவர் என்னை நோக்கி மீண்டும் பாடுவார், சற்று காத்திரு! நான் அவரை ஒருபோதும் கைவிடவும் மாட்டேன். விட்டுவிலகவும் மாட்டேன். அவர் என்னை அழைக்கும்போது நாம் அவருக்கு பதில் அளிப்பேன்" என்று தேவன் கூறினார்.

நீங்கள் தேவனால் இழுக்கப்பட்டு. கடைசியாக அழைக்கப்படும்போது எங்கிருந்தீர்கள் ? உங்கள் அனுபவங்களினாலோ அல்லது மற்றவர்களின் அனுபவங்கினாலோ நீங்கள் கற்றுக்கொண்டிருக்கலாம்.

**பாகம் IV** தேவைப்படும் வழிநடத்துதல். 33வருடங்களுக்கு முன் தேவன் என் வேண்டுகோலுக்கு வழிக்காட்டினார். என் சூழ்நிலைகளை மேற்கொள்ளவும் .(overruled) அவர் என் சகோதரி நண்பர்களில் ஒருவரை சந்திக்கும்படி ஏற்பாடு செய்தார். அவள் ஒரு அர்ப்பணிக்கப்பட்ட வேத மாணவர் என்றும் என்னுடைய சூழ்நிலையை நன்கு அறிந்திருந்தவள் என்றும் எனக்கு தெரியாது. நாங்கள் ஒன்றாகக் கூடி வந்தபோது. முதலில்

"வேதாகமத்தில் "நரகம்" என்ற வார்த்தையைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்" என்று அவள் என்னை கேட்டாள். அதற்கு. "தேவன் அன்பானவராக இருந்தால். அவர் ஒருவரையும் காயப்படுத்தமாட்டார்" என்று நான் பதில் அளித்தேன்.

"தேவன் ஏன் தீமையை அனுமதிக்கிறார் என்று நினைக்கிறீர்கள் ?" என்பதே அவளுடைய அடுத்த கேள்வியாக இருந்தது. என்னிடம் எந்த குறிப்பும் இல்லை. மிகவும் திகைப்பூட்டும் 5 நிமிடங்கள் விளக்கத்தை நான் பெற்றுக்கொண்டேன். நான் மிகவும் உற்சாகமாக இருந்ததினால். அவளுடைய அம்மாவின் வீட்டிற்கு உடனடியாக சென்று படிக்க துவங்கினேன். பின்னர். முதல் தொகுதி படிப்புக்கு ஒரு இளைஞர்களின் கூடுகைக்கு அழைக்கப்பட்டேன். அவர்கள் எனக்காக ஆரம்பத்திலிருந்து துவங்கினார்கள். நான் வீட்டுக்கு சென்று ஒரே இரவில் அந்த புத்தகத்தை படித்தேன். இதற்காகவே என் முழு வாழ்க்கையிலும் நான் காத்திருந்தேன்..வெகு சீக்கிரத்தில் நான் சபையில் (Wilmington, Delaware Ecclesia. )கலந்துக்கொள்ள துவங்கினேன்.

தேவன் என்னுடைய இருள் சூழ்ந்த அனுபவத்தை அறிந்திருக்கிறார். மிகவும் தாழ்ந்த வாழ்க்கை. பிற்காலத்தில் அவர் முகத்தைப் பார்க்க உதவும். மாற்ற வேண்டும். மற்றும் ஒரு நோக்கம் கண்டெடுக்கப்படும் . ஒரு வெற்று கூட்டிலிருந்து. மற்றும் நான் கற்றக்கொண்டதின் நிமித்தம் மற்றவர்களை இப்போதும் இராஜ்யத்திலும் ஆசீர்வதிக்க உதவும். மீண்டும் தேவனுக்கும் சாத்தானுக்கும் உள்ள என் கற்பனையான உரையாடல்களுக்கு திரும்பவோம். சாத்தான்: "என்னால் புரிந்துக்கொள்ள முடியவில்லையே. நான் விரும்பிய இடத்தில் தானே அவரை வைத்திருந்தேன் - இது எப்படி நடந்தது ?"பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து. அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான். இப்போது அவர் முழுமையாக என்னுடையவர் ! என்னுடைய வல்லமையும். செல்வாக்கும் அவருக்குள் இருக்கிறது. ஆனால் இப்போது அவருடைய பலவீனங்கள் மற்றும் அனுபவங்களுக்காக சாத்தானே. உனக்கு நன்றி. எப்போதும் விட அவர் எனக்கு மிகுந்த மதிப்புள்ளவராக இருக்கிறார். சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது."

நம் அனைவருக்கும் பலீவனங்கள் உண்டு. "எப்படியெனில். நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை. நான் விரும்புகிறதைச் செய்யாமல். நான் வெறுக்கிறதையே செய்கிறேன். இப்படி நான் விரும்பாததைச் செய்கிறவனாயிருக்க. நியாயப்பிரமாணம் நல்லதென்று ஒத்துக்கொள்ளுகிறேனே. ஆதலால் நான் அல்ல. எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது. அதெப்படியெனில். என்னிடத்தில். அதாவது என் மாம்சத்தில். நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன். நன்மை செய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது. நன்மை செய்வதோ என்னிடத்தில் இல்லை. ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல். விரும்பாத தீமையையே செய்கிறேன். அந்தப்படி நான் விரும்பாததை நான் செய்தால். நான் அல்ல. எனக்குள்ளே வாசமாயிருக்கிற பாவமே அப்படிச்செய்கிறது" என்று ரோமர் 7:15-20 யில் அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். அப்போஸ்தலனாகிய பவுல் இத்தகைய போராட்டங்களை அவருக்குள் நடத்தியிருந்ததால். அதுவும் போராடுவதற்கு தைரியத்தை தருகிறது.

நாம் இப்படிப்பட்ட குழப்பத்தில் இருக்கும்போது. அதாவது என்னை போல. சகோதரர்கள் நம்மை எப்படி ஏற்றுக்கொள்வார்கள் ? பலவீனமானவர்கள் எப்படி தவறிலிருந்து. நன்மையை கற்றுக்கொள்வார்கள் ? அவர்களை சுற்றியிருக்கக்கூடியவர்களின் அன்பு. பொறுமை மற்றும் அவர்களது மாதிரியின் வழியாக கற்றுக்கொள்வார்கள்.

சத்தியம் அறிந்த பின்பு சில நாட்களில் எனக்கு ஒரு உதாரணம் கிடைத்தது. நான் கனெக்டிகட் சென்றேன் மற்றும் சகோதரா. ரிச்சர்டு மற்றம் சகோதரி. அண்ணாமே சூரக் அவர்களின் வீட்டில் 6 மாதங்கள் குடியிருந்தேன். அங்கு அர்ப்பணிக்கப்பட்ட வீடு மற்றும் திருமணம் எப்படி பட்டது என்பதை நான் பார்த்தேன். எனக்கு தேவைப்பட்டது இதுவே. இந்த பலவீனமானவர்கள் தவறிலிருந்து. சரியானதை எப்படி கற்றுக்கொள்ளமுடியும் ? இது உடனடியாக நடக்கக்கூடியதா ? இல்லை. இதற்கு நேரம் எடுக்கும். எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்ளும் ? அது தனிப்பட்ட நபர்களை சார்ந்துள்ளது.

சகோதரர்கள் மற்றவர்களிடத்தில் பரிப்பூரணத்தை எதிர்ப்பார்ப்பதில்லை. இது இராஜ்யத்தின் முன்கூட்டியே உலகின் மறுசீரமைப்பின் சித்திரமாக இருக்கக்கூடுமா ? நான் அப்படிதான் நினைக்கிறேன். உங்கள் பொறுமைக்காகவும். சகிப்புக்காகவும். கிறிஸ்துவுக்குள்ளான குழந்தைகளுக்குமான அன்பிற்காகவும் உங்களுக்கு நன்றி சகோதரரே!

**மற்ற கேள்விகள்**

தங்கள் வாழ்க்கையில் பாவத்தோடு போராடினவர்கள். அவர்கள் அழைக்கப்பட்ட பின்னர் அவைகளை விட்டுவிடுவது எளிதல்ல. அப்போஸ்தலனாகிய பவுல் இதை நமக்கு காண்பித்திருக்கிறார். ஆவியில் ஜெநிபிக்கப்பட்டவுடன். இந்த பலவீனங்கள் உடனே மறைந்துவிடுமா ? இல்லை. நிச்சயமாகவே இல்லை. ஆயினும். ஒருவர் கிறிஸ்துவுக்குள் வளர்ச்சி அடையும் போது. தேவனுடைய கிருபையினால் அதை மேற்கொள்ளலாம்.

நமது பழைய வழிகளில் சிலவற்றிற்கு நாம் திரும்பும் போது. நம் பரலோகத் தகப்பன் நம்மை மீண்டும் தட்டி எழுப்புவாரா ? ஆம். ஏனெனில் அவர் நம்மை அதிகமாக நேசிக்கிறார். எவ்வளவு அற்பமானதாகவும். வெட்கத்திற்குரியதாக இருந்தாலும் சரி. அது காரியமல்ல. நம் பரலோகத் தகப்பனிடம் இன்னும் நெருக்கமாக இருப்பதற்கு தேவையான மன்னிப்பு மற்றும் பலமே காரியம். இப்படிப்பட்ட விழிப்புக்கான அழைப்புகள். அதிக விசுவாசத்திற்கான திருப்பு முனைகளாக இருக்கலாம். மற்றவர்களிடம் பரிவுணர்வையும் காட்டமுடியும்.

**(3) எந்த பாவம் மோசமானது?**

நாம் ஆதியில் கேட்ட கேள்விக்கு திரும்புவோம். இதற்கான விடை எபிரேயர் 12:1,4ல் உள்ளது என்று நான்

நம்புகிறேன்." ஆகையால் மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க. பாரமான யாவற்றையும். நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு... பொறுமையோடே ஓடக்கடவோம். பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்துநிற்கவில்லையே"

எல்லா பாவங்களும் தவறானது. ஆனால் எந்த பாவம் மிக மோசமானது ? நம்மை எளிதில் சுற்றிக்கொள்ளும் பாவம். என்னை சுற்றிக்கொள்ளும் பாவம் மற்றும் உங்களை எளிதில் சுற்றிக்கொள்ளும் பாவம்! மற்றவர்களின் பாவம் அல்ல. நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் பாவமே மிக மோசமானது. நாம் உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டுமானால். நமக்குள்ளிருக்கும் பாவங்களை களை பிடுங்கவேண்டும். நம்முடைய நோக்கம் சரியான இடத்தில் இல்லாவிட்டால். நாம் இழந்துவிடுவோம். ஜெயம் கொள்ளுகிறவர்கள் என்பதற்கு. பாவத்தை வெறுத்து நீதியை நேசிக்கவேண்டும் என்று பொருள். "நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்; ஆதலால், தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார் என்றும்;" (எபிரெயர் 1:9 )என்று தேவன் இயேசுவை பற்றி கூறினார்.

உங்கள் பாவங்கள் அல்லது பலவீனங்களை தனித்தனியே பட்டியலிடுங்கள். மிகவும் முயற்சிக்க வேண்டியவைகள் எது என்பதை வெளிப்படுத்தும்படிக்கு தேவனிடம் கேளுங்கள். திட்டமிட்டு. போராடுங்கள். சோதனைகளை தவிர்க்க உங்களை சுற்றிலும் தடைகளையும். புதர் வேலியும் அமைத்துக் கொள்ளுங்கள். நாம் அனைவரும் ஒரு நாளில். "நல்லது உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே" என்று கேட்க விரும்புகிறோம். தேவனுக்கே மகிமை! அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள். விசுவாசத்தில் உறுதியாயிருங்கள் (1பேதுரு *5:9*)

ஆசிரியரின் குறிப்பு - நமக்குள் இருக்கும் பாவமே மோசமானது என்று இந்த கட்டுரை கூறுகிறது. மற்றவர்களுக்கு எதிராக நியாயந்தீர்ப்பதற்கு இது ஒரு நல்ல குறிப்பு. ஆனால் சேர்க்கப்படவேண்டிய ஒரு பதில் இருக்கிறது. அறியாமையில் செய்த பாவங்களை தேவன் காண்பதை விட. வெளிச்சத்திற்கு எதிராக செய்த பாவங்களை தேவன் மிக மோசமானதாக காண்கிறார்.

சாவான பாவம்

# ஆவிக்குரிய கொலை



"தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; மனுஷகொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்தியஜீவன் நிலைத்திராது என்று அறிவீர்கள்." (1யோவான் 3:15)

*Adapted from a discourse by Br. Paul Mali*

நடத்தையின் விளைவு கொலை. தனித்தனியே அல்லது இணைந்து செயல்படும் ஐந்து காரணிகளே நடத்தை என்கிறோம். நாம் ஒரு நடத்தையை மாற்ற விரும்பினால், இந்த காரண காரணிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாற்றங்களை செய்யவேண்டும்.

* சிந்தனைகள் (நன்மை அல்லது தீமை)
* இருதயத்தின் நிலைபாடு (ஆரோக்கியம் அல்லது ஆரோக்கியமற்ற)
* மனப்பான்மை அல்லது உள்நோக்கு (நல்லது அல்லது கெட்டது)
* விசுவாசம் (பலமுள்ள அல்லது பலவீனம்)
* சாதனை புரிதல் (உயர் அல்லது குறைந்த)

இந்த காரணிகள் ஒரு குறியீடாக இருக்கலாம். அதிகம் அல்லது வலுவான மற்றும் குறைந்த அல்லது பலவீனமான அளவைக் கொண்டவை

* சிந்தனைகள் - நம்பிக்கைகளினால் மதிப்பிடப்படுகிறது. (சங்கீதம் 139:17-18)
* இருதயத்தின் நிலைபாடு - வார்த்தைகளினால் மதிப்பிடப்படுகிறது. (மத்தேயு12:34)
* மனப்பான்மை அல்லது உள்நோக்கு - மனதின் அமைப்பே அட்டவணை (யோவான் 14:15, 20)
* விசுவாசம் - கிரியைகள் அல்லது சாதனை புரிதலினால் மதிப்பிடப்படுகிறது (யாக்கோபு2:17)
* நற்குணங்கள் - நம்முடைய ஆவிக்குரிய காரியங்களுக்கு குறியீடு (மத்தேயு7:16)

உலகில் ஒவ்வொரு நிமிடங்களும் கொலைகள் ஏற்படுகிறது. இது மற்றொரு மனிதனின் மீது மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய மிகக் கடுமையான, வெறுக்கத்தக்க மற்றும் ஆபத்தான குற்றங்களில் ஒன்றாகும். முதன்மையான குற்றம் என்ற இடத்தை கொலை பிடித்துள்ளது என்று பலர் கூறுகிறார்கள். ஜீவனை அழிப்பது தேவனுடைய நிலையை ஏற்றுக்கொள்ளுவதாகும். கொலை உண்மையில் ஒரு மும்மடங்கான குற்றமாகும்.

(1)வேறு ஒருவரின் ஜீவனை நீக்குவது

(2)செயல் முறையிலிருந்து உங்கள் சொந்த வாழ்க்கையை இழப்பது

(3)தேவனுடைய நிலையை எடுத்துக்கொள்வது

தேவன் ஜீவனை கொடுக்கிறார். அதனால், ஜீவனை எடுப்பதற்கு அவருக்கு மட்டுமே உரிமை உண்டு. வேறு யாராவது ஜீவனை எடுப்பரானால், அவர் தேவனை போல் செயல்படுபவராவார். ஒரு நபரின் இந்த உடைமையை அகற்றுவது, அதாவது அவரது ஜீவனை அகற்றுவது, ஒரு மிகப்பெரிய சோகமாகும். ஜீவன் இழப்பதை தவிர்க்க ஜனங்கள் எதைவேண்டுமானாலும் செய்வார்கள்.

சகோதரர்கள் மத்தியில், கொலையாளிகள் இருப்பதில்லை. தேவனுடைய ஜனங்களாகிய நாம் ஜீவனுடைய மதிப்புக்கு அதிகமாக கடமைப்பட்டிருக்கிறோம். அதை பாதுக்காகவும், போஷிக்கவும், அதை பராமரிக்கவும் செய்கிறோம். ஒரு நாளில் நித்திய ஜீவனைப் பெற நாம் விரும்புகிறோம். எந்த உண்மையான விசுவாசியும் தேவனுடைய நிலையை எடுத்துக்கொள்ள மாட்டார். ஒரு ஜீவனை நீக்குவதற்கு நமக்கு உரிமை இல்லை.

**ஆவிக்குரிய கொலை**

எத்தனைபேர் ஆவிக்குரிய கொலையை செய்திருக்கிறார்கள், என நாம் கேட்டால், நம்மத்தியில் யாராவது இருப்பார்களா ? ஆவிக்குரிய கொலைக்கு நம்முடைய பதில் வித்தியாசமாக இருக்குமா ? "ஆவிக்குரிய கொலை என்றால் என்ன?" என்று சிலர் கேட்கலாம்.

இதை ஆராய்வோம். 1யோவான் 3:15 ல்"தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான். மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்திய ஜீவன்நிலைத்திராது என்று அறவீர்கள்" என்று வாசிக்கிறோம். இது அப்போஸ்தலனாகிய யோவானின் வார்த்தைகள். பகை இவ்வளவு முக்கியமானதாக இருக்கக்கூடுமா ? கொலை என்று சொல்லும் அளவுக்கு, பகை ஒரு சக்தி வாய்ந்த வல்லமையாக இருக்க முடியுமா? நண்பர்களே, ஆம் இது ஒரு சக்தி வாய்ந்த பொருள்!

புண்படுத்தும் ஒருவர் மேல் வெறுக்கத்தக்க வெறுப்புணர்வின் ஒரு மனநிலையே பகையாகும். இது பயம், பாதுகாப்பின்மை, பழிவாங்குதல், விரோதம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு சிக்கலான எதிர்வினையாகும். பகை என்பது ஒரு வலுவான வெறுப்பு, தவறான விருப்பம், ஒருவருக்கு தீங்கு செய்வதற்கும், காயப்படுத்துவதற்கும் உள்ள அதிகமான ஆசை, அல்லது பகைத்தவரை ஒரு முடிவுக்கு கொண்டுவருவது. பகை வெறுமனே கடந்து செல்லும் மனநிலையல்ல, அது திட்டமிட்ட மனப்பாங்கு அல்லது ஒருவரின் இயற்கையான பண்புகளாகும். ஒரு உள்நோக்கத்தை பற்றி அறியாமலும் வெறுப்பானது ஒரு நடத்தையை தீர்மானித்துவிடும். நாம் பகைக்கலாம், ஆனால் அது நமக்கு தெரியாது. ஒரு நபரின் நடத்தையை கவனியுங்கள். நீங்கள் இந்த பகை ஒரு தூண்டுகோலாக இருப்பதை காணமுடியும். பகை ஒரு தூண்டுகோல் என்பதை நீங்கள் அறிந்தீர்களானால், அந்த நடத்தையை உங்களால் கணிக்கமுடியும். பகை மாம்சத்தின் கிரியை (கலாத்தியர் 5:9)

கோபம், பகையின் வெளிப்பாடாக இருக்கலாம். தற்செயலாக, கோபம் உயர் இரத்த அழுத்தத்தை உருவாக்குகிறது. நீங்கள் அடிக்கடி கோபப்பட்டால், உங்கள் இரத்த அழுத்தம் அதிகமாகவே வைக்கப்பட்டிருக்கும். இங்கு நல்ல சிகிச்சை ஒன்று உண்டு. கோபத்தையும், பகையையும், விரோதத்தையும், ஆத்திரத்தையும் நீக்கிவிட்டால் உங்கள் இரத்த அழுத்தம் குறைந்துவிடும்.

மனரீதியான மற்றும் உணர்ச்சிவசப்படும் குணங்களோடு, நீண்ட வாழ்நாள், நல்ல ஆரோக்கியம், மற்றும் நம்முடைய வாழ்க்கை இணைக்கப்பட்டுள்ளது. நாம் தவிர்க்கவேண்டிய சில காரியங்கள் இங்கு உண்டு. சுயபரிதாபம், கோபம், எதிர்ப்புகள், சகிப்பு தன்மை இன்மை, பொய்யான பெருமை, சுயநலம், பேராசை, மற்றவர்களைக் குற்றம் சாட்டுதல், வேறுபாடுகள், அதிருப்தி, பொறுமையின்மை, பயம், சுய-வெறுப்பு, பொறாமை, அலட்சியம்.

நாம் வளர்த்திக்கொள்ளவேண்டிய குணங்கள் - மற்றவர்களை மன்னித்தல், சுய-மன்னிப்பு, அன்பு, புரிந்துகொள்ளுதல், யதார்த்தம், சகிப்புத்தன்மை, மனத்தாழ்மை, சேவை, தாராள மனப்பான்மை, நேர்மை, இணக்கம், திருப்தி, விசுவாசம், மற்றவர்களை நியாயந்தீர்க்காதிருத்தல், மற்றவர்கள் மீதான அக்கறை, நன்றியறிதல். இந்த நற்பண்புகள், மகிழ்ச்சி, ஆற்றல், நகைச்சுவை, அன்பு, நன்னம்பிக்கை, பயன், மற்றும் நல்ல நோக்கங்களை உருவாக்கும்.

நல்ல குணங்களுக்கும், ஆரோக்கியத்திற்கும் இடையே ஒரு தொடர்பு உள்ளது. கெட்ட குணங்கள் மோசமான உடல் நலத்தை உருவாக்குகிறது. ஒருவேளை இந்த உலகில் பலர் உடல் சரியில்லாமல் இருப்பதற்கு இதுவே காரணமாக இருக்கலாம்!

### மற்றொரு கேள்வி

நம்மில் எத்தனை பேர் இதுவரை வெறுத்திருக்கிறோம்? நம்மில் எத்தனை பேர் ஒரு வலுவான உணர்வுடன் ஒருவரை வெறுத்திருக்கிறோமா? அபூரண மனிதர்களின் நடைமுறையே வெறுப்பு தான். நாம் அனைவரும் இதை அனுபவித்திருக்கிறோம். இது நம்முடைய மாம்சத்தின் தூண்டுதல்களாக இன்னும் தொடர்ந்து வந்துக்கொண்டிருக்கிறது என்பதை சிலர் நேர்மையாக ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

நீங்கள் பகைத்தால், நீங்கள் ஒரு கொலையாளி என்று அர்த்தமா? இந்த வெறுப்புணர்வை, அடிக்கடி நழுவி தப்பித்துக்கொள்ளக்கூடியதும் மற்றும் கட்டுப்பாடற்றதாகவும் இருப்பதற்காக நம்மை கொலைக்காரர்கள் என்று அப்போஸ்தலனாகிய யோவான் கண்டனம் செய்கிறாரா? நான் அப்படி நினைக்கவில்லை. யோவான் என்ன சொல்ல முயலுகிறார், என்பதை பின்தொடர்ந்து ஆராய்வோம். அப்போஸ்தலனுடைய சிந்தையில் என்ன இருந்தது என்று கண்டு, தெய்வீக குடும்பத்தின் அங்கத்தினராக இருக்கக்கூடிய நாம் என்ன பாடங்களை கற்றுக்கொள்ளலாம் என்று பார்க்கலாம்.

1யோவான் 3:15 ல் யோவானின் குறிப்புகள் மிக தெளிவாக உள்ளது. "தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்தியஜீவன் நிலைத்திராது என்று அறிவீர்கள்." இது தெளிவாகிறது. இருதயத்தின் முக்கியத்துவத்தை பற்றி மத்தேயு15:19 ல் இயேசு வலியுறுத்துகிறார்."எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டுவரும்."மத்தேயு5:28ல் "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று." என்று கூறுகிறார். நம்முடைய இருதயங்களின் அடிப்படையில் தான் நாம் நியாயந்தீர்க்கப்படுகிறோம். இருதயமே நமக்குள் இருக்கும் புது சிருஷ்டி. ஆகவே நாம் இந்த இருதயத்தை ஜீவனோடு முழு காவலோடு காத்துக்கொள்ளவேண்டும்.

நம்மை சுற்றியுள்ள வெறுப்பை பார்க்க அது அதிகம் எடுத்துக்கொள்வதில்லை. சுய அழிவு என்ற ஒரு இறங்கு சுழற்சியில், வெறுப்பு, வெறுப்பை பெருக்கும், வன்முறை வன்முறையை பெருக்கும், தனிமை தனிமையை பெருக்கும்.தீமை தீமையை விளைவிக்கும், உலகம் முழுவதையும் துன்பகரமான மற்றும் சீரழிவின் இருண்ட இருளில் தள்ளப்படும்படிக்கு யுத்தங்கள் இன்னும் அதிகமான யுத்தங்களை பிறப்பிக்கும்.

ஹிட்லர் யூதர்களை வெறுத்தான். அவனுடைய பகை ஜெர்மானியர்களை அசுத்தப்படுத்தியது. இந்த வெறுப்பு ஆறு மில்லியன் ஜனங்களுக்கு மரணத்தை அளித்தது. இந்த வெறுப்பு மற்றவர்களின் எதிர் வெறுப்பை உருவாக்கியது. இரண்டாம் உலக போரில் 17 மில்லியன் வீரர்கள் மற்றும் 34 மில்லியன் பொதுமக்கள் அழிக்கப்பட்டனர். ஒரு தனிமனிதனின் ஹிட்லரின் பகை, மில்லியன் கணக்கான ஜனங்களின் அழிவை ஏற்படுத்தியது.

"சகோதரனை பகைக்கிறவன் கொலைபாதகன்" என்று அப்போஸ்தலனாகிய யோவான் உணர்வுப்பூர்வமாக கூறினார். அன்பு ஜீவனை ஊக்குவிக்கும். பகை ஜீவனை மங்கச் செய்யும். மேலும் பகைக்கிறவன் "மரணத்தில் நிலைகொண்டிருக்கிறான்" (1யோவான் 3:14 ) ஒருவர் பகையை வளர்த்துக்கொண்டிருந்தால், அவருடைய சொந்த ஆவிக்குரிய வாழ்க்கைக்கும், புதிய சிந்தைக்கும் ஆபத்துள்ளது.

மனதை மூன்று பாகங்களாக பிரிக்கலாம் என்று சமீபத்திய அறிவியல் சிந்தனை குறிப்பிடுகிறது - பகுத்தறிவு, உணர்ச்சி மற்றும் ஆன்மீகம். ஒரு பண்பு வலுவானதாக இருந்தால் மற்றவைகள் அது கீழ்ப்படுத்திவிடும். இவ்வாறாக, உணர்ச்சியின் ஒரு அம்சமான வெறுப்பு, மற்றவைகளை (பகுத்தறிவு, ஆன்மீகம்) கீழ்ப்படுத்திவிடுகிறது.

### மூன்று வசனங்கள்

ஆவிக்குரிய வாழ்க்கை என்பதற்கு புதிதான ஜீவன். புதிதான ஜீவன் ஆவிக்குரிய ஜெநிப்பித்தலின் விளைவாகும். இந்த புதிய மனது, புது சிருஷ்டி என்று அழைக்கப்படுகிறது. இந்த மூன்று வசனங்களும் ஆவிக்குரிய வாழ்க்கையைப் பற்றி பேசுகிறது.

யாக்கோபு1:18 -"அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார்." சத்தியம் ஆவிக்குரிய வாழ்க்கையின் வித்தாக மாறுகிறது. சத்தியத்தை உட்கொள்வதின் விளைவே ஆவிக்குரிய வாழ்க்கையாகும். ஒரு நபரின் சத்தியத்தை

நாம் கண்டனம் செய்தால், அவருக்கு ஆன்மீக வாழ்க்கையை கொடுத்ததை நாம் கண்டனம் செய்கிறவர்களாக இருப்போம்.

வெளிப்படுத்தல் 3:5 - "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும்." ஒருமுறை புதிய ஜீவன் தொடங்கப்பட்டதை, பரலோகத்தில் ஜீவ புத்தகத்தில் பதிவு செய்யப்படுகிறது. இது அடையாளமும் பெயரும் ஆகும். ஒரு நபரின் அடையாளத்தை நாம் காயப்படுத்தவோ, கண்டிக்கவோ செய்தால், ஜீவ புத்தகத்திலிருந்து அந்த நபரின் பெயரை அழிக்க நாம் சொல்லக்கூடியவர்களாக இருப்போம்.

I சாமுயேல் 10:6 - "அப்பொழுது கர்த்தருடைய ஆவி உன்மேல் இறங்குவார்; நீ அவர்களோடே கூடத் தீர்க்கதரிசனம் சொல்லி, வேறு மனுஷனாவாய்." புதிய ஜீவன் ஒரு புதிய குணம், ஒரு புதிய நபர், புகழ்ச்சிக்குரிய பாத்திரம். ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட குணலட்சணத்தை நாம் கண்டனம் செய்தால், நாம் அவர்களின் குணலட்சணத்தை படுகொலை செய்கிறவர்களாக இருப்போம்.

ஆகவே, புதிய சிந்தையே, புதிய ஜீவன். இது நான்கு கூறுகளை கொண்டதும், ஜீவிக்கும் ஒரு நிறுவனமாகவும் உள்ளது. இவைகள் ஒரு பிணையலில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இந்த உறுப்புகளில் ஒன்றை நீங்கள் அழித்தால், நீங்கள் ஜீவனை அழிப்பவராக இருப்பீர்கள்.

(1)புதிய வாழ்க்கையை வளர்க்கும் நம்பிக்கையின் முறை.

(2)நன்மதிப்போடு ஒரு பெயர்.

(3)ஒரு புதிய குணம்.

(4)அனுபவங்களின் தொகுப்பு

**வெறுப்புக்கு நான்கு ஆதாரங்கள்**

மனதில் இந்த கொடிய அம்சமாகிய, வெறுப்பின் சில ஆதாரங்களை நாம் ஆராயலாம்.

**1.வேறுபாடுகள்.** வெறுப்பின் ஒரு முக்கிய ஆதாரம் வேறுப்பாடு. குறிப்பு - நாம் அவைகளை அனுமதித்தால், அவைகள் இருக்க முடியும். வேறுபாடுகள் பிரச்சனைகளை உண்டுபண்ணும். ஆயினும், இந்த பிரபஞ்சத்தில் உள்ள வேறுபாடுகள் தேவனுடைய கோட்பாட்டின் வேறுபாடுகள். இவைகள் வித்தியாசங்களை அழகுக்கான ஆதாரம் என்பதால் இத்தகையான வேறுபாடுகள் சுவாரஸ்யமாக காணப்படுகிறது. நம் சிருஷ்டிகர் நம்மை வேறுபாடுகள் இல்லாமல் உண்டாக்கியிருந்தால்.. சற்று நினைத்துப்பாருங்கள். இது உலகம் சலிப்பாகவும், இயந்திர மனிதர்களாகிய ரோபோட்டை போலிருக்கும். மாறுபாடுகள், மாற்றங்கள், கருத்துவேறுபாடுகள் அனைத்தும் அவரது உயிரினங்களுக்கு அழகு மற்றும் கவர்ச்சியுள்ள வாழ்க்கையை கொடுக்கும் என்று நம்முடைய சிருஷ்டிகர் கூறுகிறார்.

தோட்டத்தில் மிக அழகிய மலர் எது என்று ஒருவர் வாதிட முடியுமா? அது ரோஜா மலரா அல்லது கார்நேஷனா? அது லீலி மலரா அல்லது கார்டேனியாவா? அது டெய்சியா அல்லது டியூலிப்பா? இந்த கேள்விகளுக்கான விடையை நம்மால் சொல்ல முடியும் என்று எண்ணுகிறீர்களா? அவைகள் அனைத்தும், தங்கள் தங்கள் வழியிலே அழகானவைகள் அல்லவா? வேறுபாடுகளை நாம் அழகாக ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது?

அதேபோல, எது சிறந்தது, என் வழியா அல்லது உன் வழியா, என் விருப்பமா அல்லது உங்களது விருப்பமா, என்று வாதிட விரும்புபவர்கள் யார்? நிச்சயமாக, சரியான தேர்வு அல்லது தவறான தேர்வு இருக்கும் நேரங்கள் உள்ளது. அப்போது நாம் சரியான தேர்வுக்காக போராடவேண்டும். ஆனால், பிரச்சனைகளில், பெரும்பாலானவை எனது முன்னுரிமைகள், உங்கள் விருப்பத்தேர்வுகள் அல்லது எனது வழி மற்றும் உங்கள் வழிக்கு எதிராக இருந்தால் மிகவும் ஆச்சரியப்படவேண்டாம். "" என்று ரோமர் 12:10 ம் வசனம் கூறுகிறது. மற்றவர்களின் தேர்ந்தெடுப்புக்கு முன்னுரிமை கொடுக்கையில், வேறுபாடுகளை அகற்றி, நம் இருதயங்களை காத்துக்கொள்கையில், மற்றவர்களோடு ஏற்படும் மோதல்களை முழு கட்டுப்பாட்டில் வைத்து, நம்முடைய இருதயத்திலிருக்கும் வெறுப்பையும் விரக்தியையும் ஒழித்துவிடுகிறது.

**1.பொறாமை.** பொறாமை மிகவும் மோசமானது. ஆனால் இதன் விளைவாக, வெறுப்பு மரணத்தை ஏற்படுத்தலாம். பொறமையைப் பற்றி நான்கு கூர்நோக்குகள் உள்ளது. (அ) காய்மகாரமும், பொறாமையும் ஒரே பொருளை உடையதாக இல்லாத போதிலும், பொறாமை என்ற உணர்வு காய்மகாரத்தோடு நெருங்கி சீரமைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக காய்மகாரத்தை பொருத்தவரையில் நாம் மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அதை அனுமதித்தால், இரண்டாம் நிலையான பொறாமைக்குள் நம்மை இழுத்து செல்லும் ஆகவே, அதை முற்றிலுமாக நீக்கவேண்டும்.

(ஆ)நம்மிடம் இருக்கும் சில சலுகைகள், வாய்ப்புகள், அங்கீகாரம் மற்றும் வளங்கள் காணப்படும்போது, மற்றவர்களுக்கு காய்மகாரம் எழும்பும். ஒரு சகோதரரிடம் இருக்கும் வளங்களை காணும்போது நீங்கள் பொறாமை கொண்டால், அதே போன்ற வளங்கள் பெறும் விரக்தியை நீங்கள் அனுபவிப்பீர்கள். பொறாமையும் வெளிப்படும், வெறுப்பும் அண்மையில் இருக்கும். (இ) தனிப்பட்டவரின் வெறுப்பு பொறாமையை பொங்கி எழச்செய்கிறது. இதற்கு எதிராக நம்மை பாதுகாத்துக் கொள்ளவேண்டும். நமக்குள் பற்றாக்குறையின் உணர்வை உருவாக்கும் எந்த ஒரு காரியத்தையும் நாம் வெறுத்து தள்ளவேண்டும். நம்முடைய குறைபாடுகளுக்கு விரிவான நியாயங்களை நம்மால் உருவாக்க முடியும், மேலும் நாம் யாரை பார்த்து பொறாமை கொண்டோமோ அவர்களை தாராளமாகவும் கண்டிப்போம்.

(ஈ) பொறாமை தலைமையோடு தொடர்புடையது. நம்மிடத்தில் தலைமைத்துவத்திற்கான வேதப்பூர்வமான வழிமுறையை மத்தேயு 20:27ல் கொடுக்கப்பட்டுள்ளது. "உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனா யிருக்கக்கடவன்."ஊழியமே, தலைமைக்கு வழிநடத்தும் சாலை. ஊழியம் செய்பவர்களை கண்டு பொறாமை கொள்ளவேண்டாம், நீங்கள் ஊழியம் செய்யலாம்! உண்மையில் திராட்சை தோட்டத்தின் வேலை மிக அதிகம் ஆட்களோ மிக குறைவு.

கர்த்தருடைய ஜனங்களிடையே இந்த பொறாமை என்ற பிரச்சனைகளினால் மற்றொரு ஆபத்துண்டு. நம் ஒவ்வொருவரையும் தேவன் தெரிந்தெடுத்தார் என்றும் (யோவான் 15:16). தேவன் தான் நம் ஒவ்வொருவருடைய வளர்ச்சிக்கும் பொறுப்பாளர் என்றும் (யோவான் 17). இறுதியாக. தேவன் தான் நம் ஒவ்வொருவரையும் மதிப்பிடுவார் என்றும் (மத்தேயு22:14) நாம் விசுவாசித்தால். பின்னர் எந்த முன்கூட்டியே மதிப்பீடும். முன் தீர்ப்பும் முன் கண்டனம் தெரிவித்தலும் தேவனுக்கு எதிரான வேலை. நண்பர்களே இது நிதானமானது. எந்த ஒரு முந்தைய மதிப்பீடும் தேவனுடைய வேலையை மங்கச் செய்யும். தேவன் செய்கிறதை குறைத்துவிடும். தேவன் நம் ஒவ்வொருவருக்கும் எதை விரும்புகிறாரோ. அதை முடிக்க நாம் அவரை அனுமதிக்கவேண்டும்.

வெறுப்பு. வெறுப்பு கொள்பவரை மட்டும் அல்ல வெறுப்பவரையும் பாதிப்பதே மூன்றாவது ஆபத்தாகும். வெறுப்பு நம்முடைய சொந்த ஆவிக்குரிய வாழ்க்கையையும். உடல் நலனையும் பாதிக்கலாம். இங்கு தனிப்பட்ட காரியம் ஒரு உண்டு. வெறுப்பு. வெறுப்பவரை காட்டிலும் வெறுக்கக்கூடியவருக்கு அதிக கேடுண்டாக்கும்.

**3.பொய் பேசுதல்.** வெறுப்பின் மற்றொரு ஆதாரம் பொய். பலர் அதை பற்றி அறியாமலே பொய் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அது அவர்களது வாழ்க்கையின் ஒரு பகுதியாகிறது. அதுவே ஒரு பழக்கம் ஆகிவிடுகிறது. பொய் தவறாக பேசுவதாகும் அல்லது உண்மை இல்லாத காரியங்களை பேசுவதாகும். இங்கு சில எடுத்துக்காட்டுகளை காணலாம். (a) ஒரு நபர். ஐந்து மொழிகளில் பேச முடியும் என்று சொல்லி. ஐந்து மொழிகளில் "காலை வணக்கம்" மட்டுமே சொல்லுவது. இது மிகைப்படுத்தப்பட்ட ஒரு பொய்யாகும். (b) ஒரு நபர் ஊழியத்திற்கான வாய்ப்பை இழந்துவிடுவதற்கு. சரியான காரணம் சொல்லாதது.(c)ஒரு கூட்டம். அல்லது வேலை போன்ற எங்காவது போவதை தவிர்ப்பதற்காக. நாம் நோயால் அவதிப்படுகிறேன் என்று சொல்வது பொய். இது ஒரு ஈடுசெய்யும்( compensatory) பொய்யாகும்.

(d) ஒருவர் வீட்டில் படுத்துக்கொண்டு. தான் வீட்டில் இல்லை. என்று மனைவியிடம் சொல்லச்சொல்வது பொய். இது அவருக்காக பொய் சொல்ல மற்றொருவரை தூண்டுவது. இது ஒரு பதிலீட்டு(substitution) பொய்யாகும். (e) சமூக பாதுகாப்பு அல்லது நலன்புரித் தகுதிகள் போன்ற அரசாங்க வடிவங்களைப் பற்றிய தகவலை ஒருவர் தவறாக கொடுப்பாரானால் அவர் நாணயமற்றவராக. பொய் சொல்பவராக இருப்பார். இது ஒரு சுரண்டும் (exploitive) பொய். (f) ஒரு நபர். அநீதியாக நடப்பதற்காக. தவறான காரியங்களை கூறுவது. பழிவாங்குதலுக்கான பொய்.

ஒரு தனிநபரின் பரிசுத்தத்திற்கான நடைமுறையான வரையறை. அவருடைய வாழ்க்கை பொய்யற்றதாக இருக்கவேண்டும். பரிசுத்தமே உண்மையானது. வஞ்சிக்கப்படுதல். பொய் அல்லது நேர்மையற்ற தன்மை ஆகியவற்றில் பரிசுத்தம் இருக்காது. தேவன் நம்மை சுத்திகரித்து பரிசுத்தமாகும்படி கூறும்போது. நம்முடைய சரீரத்தின் சுத்திகரிப்பை அல்ல. மாறாக நமக்குள்ளிருக்கும் பொய்களை விரட்டவேண்டும் என்கிறார்.

**4.வீண்பேச்சு மற்றும் வம்பு பேச்சு.** வம்பு பேச்சுக்கள். வெறுப்பின் மற்றொரு ஆதாரமாகும். ஜனங்களை பற்றிய வீண் பேச்சு. வீண்பேச்சுக்கள். வதந்தி பேசுதலும். கிசு கிசு பேச்சுக்களும். மற்றொரு நபரின் விவகாரங்களைப் பற்றிய அரட்டையாகும். ஜனங்கள் மேல் ஆர்வமும் அக்கறையும் காட்டப்படுவதால். வீண் பேச்சுக்கள் மோசமானதல்ல. இது ஒரு பொழுது போக்காகவும். பெரும்பாலும் மற்றவர்களை பாதிக்காமலும் இருந்தாலும். அது கண்டனம் தெரிவிக்கக்கூடிதாக இருக்கலாம்.

ஜனங்கள் ஏன் வீன் பேச்சுக்களை பேசுகிறார்கள் ? இதை குறித்து நீங்கள் ஆச்சரியப்பட்டதுண்டா ? இதற்கு அநேக காரணங்கள் உண்டு. முதலாவது அவர்கள் செய்வதற்கு ஒன்றுமில்லை.(1தீமோத்தேயு5:13 ) மூளை என்ற ஒரு உறுப்பு. ஏதோ ஒரு வழியில் செயல்பட்டுக்கொண்டே இருக்கவேண்டும். ஒருவர் தினமும் 5000 எண்ணங்களை சிந்திக்கிறார். நீங்கள் எதையும் கற்றுக்கொள்ளவில்லை என்றால். நீங்கள் வீண்பேச்சுகளுக்கு உங்களை உட்படுத்திகொள்கிறீர்கள். இரண்டாவதாக. அவர்களின் வாழ்க்கை சலித்துவிட்டதினால். தங்களை உற்சாகப் படுத்திக்கொள்ளக்கூடிய காரணிகள் தேவைப்படுகிறது. மூன்றாவதாக. அவர்களுக்கு இருக்கும் குறைந்தபட்சமான ஆர்வங்கள். திறமைகள் அல்லது பழக்கவழக்கங்கள் தங்கள் அறிவை ஆக்கிரமித்துக்கொள்கிறது. நான்காவதாக. குழந்தைகள் வளர்ந்து வரும் சமயத்தில். தாய்மார்கள் அல்லது தந்தையானவர்கள் கொடுக்கும் ஆலோசனைகள். விசாரணை. கடிந்துகொள்ளுதல் போன்றவைகளை விரும்பலாம். மற்றவர்களுக்கு பெற்றோராக இருப்பதை நிறுத்த முடியாது.

ஆனால் வீண்பேச்சுகள் எப்போது ஆபத்தாகிறது ? முதலாவது. இது ஒரு பகுதியாக தகவல்கள். முழுமையற்ற செய்திகள். திரிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் தவறான தகவல்களை கொண்டு கையாளப்படுகிறது. இவைகளை நாம் வாந்திகள் என்று அழைக்கிறோம். விடுப்பட்டுள்ள தகவல்களை நம்முடைய மனதில். தவறானதாக நிரப்பிவிடுவோம். "அந்த சகோதரர். ஸ்மித் 34 ஆம் எண் பாதையில் நேற்று மாநில காவலரின் கார் பின்னால் வாகனத்தை நிறுத்தியிருந்தாரே."- இது போதுமான தகவல் அல்ல. நடந்த முழு கதையையும் தெரிந்துக்கொள்ளவேண்டும் என்று ஜனங்கள் விரும்புவார்கள். "என்ன நடந்தது? "எனக்கு தெரியாது. விரைவாக சென்றதற்காக. அவர் காவல்துறையினரால் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கவேண்டும்" அது தான். "சகோதரர் ஸ்மித் ஒரு கடினமானவர் என்று சொல்லப்படுகிறது. அவர் சட்டங்களுக்கு கீழ்ப்படிவதில்லை. உண்மை என்னவென்றால். சாலையின் நடுவில் நின்றுக்கொண்டிருந்த ஒரு முடமான வாகனத்தைப் பற்றி. மேலதிகாரியிடம் சொல்லுவதற்காக ஸ்மித் அவரது காரை. அதை கவனிக்கும் போலீஸாரிடம்

நிறுத்தினார். உண்மையான விஷயம் என்னவென்றால், இந்த சாலையின் ஒரு முடங்கிய வாகனம் நடு ரோட்டில் உள்ளது என்பதை அதிகாரியிடம் சொல்லவே. சகோதரர்.ஸ்மித் மாநில காவலரின் நிறுத்தியிருந்த கார் பின்னால் தனது வாகனத்தை நிறுத்தவேண்டிதாக இருந்தது. வதந்திகள் அல்லாத வீண்பேச்சுகள் எவ்வளவு ஆபத்தானது. இதுவும் பொய் தான்.

ஜனங்களின் நடத்தையை எடுத்துக்கொண்டு. அதன் நற்பெயருக்கு களங்கம் விளைவித்து. அதினால் அவர்கள் நடத்தையில் கேள்வி எழுப்பி விடுகிறார்கள்.

வதந்திகள் ஜனங்களின் பின்னால் பேசப்படுவதே. இது மிக ஆபத்தாக இருப்பதற்கான காரணமாகும். குறிப்புகளை உறுதிப்படுத்தவோ அல்லது காணாமல் போன தகவலை கொடுப்பதற்கோ அந்த நபர் இல்லை. அவர் அங்கு இல்லாததினால் படுகொலையின் செயல்முறை தொடங்குகிறது.

**அவதூறு - வெறுப்பவரின் ஒரு ஆயுதம்**

ஒருவரை காயப்படுத்த வேண்டுமென்றே பொய் சொல்லுவது அவதூறாகும். அவதூறு பேசுகிறவர். ஒரு நபரின் நற்பெயரை அல்லது புகழையோ அழிக்க விரும்புகிறார். வெறுப்பினால் தூண்டப்படும் அவதூறு பேச்சுக்களின் (பழிதூற்றாளர் )எட்டு விதைகளை நாம் பட்டியலிடுவோம்.

(1)ஒரு பழிதூற்றாளர். தான் குற்றவாளி அல்ல என்பதற்காக மற்றவர்களை குற்றம் சாட்டுகிறார். (2) ஒருவர் தகுதியடையாத வகையில் அவரை ஒரு பழிதூற்றுபவர் விவரிப்பார். (3) ஒரு பழிதூற்றாளர். மற்றொருவனை அழிக்கிறார். (4) ஒரு பழிதூற்றுபவர். மற்றொருவர் சொன்ன காரியத்தின் நிமித்தம் இவருக்கு தீமை வளைவிக்கும் என்று தகாவிதமாய் விடுவார். (5)அவதூறு பேசும் ஒருவர் மற்றொருவரை ஒரு மோசமான வெளிச்சத்தில் சிலரை குற்றம் சாட்டுவதற்காக. அவரை பற்றி தவறான விளக்கம் தந்து. உண்மையை மறைக்கலாம். (6) பழிதூற்றூபவர். கேட்போர் தப்பெண்ணம் கொள்வதற்கு தந்திரமாக ஆலோசனை சொல்வார்கள்.(7) அவதூறு பேசுபவர். மற்றவர்களின் குற்றங்களை மிகைப்படுத்தி அல்லது பெரிதாக்குவார். (8) பழதூற்றூபவர். ஆதாரம் இல்லாமல். தீமையான உள்நோக்கங்களை தூண்டி விடுவார். பழிச்சொல்லுதல் பேசுபவரையும். பேசக்கூடியவைகளையும் கெடுத்துபோடும்.

**உயர் தரநிலைகள்**

தேவன் அழைக்கப்பட்டவர்களின் முன் வைத்திருக்கும் தரநிலை. மிகவும் சவாலானதாக உள்ளது. பத்து கட்டளைகள் இஸ்ரயேலர்களுக்கு சவாலாக இருந்ததாக நாம் நினைத்தால். மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட கட்டளைகள் மிக பாரமானது என்று நாம் நினைத்தால். நியாயப்பிரமாணம். யூத ஜனங்களை அதிகமாக எதிர்பார்க்கக்கூடியதாக இருந்தது என்று நாம் நினைத்தால். தேவன் தம்முடைய தேர்ந்துகொள்ளப்பட்டவர்களிடம் எதிர்பார்ப்பதற்கு ஒப்பிடுகையில் இது மிக சிறியதாக இருக்கிறது. பத்து கட்டளைகள் யூதர்களுக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் கிறிஸ்தவர்களாகிய நமக்கு இன்னும் உயர்வான சட்டங்கள் அதாவது மனிதர்களுக்கு அப்பால் உள்ள சட்டங்கள் நமக்கு கொடுக்கப்பட்டது. இது மோசேயினால் கொடுக்கப்பட்ட பத்து கட்டளைகளை காட்டிலும். ஆவிக்குரிய பிரமாணங்கள் மிக சவாலாக இருக்கிறது. இந்த உயர்வான பிரமாணங்களை நாம் ஏன் கடைபிடிக்கவேண்டும்?

(1)தேவன் தாமே இந்த ஆவிக்குரிய பிரமாணத்தை பின்பற்றுகிறார்.நமக்கு தேவனுடைய பக்தி அவசியம் வேண்டும். (2) நாம் ஆவிக்குரிய சரீரங்களை பெறுவதற்காக. அதாவது நாம் ஆவிக்குரிய பிரமாணங்களுக்கு இணங்குவதை இது பொருள்படுத்துகிறது. (3) "பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று (நியாயப்பிரமாணத்தை குறிப்பிடுகிறார் ) கேள்விப்பட்டிருக்கிறீர்கள் - ஆனால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் (உயர்வான ஆவிக்குரிய பிரமாணம்) என்று இயேசு தாமே நம்மிடம் கூறினார்.

**சுருக்கம்**

அர்ப்பணிக்கப்பட்ட ஆவிக்குரிய வாழ்க்கையின் பெயரையோ. நற்பெயரையோ சேதப்படுத்தினால். ஜீவபுத்தகத்திலுள்ள பதிவுகளையும் நாம் சேதப்படுத்தக்கூடும். ஒரு அர்ப்பணிக்கப்பட்ட ஆவிக்குரிய வாழ்க்கையின் குணநலன்களை சேதப்படுத்தினால். வளர்ச்சி அடையக்கூடிய புது சிருஷ்டியை நாம் சேதப்படுத்தக்கூடும். நாம் அர்ப்பணிக்கப்பட்ட ஆவிக்குரிய வாழ்க்கையின் சத்தியத்தை நாம் கண்டனம் செய்தால் - இது கண்டனம் செய்வது. கருத்து வேறுபாடுகள் அல்லது விமர்சிப்பது அல்ல- புதிய ஜீவனை உற்பத்தி செய்யும். அந்த வித்தையே சேதப்படுத்துபவர்களாக இருப்போம்.

அர்ப்பணிக்கப்பட்டவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கை. தேவனுடைய பார்வையில் மிகவும் விலையேறப்பெற்றது. உண்மையில், தேவன் இந்த பூமியின் மேல் இவர்களை மட்டுமே ஜீவனுள்ளவர்களாக பார்க்கிறார். மற்ற எல்லாம் மரித்திருக்கிறது. ஆவிக்குரிய வாழ்க்கை மிகவும் மேன்மையானது. எளிதில் உடையக்கூடியது. இந்த வாழ்க்கை தேவனுக்கு பரிசுத்தமாக இருப்பது போல நமக்கும் பரிசுத்தமாக இருக்கவேண்டும். ஒருவர் சத்தியத்தை விட்டு விலகுவதற்கு காரணமாக. நாம் சரியானதையோ. தவறானதையோ அல்லது நியாயமானதையோ. அநியாயமானதையோ செய்தால். நாம் தேவனுக்கு எதிராக வேலை செய்கிறவர்களாக இருப்போம். தேவன் செய்வதை குறைக்கக்கூடியவர்களாக இருப்போம். இதற்கு நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டியவர்களாக இருப்போம்.

மறுபுறம். தேவன் துவக்கி வைத்திருக்கும் புதிய ஜீவனை போஷிப்பிப்பதற்கு நாம் செய்யக்கூடிய எந்த காரியமும். அதாவது. நீர் பாய்ச்சுவது. அதை மேம்படுத்துவது. அதற்கு உதவி செய்து பராமரிப்பது போன்ற காரியங்கள் தேவனோடு வேலைச் செய்வதாகும். தேவன் செய்யக்கூடியவைகளோடு நாமும் கூடுதலாக செய்து. தேவனுடைய திட்டத்தில் ஒரு பகுதியாக இருக்கிறோம். தேவன் நிச்சயமாக நம்மை ஆசீர்வதிப்பார்.

# குற்றம் மற்றும் தண்டனை

"துர்க்கிரியைக்குத்தக்க தண்டனை சீக்கரிமாய் நடவாதபடியால். மனுபுத்திரரின் இருதயம் பொல்லாப்பைச் செய்ய அவர்களுக்குள்ளே துணிகரங்கொண்டிருக்கிறது." பிரசங்கி *8:11"*

*James Parkinson*

உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் குற்றம் என்பது நடந்துகொண்டிருக்கிறது. அந்த குற்றத்தை சமாளிக்கும் முறை ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு முறையில் கையாளப்படுகிறது. குற்றவாளிகளுக்கு சிறை தண்டனை. அதுவும் குறிப்பாக தொழில் மயமான நாடுகளில் இந்த அணுகுமுறை அதிகரித்துள்ளதாக தற்போதைய தகவல்கள் குறிப்பிடுகின்றன. உலகம் முழுவதும் உள்ள சிறைகளில் இன்று ஒன்பது மில்லியன் மக்கள் உள்ளனர் என்று statista என்ற ஒரு வலை அடிப்படையிலான தகவல் நிறுவனம் குறிப்பிடுகிறன்றது. இந்த ஒன்பது மில்லியனில் பாதி மக்கள் மூன்று நாடுகளில் கைதிகளாய் உள்ளன - அமெரிக்கா. ரஷ்யா மற்றும் சீனா 100.000 நபருக்கு 655 நபர் என்ற சிறைபிடிக்கப்படுதல் விகிதத்திற்கு ஏற்ப தொழில் மயமான உலகில் அமெரிக்கா தான் உயர்ந்த நிலையில் உள்ளது. 100000 நபருக்கு 581 என்ற விகிதத்தில் ரஷ்யாவின் மக்கள் சிறையில் உள்ளன. நம்பதக்க தகவல்கள் இல்லையென்றாலும். சீனா இவ்விரண்டிற்கும் இடையில் உள்ளது.

1960 ஆம் ஆண்ட்டின் துவக்கத்தில். அமெரிக்காவின் சிறைசாலைகளை விரிவுப்படுத்த ஒரு பெரிய மூலதனம் முதலீடு செய்யப்பட்டது. கட்டாய தண்டனைகளை செயல்படுத்துதல். குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகமாக காரணமாய் இருந்த போதைப்பொருள் விற்பனையாளர்களை கைதி செய்ய இந்த முதலீடு செலவிடப்பட்டது. குற்றவாளிகள் என்று சந்தேகப்படுபவர்களுக்கு எதிராக வலுவான. சாத்தியமான தண்டனை அளிக்க பெடரல் வழக்கறிஞர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மனநல நோய்க்கான தேசிய கூட்டணி (NAMI)படி. அமெரிக்காவில் கிட்டதட்ட 500.000 கைதிகள் மனநலம் பாதிக்கப்படுகின்றனர். அவர்களில் பலர் மிகவும் கடுமையான நிலையில் உள்ளனர். இருப்பினும். சமூக விரோத ஆளுமைக் கோளாறு. எல்லைக் குட்பட்ட ஆளுமைக் கோளாறு மற்றும் மனத் தளர்ச்சி போன்ற பிற மனநல நோய்கள் சேர்க்கப்பட்டால். NAMI யின் கருத்தின்படி மனநல நோய் மற்றும் பொருள் துஷ்பிரயோகம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களில் 50 சதவிகிதத்திற்கும் அதிகமாக உள்ளனர்.

### வெற்றியின் தோற்றம்

2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியிடப்பட்ட பியூ ஆராய்ச்சியின்படி. கடந்த ஆண்டுகளில் அமெரிக்காவின் வன்முறை குற்றம் கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. அதன் வருடாந்தர அறிக்கையில். FBI சுமார்18.000 அதிகார துஷ்பிரயோகங்களில். காவல் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள குற்றங்கள் 1993 மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கு இடையில் 49% மாக வீழ்ச்சியடைந்துள்ளது. Bureau of Justice statistics (BJS)தங்கள் வருடாந்திர அமெரிக்கர்கள் குற்றவாளிகள் என்று குற்றம் சுமத்தப்பட்டிருந்தாலும். காவல் நிலையத்தில் பதிவு செய்திருந்தாலும். அந்த விகிதம் 74% மாக குறைந்துள்ளது என்று அந்த நிறுவனம் கூறுகின்றது. மற்ற BJS மற்றும் FBI தகவல்கள் சொத்து சம்பந்தப்பட்ட குற்றங்கள். 50% மற்றும் 69% ஆக குறைந்துள்ளன. (இரண்டு ஆய்வுகளுமே 2017ஆம் ஆண்ட எடுத்த சமீப ஆய்வாகும்.)

இந்த சரிவு இருந்தபோதிலும். கருத்து கணிப்புகள் மேற்கொண்ட பியூ ஆராய்ச்சியின் அறிக்கையின்படி. அமெரிக்கர்கள் தங்கள் தேசத்தில் குற்றம் பெருகுவதையே நம்புகிறார்கள். 1993 ஆம் ஆண்டு சர்வதேச குற்றங்களைப் பற்றி ஆராய்ச்சி மேற்கொண்ட காலப் நிறுவனம். குறைந்தபட்சம் 10 பங்கேற்பாளர்கள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் குற்றம் மிகுந்துள்ளதாகவே கருத்து தெரிவித்தனர். BJS மற்றும் FBI ஆதாரங்களுக்கு மாறாக. 57% பதிவு செய்யப்பட்ட வாக்குகள். அமெரிக்காவில் குற்றம் இன்னும் மோசமாகி விட்டதாக. பியூவின் சொந்த ஆராய்ச்சி தெரிவிக்கிறன்றது.

### குற்ற விகிதத்தில் சரிவு

ஏன் மேற்கத்திய நாடுகளில் குற்ற விகிதங்கள் வீழ்ச்சியடைகின்றன. மினசோட்டயா சட்ட கல்லூரியின் பல்கலைககழகத்தின் எழுத்தாளர் மைக்கேல் டொன்றி. 1990ஆம் ஆண்டிலிருந்து. பெரும்பாலான மேற்கத்திய நாடுகளில் குற்றம் விகிதம் விரைவாக வீழ்ச்சியடைந்ததாகக் காட்டினார். Nonlethal வன்முறை விகிதங்கள். ஆங்கில மொழி பேசும் நாடுகளில் மற்றும் ஐரோப்பாவின் கண்டங்களில் தீவிரமாக வீழ்ச்சியடைந்துள்ளது. ஐரோப்பாவின் பிற பகுதிகளில். சார்பற்ற வன்முறை நிலையான நிலை அல்லது அதிகரிக்கும் நிலையில் உள்ளது.

The Vera Institute of Justice தனது *The Prison Paradox* என்ற வெளியீட்டில். சிறைவாசம் மற்றும் குற்ற விகிதங்களுக்கு கிடையிலான உறவு பற்றிய ஆய்வுகளை சுருக்கமாக விவரிக்கிறது. 2000 ஆம் ஆண்டு முதல். சிறைச்சாலைகளின் அதிகமான பயன் பாட்டினால். குற்ற செயல்களின் ஒட்டுமொத்த குறைப்பு ஏறத்தாழ பூஜ்யம் சதவீதம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அதற்கு பதிலாக. 1990 களில் இருந்து குற்றம் விகிதத்தின் வீழ்ச்சி 75மற்றும் 100 சதவீதத்திற்கு இடையே காணப்படுகிறது. சிறையிருப்பின் பயன்பாடு எவ்வளவு அதிகரித்துள்ளதோ அவ்வளவு குற்றங்களும் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த அறிக்கை கூறுகையில் "கொள்கை வகுப்பாளர்கள். சமுக. கலாச்சார மற்றும் அரசியல் செலவீனங்களை மேலும் பயனுள்ள மற்றும் திறமையான குற்றம் குறைப்பு உத்திகளுக்கு முதலீடு செய்யலாம். மற்றும் குற்றத்தின் அடிப்படை காரணங்களை ஆராய்யலாம்.

நியூயார்க் பல்கலைக் கழக சமூகவியலாளர் பேட்ரிக்வர்க்கி தன்னுடைய 2018 புத்தகமான ", *Uneasy Peace: The Great CrimeDecline, the Renewal of City Life and the New War on Violence*," யில் பெருமளவில் குற்றங்கள் குறைப்பு. நகர வாழ்வு புதுப்பித்தல் மற்றும் வன்முறை மீதான புதிய போர் ஆகியவை. குற்றவாளிகளை சிறையில் அடைப்பதாலோ. வன்முறை குற்ற விகிதங்களை மாற்றுவதாலே அல்ல என்று வாதிடுகிறது. இதன் காரணம்

* கைவிடப்பட்ட அல்லது வறுமை கோட்டில் வசிக்கும் நகர்ப்புற மக்கள்.

* தனிநபர் பாதுகாப்பு மற்றும் வீடுகளின் பாதுகாப்பு அமைப்புகளின் அதிகரிப்பு

* மோட்டார் வாகனத் திருட்டை தடுக்கும் தொழிநுட்பம் அதிகரிப்பு.

* பிரச்சனை மிகுந்த பகுதிகளில் பயனுள்ள சட்ட அமலாக்கம் மற்று போதை மருந்து சந்தையை மூடுவதாலும்.

**குற்றத்திற்கான உண்மையான காரணங்களை யெகோவா தேவன் நிர்மூலமாக்கவேண்டும்**

சிறைவாசத்தைப் பற்றி வேதாகம குறிப்புகளில் யோசேப்பு மற்றும் அவருடைய சகோதரர்களும் அடங்குவார்கள். (ஆதியாகமம் 39:20, 40:3-4,7, 42:16-19) மற்றும் பெலிஸ்த்தியர்களால் சிம்சோன் சிறைப்பிடிக்கப்பட்டார். (நியாயாதிபதிகள் 16:21) தோராவில், தீர்ப்பை நிறைவேற்றும் வரையில், வரம்பு மீறியவர்களைத் தடுத்து வைப்பதற்கும், மட்டுப்படுத்தப்பட்ட வழக்குகள் இருந்தன. (லேவியராகமம் 24:12, எண்ணாகமம் 15:34 ) பின்னர் இஸ்ரயேலின் வரலாற்றில், சிறைதண்டனை ஒரு நிர்வாக நடவடிக்கையாக ஏற்பட்டது. (1இராஜாக்கள் 22:27, 2நாளாகமம் 16:10, ஏரேமியா 37:15-16, 38:4-14) நீதிமன்றத்திடம் சிறைத்தண்டனையை ஒப்படைத்ததின் நோக்கம், அறிவுரைகளுடன் கீழ்ப்படிதலை கட்டயமாக கற்றுக் கொடுப்பதே ஆகும். (எஸ்றா 7:25-26)

நீண்ட கால சிறைவாசம் சட்டபூர்வ தண்டனையின் விருப்பமான முறை, நவீன கருத்தாகும். இது 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து மட்டுமே உருவாகிறது. மேற்கு ஐரோப்பா மற்றும் அமெரிக்கா முழுவதும் சிறைச்சாலைகள் கட்டப்பட்டன. சிறைச் சாலைகளில் நீண்ட கால சிறைப்பிடிக்கப்படுதல் மட்டுமல்லாமல், வேலை, ஒழுக்கம் மற்றும் தனிப்பட்ட பிரதிபலிப்பு ஆகியவற்றின் மூலம் கைதிகளை மேம்படுத்துவதன் நோக்கமான மேற்கு ஐரோப்பா மற்றும் அமெரிக்கா முழுவதும் சிறைச்சாலைகள் கட்டப்பட்டன. ஆனால் குற்றவாளிகளின் வாழ்வை மேம்படுத்துவதற்காக ஒரு மனிதாபிமான நோக்கத்துடன் ஆரம்பித்த இந்த செயல், நவீன சமுதாயத்தில் மிகவும் வன்முறை மற்றும் மனித தன்மை அற்ற ஒரு நிலையை உருவாக்கியுள்ளது. அறிக்கையிடப்பட்ட தகவல்கள் தெரிவித்தபடி, ஒரு குற்றவாளியை சிறையில் அடைப்பதால் அவன் குற்றம் புரியும் செயல்கள் அல்லது நோக்கங்கள் குறையும் என்று கூற இயலாது. குற்றவாளிகளுக்கு தண்டனை அளிப்பது ஒரு நியாயமான செயலாக இருந்தாலும், தண்டனை அளிப்பதால் ஒருவருக்கு மனரீதியான திருப்தி அளிப்பதே அதிலிருந்து கிடைக்கும் பலன் ஆகும் சிறையில் அடைக்கப்படுவது மனரீதியாக எந்த ஆரோக்கியத் தையும் தராது.

பொல்லாதவர்கள் நீதிமான்களுடன் சேர்ந்து உயிர்த்தெழும் காலத்தைக் குறித்து பவுல் கூறுகையில் "நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய பரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டென்று இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கைகொண்டிருக்கிறது போல நானும் நம்பிக்கைகொண்டிருக்கிறேன்." (அப்போஸ்தலர் 24:15 )தீமை செய்ய தூண்டுதல் என்பது கட்டுப்பாடு மற்றும் நீதியைக் கற்றுக் கொள்வது ஆகியவற்றால் மாற்றப்பட வேண்டும் என்று வேதாகமம் சுட்டிக் காட்டுகின்றது. "மனுஷனுடைய வழிகள் கர்த்தரின் கண்களுக்கு முன்பாக இருக்கிறது, அவனுடைய வழிகளெல்லாவற்றையும் அவர் சீர்தூக்கிப் பார்க்கிறார். துன்பார்க்கனை அவனுடைய அக்கிரமங்களே பிடித்துக்கொள்ளும். தன் பாவக்கயிறுகளால் கட்டப்படுவான்" (நீதிமொழிகள் 5:21,22) இவ்வாழ்வில் நினைவுபூர்வமான மீறல்கள் மற்றும் அத்தகைய செயல்களுக்கு இட்டுச்செல்லும் தன்மை குறைபாடுகளுக்கு ஆயிரம் கால அரசாட்சியில் நாம் கணக்கு கொடுக்க வேண்டும் என்ற அறிவுறுத்துகின்றது. இதேபோல், ஆயிரம் கால அரசாட்டியில், இந்த வாழ்வில் தம் மனசாட்சியின்படி நின்று செயல்பட்டவர்களுக்கு அந்த "நியாத்தீர்ப்பின் உயிர்த்தெழுதலின்" போது (யோவான் 5:29) தங்களின் உயர்ந்த குணத்திற்காக பரிசளிக்கப்படுவார்கள். (மத்தேயு10:42)

"துன்மார்க்கருடைய புயங்கள் முறியும். ." (சங்கீதம் 37:17)யெகோவா தேவன் தான் நியமித்த காலத்தில் பாவத்தையும் தீமையையும் ஒழிக்கப் போகிறார். நியாயம் இன்று நேர்மையுடன் நடப்பவர்களுக்கு ஒரு நஷ்டத்தை ஏற்படுத்தினாலும், கிறிஸ்து தனது நீதியான அரசாட்சியை நிறுவும் பொழுது அப்படி இருக்காது. (சங்கீதம் 5:4)தீமை இந்த உலகை ஊடுருவ முடியாத காலத்தைப் பற்றி குறிப்பிடுகிறார். (ஏசாயா11:9 ) என்றாலும், நடைமுறையான பாடத்தை மக்களுக்கு உணர்த்த துன்மார்க்கத்தை தாங்கிகொள்ள தேவன் அனுமதிக்கிறார். பாவத்தின் விளைவுகளை அனுபவித்த பின்பு உணரவேண்டும். "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23) ஆயினும், வலி துன்பம் மரணம் மனிதனிடமிருந்து அகற்ற தேவன் ஒரு பிரம்மாண்டமான காலத்தை திட்டமிட்டுள்ளார். துன்மார்க்கரின் கையை தேவன் நொறுக்குவார் என்று சங்கீதக்காரன் கூறுகிறார். ஆனாலும் நொறுக்கியதையே குணமாக்குவார் நம் தேவன். துன்மார்க்கர்களுக்கு தார்மீக பாடத்தின் மூலம் தவறானதை சரி செய்வார். மேலும் காயமுற்றவருக்கு சுகம் அளிப்பார். அவர் தனிநபரை பாதுகாத்து, நீதியுள்ள நியமங்களை அனைவருக்கும் வழங்குவார். அவர் நேர்மை நியாயம், நல்லொழுக்கம் ஆகியவற்றோடு நீதிமான்களை நியாயந்தீர்ப்பார். அவர் சமபங்கு மூலம் உலகில் சமநிலையை மீட்டெடுப்பார். இறுதியில், தீமையை தற்காலிகமாக அனுமதித்த தேவனின் நோக்கத்தை அனைவரும் புரிந்துக்கொண்டு, தேவனை புகழ்வார்கள்.

இறுதியாக, கிறிஸ்துவின் இரக்கமுள்ள கட்டளைகள் எல்லா குறியீட்டுகளையும் தகர்த்தெரிந்து எல்லாவற்றையும் பிரகாசிக்க செய்வார். குற்றம் ஒரு வியாதியாக கருதப்பட்டு, நீதிபதிகளுக்கு பதிலாக மருந்துவர்களும், சிறைச்சாலைகளுக்கு பதிலாக மருந்துவமனைகளும் இயங்கும். சுதந்திரம் ஆரோக்கியத்திற்கு சமமாக கருதப்படும் நொறுங்கிய எலும்புகளுக்கு களிம்புகள் மற்றும் எண்ணெய்கள் பயன்படுத்தப்படும். ஒரு முறை கோபத்துடன் நோக்கப்பட்ட பலவீனங்கள் இப்பொழுது அன்பால் நிரம்பும். தூக்கு மேடைக்கு பதிலாக சிலுவை மரம் உயர்ந்தது ஆனாலும் மிக எளிமையானது. குற்றம் சுமத்தப்பட்டவர்கள் மற்றும் குற்றங்களை செய்தவர்கள் ஆகிய எல்லா மனுக்குலமும், உலக தோற்றத்தின்போது ஏற்படுத்திய தெய்வீக திட்டத்தின் படி செயல்படும் காலத்தை எதிர்நோக்கி இருப்போம். (அப்போஸ்தலர் 3:19-21)

**சங்கிலியாண்டபுரம் வேதமாணவர்கள்,** திருச்சி.
**கைப்பேசி** : 9244611241, 8122224919